Graduate Course

Paper V

Naanjilnaattu Marumakkalvazhi Maanmiyam
நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்
- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

Study Material : 1 (1-5)

பொருளடக்கம்

பாடம்-1 மருமக்கள்வழி மான்மியச் சமுதாயநிலை

பாடம்-2 பாத்திரப் படைப்பு - கதைத்தலைவி

பாடம்-3 கோடேறிக் குடிமுடித்த படலம் - ஒரு பார்வை

பாடம்-4 அங்கதமும் - நகைச்சுவையும்

பாடம்-5 மருமக்கள்வழி மான்மியம் - ஒரு குறுங்காப்பியம்

Editor :

Dr. S. Manickavasagam

SCHOOL OF OPEN LEARNING

UNIVERSITY OF DELHI

5, Cavalry Lane, Delhi-110007

Session 2006-07 (500 Copies)

© School of Open Learning

Published by the Executive Director, School of Open Learning, 5, Cavalry Lane, Delhi-7
Laser Typeset at Megasoft Printers,
Printed at M/s. Shri Avtar Printing Press, Nirankari Colony, Delhi-9 • Tel. 27231410, 27231381

பாடம் - 1

மருமக்கள்வழி மான்மியச் சமுதாயநிலை

முன்னுரை :-

நாஞ்சில் நாட்டில் மருமக்கள் வழித்தாய முறை சில காலம் வழக்கில் இருந்தது. இவ்வழக்கத்தின்படி, ஒரு குடும்பத்தின் சொத்து அக்குடும்பத்திலுள்ள கணவன், மனைவி, குழந்தைகளுக்குச் சேராது. அதற்கு மாறாக குடும்பத் தலைவனது சகோதரியின் மக்களுக்கே, அதாவது குடும்பத் தலைவரின் மருமக்களுக்கே சட்டப்படி செல்லும். இதற்கு மருமக்கள் வழித் தாய முறை அல்லது மருமக்கள்வழி மான்மியம் என்று பெயர்.

குடும்பத் தலைவரின் இயல்பான பாசம் தன் மனைவி, குழந்தைகளிடம் இருக்கும். ஆனால் அந்தப் பாசத்தை வெளிக்காட்டப் பணம் தர முடியாத அவலநிலை இருந்தது. சட்டப்படி இச்சொத்துகள் சகோதரியின் மகனுக்குச் சேரும் என்பதால் அவனிடம் ஆணவம் இருந்தது; அதிகாரம் இருந்தது; பாசம் இல்லை, மனப் பக்குவமும் இல்லை.

இம்முரண்பாடு காரணமாக குடும்பத் தலைவருக்கும், அவரது சகோதரியின் மகனுக்கும் இடையே பனிப்போர் நிலவியது.

நாகாஸ்திரப் படலம் :-

மருமக்கள் வழி மான்மியம் என்னும் கதையின் குடும்பத் தலைவருக்கு ஐந்து மனைவிமார்கள். இம்மனைவியரிடையே எப்போதும் போட்டியும், பொறாமையும் நிலவின. சண்டையும், சச்சரவும் விரிந்து காணப்பட்டன. இத்தகைய குடும்பச் சிக்கலில் வாழ்ந்து வந்த குடும்பத் தலைவரை ஒருநாள் சகோதரியின் மகன் கண்டு வழக்குப் பேச வந்தான்.

சொத்து எல்லாம் சட்டப்படித் தனக்கே உரிமை என்ற ஆணவம் தந்த அதிகாரம் அவன் பேச்சில் அடக்கமின்மையை வெளிப்படுத்தி நின்றது. தனக்குச் சொத்துக் கொடுக்கும் குடும்பத் தலைவர் என்ற மரியாதையும் அவனது பேச்சில் இல்லை. தன் தாயுடன் பிறந்த தாய்மாமா என்ற மன அடக்கமும் இல்லை. வயதில் மூத்தவர் என்ற பணிவும் இல்லை. வழக்குப் பேசும் சொற்களில் கனிவும் இல்லை.

கணக்குக் கேட்கும் மருமகன்

குடும்பத் தலைவர் அவரது குடும்பத்திற்கு எனச் செய்த இயல்பான செலவுகளைக்கூட வீண் செலவுகள் என அவரது சகோதரியின் மகன் பழி போட்டான். பணம் செலவழிக்கும் உரிமை குடும்பத் தலைவருக்கு இல்லை என வாய்த்துடுக்காக வழக்குப் பேசினான்.

அக் குடும்பத்தில் மிகவும் வயதான அவரது ஆத்தாள் இறந்து போனாள். அவளது கருமாதிச் சடங்குக்குக் குடும்பத்தலைவனர் ஆயிரக் கணக்கில் செலவு செய்து விட்டதாக மருமகன் குற்றம் சாட்டினான்.

குடும்பத் தலைவர் தனது புன்செய் நிலத்தில் நின்ற பனைமரங்களை வெட்டி அதை நன்செய் நிலமாகத் திருத்தினார். வெட்டின் பனைகளை விற்றதனால் கிடைத்த பணம், புதுநிலம் திருத்துவதற்குப் போதாதோ என்று மருமகன் காரணவரிடம் காரணம் கேட்டான்.

வீட்டிலிருந்த பெண்களின் திருமணத்திற்குக் குடும்பத் தலைவர் பொறுப்பில்லாமல் செலவழித்தாகக் குற்றம் சாட்டுகிறான். அதற்கு நேர்மாறாகத் தன் வீட்டிலுள்ள தன் சகோதரிகளுக்கு - குடும்பத் தலைவரின் மருமகளுக்கு - ஒரு சிறு காதணிகூடச் செய்து போட்டதில்லை எனக் காரணவரைக் குறை கூறுகிறாள். குடும்பத் தலைவரின் நிலத்தில் விளைந்த பொருள்களால் ஓராண்டுக்குக் குறைந்தது ஆயிரம் ரூபாய் ஆதாயம் வந்திருக்க வேண்டுமே. கடந்த ஏழு ஆண்டுகளாக வந்த மிச்சமெல்லாம் எங்கே போயிற்று. இதைக் கேட்க யாருமில்லை என்று நினைப்பா? கேள்வி எழுப்ப உரிமையில்லை என்ற மனத்தடிப்பா? வயல்களை ஈடுவைத்துக் கடன் வாங்கினீர். யாரைக் கேட்டு ஈடு வைத்தீர்? கடன் வாங்க என்ன காரணம்? எனப் பலவிதமான வினாக் கணைகள் தலைவரின் நெஞ்சைத் துளைத்தன.

ஊரில் சமுதாய வரவு செலவுகளை எழுதுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த கணக்குப் பிள்ளை தனது சுமைகளை எல்லாம் உம் தலையில் வைத்தான். ஊருக்குப் பொதுவான தேவி கோயிலுக்கு இரண்டாயிரம் ரூபாய் தெண்டமாக நன்கொடை கொடுத்தீர்.

சிறு தெய்வங்களின் கோயில்களில் உச்சி வேளையில் நடத்தும் விசேஷ ஆராதனை. இதற்குப் பிச்சிப் பூ முதலிய பூக்களை ஊர் வேலைக்காரர் கொண்டு வருவது வழக்கம். ஆனால் அப்படிக் கொண்டு வராத வைரவன் மகளை நீர் அடித்த காரணத்தால், எத்தனை ரூபாய் தண்டம் கட்ட நேர்ந்தது. இந்த ஊர்வேலைகளை எல்லாம் பார்க்க வேண்டாம் என்று நான் எச்சரித்தேன். நீரோ விடுவேனா என்று அடம்பிடித்தீர்! இதனால் ஆன பண விரயம் எவ்வளவு?

இதுநாள் வரையிலும் எங்கட் காக
எதைநீர் செய்தீர்? எதைநீர் தந்தீர்?
மக்கட் கெல்லாம் வாரிக்கொடுத்தீர்,

என்று திட்டுகிறான்.

ஆசை அங்கே; பூசை இங்கே;

உங்கள் வயலில் விளைந்த விளைச்சலில் இருந்து உழக்கு நெல்லாவது கொண்டு போ எனக் கொடுத்ததுண்டா? அறுவடைக் காலத்தில் ஒருபோகத்தில் விளைந்த பொருளையாவது நாங்கள் கண்ணால் கண்டதுண்டா?

ஒரு நிலத்தை ஈடு வைத்துக் கடன் வாங்கி வந்த பணத்தைச் செலவும் செய்து விட்டீர். இப்படியே ஒவ்வொரு நிலமாக ஈடு வைத்து விடுங்கள். அதற்காக எத்தனை மலரணை ஓலைகள் பினாமி பேரில் எத்தனை எழுத வேண்டுமோ எழுதிக் கொள்ளுங்கள். பேரனுக்குப் பாட்டன் எழுதிக் கொடுக்கும் நன்கொடைப் பிரமாணத்தையும் தாளமாக எழுதிக் கொடுத்து விடுங்கள். நீங்கள் உயிரோடு இருக்கும்போதே உங்கள் சொத்தில் உங்கள் மனைவி மக்களுக்கு உகந்துடைமைப் பிரமாணம் என்னும் பாக உரிமையையும் எழுதி வைத்து விடுங்கள். சட்டப்படி எனக்குச் சொந்தமான இந்த வீட்டில், உங்கள் மக்களை வாழ வைத்துவிடுங்கள். எங்களைத் தெருவிலே நிற்க விட்டுவிடுங்கள்.

மக்களை வீட்டில் வாழ வைத்திடும்;
எங்களைத் தெருவில் இறக்கி விட்டிடும்.
ஆசை அங்கே, அன்பும் அங்கே;
பூசை இங்கே! போசனம் இங்கே!

எனக் கடுமையாகச் சகோதரியின் மகன் சாடுகிறான்.

தனது அம்மாவின் சாவுக்குப்பணம் செலவழிக்கக்கூடக் குடும்பத் தலைவருக்கு உரிமையில்லை! தனது சொந்த புன்செய் நிலத்தை நன்செய் நிலமாக மாற்றுவதில்கூட சகோதரியின் மகன் தலையிடும் நிலை! கோயில் பொதுக் காரியங்களுக்குப் பணம் தருவதில் கூடத் தடை! இங்ஙனம் சகோதரியின் மகன் எல்லாச் செயல்களிலும், எல்லா நிலையிலும் சிறு சிறு நிகழ்ச்சிகளில்கூடத் தலையிட்டுச் சட்டப்படியான தன் உரிமையை நிலைநாட்ட முயல்வதை நம்மால் உணர முடிகிறது.

பஞ்ச கல்யாணிப் பட்டம் :-

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாகக் குடும்பத் தலைவரின் சொந்த, தனிப்பட்ட, யாரும் தலையிட முடியாத செயல்களில்கூட அவன் ஆண்வத்துடன் தலையிட்டுக் கேள்விகள் கேட்கிறான்.

ஆரைக் கேட்டு நீர் ஐந்துகல் யாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர்? ஐயா!
பட்டப் பெயரும் 'பஞ்சகல் யாணிப்
பிள்ளை' யென்று நீர் பெற்று விட்டீரே!

எனக் குடும்பத் தலைவரை அவமானப் படுத்துகிறான். சட்டப்படி இந்தப் பொருள் உமக்கு உரியது இல்லை. அது எனக்குச் சொந்தம். அப்படியிருக்க நீர் எப்படி செலவழிக்கலாம் எனக் கேட்கிறான்.

அன்னியர் பொருளை அபகரிப் பதிலும்,
ஊரார் பொருளை உண்டுவாழ் வதிலும்,
கைதேர்ந் தவர்கள் காரண வர்களே!

என வன்மையாகச் சாடுகிறான். அடுத்தவர் பொருளை அவர் அறியாமல் களவாடும் கள்வர் எனத் திட்டுகிறான்.

கன்னக் கோலும் கையில் படாமல்,
எழுது கோலும் இறகும் எடாமல்,
இரவும் பகலும் இஷ்டம் போலத்
திருடும் திறம் படைத்தவர்

என அவரைக் கேவலப் படுத்துகிறான். தெரியாமல் திருடும் கள்ளரோடும், தெரிந்து திருடும் கணக்கரோடும் குடும்பத் தலைவர் இங்கு ஒப்பிடப்படுகிறார்.

கள்ளன் கஜானாக் காவலன் ஆனால்
கொள்ளை யடிப்பில் குறைவைப் பானோ?

எனக் குற்றம் சாட்டுகிறான். குடும்பத் தலைவர் தனது பொருளை, அவரே செலவழிப்பது கூடச் சகோதரியின் மகனுக்குக் குற்றமாகப் படுகிறது; கொள்ளை யடிப்பதாகத் தெரிகிறது.

சமுதாயத்தின் அவலநிலை:-

மூருமக்கள் வழித்தாய முறையினால் நாஞ்சில் நாட்டில் செல்வம் எல்லாம் சிதைகிறது. வாழ்க்கையில் ஒரு பிடிப்போ, எதிர்பார்ப்போ, நம்பிக்கையோ இல்லாத காரணத்தால் இளைஞர்கள் சோம்பித் திரிகின்றனர். மங்கையர்கள் கண்ணீர் வடிக்கின்றனர். குடும்பம் நிலைகுலைந்து காணப்படுகிறது. வழக்குகள் மேலும்மேலும் வளர்ந்து நிற்கின்றன. நாஞ்சில் நாட்டிற்கு ஒரு நாசகாரணம், மருமக்கள் வழித் தாய முறையே எனக் கதைத் தலைவியின் வாயிலாகக் கவிஞர் தேசிய விநாயகம் பிள்ளை கடுமையாகச் சாடுகிறார்.

குடும்பத் தலைவர் அவரது சொத்துக்கு உரிமையானவர் இல்லை. அதைக் காவல் காக்கும் வெறும் காவல்காரர்தான் என்ற நிலையால் காரணவர் என அழைக்கப்படும் அவர், சட்ட ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும், மன ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்.

காரணவரைப் பாதித்திருக்கும் இந்நோய் கொடிய நோயாகும். கண்டூரம் எனப்படும் கடுமையான மருந்தை எச்சரிக்கையுடனும், முழுக்கவனத்துடனும் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மருமக்கள் தாய வழி என்னும் இந்நோய் குணமாகாது.

காரணத் தீனம் கடிய தீனம்:
கண்டூ ரத்தில் மருந்து கருத்தாய்க்
கொடுத்தா லன்றிக் குணமா காது

தீனம் என்றால் நோய் என்று பொருள்படும். கடிய தீனம் என்றால் நீக்க முடியாத நோய் என்று பொருள்படும். சமுதாயத்தைச் சீரழித்து நிற்கும் மருமக்கள் வழித்தாய முறையின்மீது கவிஞர்க்குரிய கடும்கோபம் நமக்குப் புலப்படுகிறது.

தமிழில் சித்த வைத்திய ஆராய்ச்சிகளைச் செய்த பல சித்தர்களைப் பற்றிக் கவிஞர் இங்குப் பேசுகிறார்.

போகர் - இவரைப் போகநாதர் என்றும் சொல்லுவர். பதினெண் சித்தரில் ஒருவர்; மருத்துவ நூல்கள் பலவற்றின் ஆசிரியர்.

மச்சமுனி - இவரும் பதினெண் சித்தரில் ஒருவரே; மருத்துவ நூல் இயற்றியவர்.

புலிப்பாணியர் - வைத்தியம், ஜாலம் முதலியவை பற்றி நூல்கள் இயற்றிய ஒரு சித்தர்.

கருணாநந்தர், கருவூர்த்தேவர் - இவர்கள் வைத்தியம், மந்திரவாதம் பற்றி நூல்கள் இயற்றியவர்களாவர்.

அகத்தியர் - இவர் ஒரு முனிவர். தமிழின் முதல் இலக்கண நூல் இவர் செய்தது என்பர். இவர் பெயரால் பல வைத்திய நூல்களும் உள்ளன.

மேற்குறித்த புகழ்பெற்ற சித்தர்களாலும் பேசப்படாத நோய் இந்நோய். இந்நோய் தீர அவர்கள் குளிகையோ, லேகியமோ, சூரணமோ சொன்னதில்லை. வடமொழியிலுள்ள வைத்திய சாஸ்திரமான அஷ்டாங்கிருதம் என்ற நூலை எழுதிய வைத்தியர்கூட இந்நோய்க்கு மருந்து கூறியதில்லை. எய்ட்ஸ் பிணிகளைக் காட்டிலும் பொல்லாப் பிணி இதுவாகும். மனிதரை மட்டுமல்லாமல் நாட்டையே செல்லரிக்கும் பிணி இது. இதனால் வருந்தாத மனிதரில்லை. சகோதரிகளோடு பிறவாத சில மனிதர்கள் வேண்டுமானால் வருந்தாமல் இருக்கலாம்.

மலையாளத்தில் புகழ்பெற்று விளங்கும் வயக்கரை மூசு, வைத்திய ரத்தினம் ஆகிய மருத்துவர்களும் "இந்நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க எங்களால் ஆகாது' என்று கையை விரித்து விட்டனர்.

ஆங்கில மருத்துவர்களும் இந்நோய்க்கு மருந்து இருப்பதாக யாரும் கூறக்காணோம். இந்நோய்போல மக்களின் மனத்தில் வெறுப்பை விதைக்கும் நோய் உலகம் முழுவதும் வேறு ஒன்றும் இல்லை என்று கூறப்படுமானால் இப்பிணியின் கொடுமையைப் பேசவும் வேண்டுமோ?

ஈக்களும் தேடி யீட்டிய தேன்போல்
பலரும் பலநாள் பாடு பட்டுக்
கூட்டி வைத்த குடும்ப முதலினைத்
தீவம் கொண்டவர் தின்றுவ ரேல் உடன்
ஆனைதின்ற விளாம்பழ மாம்; அதற்கு
ஐய மில்லை; அறியார் யாரே

தேனீ ஒவ்வொரு துளியாகத் தேனைச் சேகரிக்கிறது. ஆயிரக்கணக்கான தேனீக்கள் ஆண்டுக் கணக்கில் சேகரித்த தேனை அந்தச் சேமிப்போடு தொடர்பில்லாத ஒருவன் வந்து ஒரே நாளில் எடுத்துச் சென்றுவிடுகிறான். அதுபோலக் காரணமே எனப்படும் குடும்பத் தலைவரும், அவருடைய மனைவி மக்களும் அல்லும் பகலும் பாடுபட்டுத் தேடி வைத்த குடும்ப முதலை, அச்சேமிப்புடன் சிறிதும் தொடர்பில்லாத சகோதரியின் மகன் ஒரே நாளில் கருட்டிக் கொண்டு சென்றுவிடுகிறான். இச்சட்டம் குடும்பத்தில் விதைக்கும் இந்நோய்க்கு அக்குடும்பமே ஆட்படுகிறது.

ஆனைக்கு விளாம்பழ நோய் என ஒரு நோய் வருவதுண்டு. அந்நோய் யானை அறியாமலேயே அதனைச் சிறுகச் சிறுகத் தின்று கொன்றுவிடும். இங்ஙனம் ஆனையைத் தின்ற விளாம்பழ நோய்போல முழுக் குடும்பத்தையும், முழு ஊரையும் மருமக்கள் வழித் தாய முறை என்ற இந்நோய் சிறுகச் சிறுகத் தின்று கொன்றுவிடும். இதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் யாரும் அறிவதில்லை. யாரும் உணர்வதில்லை. இந்நோயைத் தீர்க்க எந்த முயற்சியும் எடுப்பதில்லை.

குடும்பத் தலைவரது சகோதரியின் மகன் அவருக்குச் சவால் விட்டுச் சென்றான்.

பாரும், பாரும், பத்திர மாமிரும்?
குடும்ப தோஷி என்றுமைக் கொண்டு
கோர்ட்டில் கேஸு கொடுப்பேன் பாரும்.

என அவன் அச்சுறுத்துகிறான்.

குடும்ப தோஷி என்றால் குடும்ப காரியங்களுக்குத் துரோகம் செய்தவர் என்று பொருள். சட்டத்தை அவமரியாதை செய்து, அதற்குத் துரோகம் செய்தவர் எனக் குற்றம் காட்டி, வழக்காடப் போவதாகச் சகோதரியின் மகன் எச்சரிக்கையிடுகிறான்.

உமக்குச் சம்மன் அனுப்புவேன். சாட்சிகளைக் கொண்டு வழக்கு நடத்துவேன். நீர் நீதிமன்றம் வர மறுத்தால் வாரண்டு அனுப்புவேன். எங்களது வழக்கறிஞர் குறுக்குமறுக்காய்க் கேள்விகள் கேட்பார். உம்மைச் சந்திக்கு இழுத்துக் கேவலப் படுத்தவில்லையென்றால் நான் வீரப்பத்திரப் பிள்ளையின் மகன் இல்லை எனச் சவால் இடுகிறான்.

கருடாஸ்திரப் படலம்:-

மருமகன் நாகம் எனச் சீறிநின்றான்; கணக்கில் அடங்காத கேள்விகள் கேட்டு நின்றான். காரணவர் கருடனாக மாறி நாகத்தைக் கவ்வ வேண்டிய குடும்பத் தலைவர். மனம் ஒடிந்து அவன் கேட்ட வினாக்களுக்குப் பணிவாகப் பதில் கூறுகிறார். சட்டம் அவனுக்குத் தந்த துணிவு, சமுதாயம் தனக்குத் தந்த அவல நிலை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர் பதிலைப் பணிவாகவும், பவ்வியமாகவும், விரக்தியோடும், வேதனையோடும் முன் வைக்கிறார். மருமகன் மீது கோபம் கொள்ளாமல் காலத்தின் இயல்பு இது என மனம் நொந்து நிற்கிறார்.

உன்னைச் சொல்ல ஒருகுறை யில்லை.
கலியன் முற்றின காலம் இது அல்லவோ?

குடும்பத் தலைவர் வகைவகையாக, வரிசைவரிசையாகத் தனக்கு ஏற்பட்ட செலவு வகைகளைப் பட்டியல் இட்டுக் காட்டுகிறார்.

விளைச்சல் இல்லாமை:-

என் மாமனார் இறந்து எட்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்த எட்டு ஆண்டுகளில் நான் பட்ட துயரத்தை யார் அறிவார். நான்கு ஆண்டுகளாக நல்ல விளைச்சல் இல்லை. ஆனால் வயலுக்கான செலவுகளோ அதிகம். அடைமழையால் ஓர் ஆண்டு விளைச்சல் ஏல்லாம் அழிந்து போனது. அடுத்த ஆண்டு வெயிலின் கொடுமையால் பயிர்கள் எல்லாம் வெந்து போயின. சென்ற ஆண்டு பெயருக்கு விளைந்தது. போதுமான பொலி (விளைச்சல்) காணவில்லை. கொக்கு நோய் என்னும் கொடிய நோய் பயிர்களில் பரவி எங்கள் குடியைக் கெடுத்தது. இந்த ஆண்டு ஆவணி, புரட்டாசி மாதங்களில் விளையும் கார்கால பயிரும் விளையவில்லை. மாசி, பங்குனி மாதங்களில் விளையும் நெல்லும் கரிந்து போயிற்று.

'அடைமழை யாலே அழிந்ததோர் வருஷம்;
வெயிலின் கொடுமையால் வெந்ததோர் வருஷம்;'

மழை மிகுந்தாலும், மழையே இவ்வாமல் போனாலும் பாதிக்கப்படுவது விவசாயிகள் தான். காலம் செய்த கோலத்திற்கு எங்களை நொந்து என்ன செய்ய முடியும் என்ற நியாயம் காரணவரின் குரலில் ஒலிக்கிறது.

வீட்டுச் செலவு:-

வயலிலோ விளைச்சல் இல்லை; வீட்டிலோ செலவுகள் தொல்லை. ஐந்து

மனைவியர்களுள் யாரேனும் ஒருத்திக்குப் பிள்ளைப் பேறு இல்லாத ஆண்டே இல்லை. வீட்டில் உள்ளவர்களோ பிறந்தநாள் கொண்டாடாத ஆண்டும் இல்லை.

குடும்பச் செலவுகள் கூறி முடியுமோ?
ஒன்றா? இரண்டா? ஒன்பதா? பத்தா?

கோவில் செலவுகள்:-

ஆல மரத்தின் அடியில் மாடன் என்னும் சிறுதெய்வம் உள்ளது. அந்தச் சிறு தெய்வத்திற்குச் சிறப்புச் செய்ய ஒவ்வொரு முறையும் எவ்வளவு ரூபாய் செலவாகிறது. சிறு தெய்வ விழாவின்போது வில்லுப்பாட்டுப் பாடும் வீரம்மைக்கு நான்கு சேலைகளும், நாற்பது பாய்களும் நான் கொடுக்கும்போது நீயும் கூட இருந்தாய்.

நான் ஆடம்பரமாக உடை உடுத்துவதில்லை. அதிக பட்சம் இடுப்பில் கட்டப்படுகின்ற சல்லடம் என்னும் கட்சை மட்டும்தான். அதைத் தைக்க தையற்கூலி மட்டும் ஐம்பது ரூபாய் ஆனதே.

எதற்கும் தகுதியில்லாத, வேலையில்லாத, போக்கற்ற வெறும் பயல்களைப்போல, ஏதாவது ஒரு துணியை இடுப்பில் சுற்றிக் கொண்டு தெய்வத்தின் முன்னால் நான் ஆட முடியுமா?

நான் இந்த ஊருக்குக் காரணவன். எனக்குரிய மரியாதையை நான் காப்பாற்றித்தானே ஆக வேண்டும்.

கோவிலுக்கு முன்னால் வெட்டப்பட்ட கடாவுக்கு இருபது ரூபாய் தட்சணை எண்ணி வைத்தேனே. அந்த விழாவின் போது நீ, உன் அப்பா, உன் உடன் பிறப்புகள் எல்லோரும் வந்து விருந்து உண்டீர்கள்.

விருந்து போதாதென்று விடை பெற்றுச் செல்லும்போது, ஆட்டிறைச்சி வாங்கிக் கொடியில் கட்டிக் காயவைத்துக் கையோடு கொடுத்துவிட்டதை மறந்து போயினாயோ? கோவிலுக்குச் செய்ய வேண்டிய செலவுகளையும், விழாவின்போது வரும் விருந்தினருக்குச் செய்ய வேண்டிய செலவுகளையும் செய்யாதிருக்க முடியுமா? மாடனை வணங்காது இருக்க முடியுமா? கடன் பட்டாயினும் காலகாலத்தில் செய்ய வேண்டிய செலவுகள்தானே இவை. ஓராண்டு கோயிலுக்குக் கொடை கொடுக்க முடியாமல் முடங்கிப் போனால் குடும்ப தோஷம் என்னும் குறை வந்த விடாதோ?

கருமாந்திரச் செலவுகள்:-

என்னைப் பெற்ற ஆத்தாள் இறந்து போனாள். அதனால் ஆகிய கருமாந்திரச் செலவுகள் கொஞ்சமா? ஆயிரம் பணம் மட்டுமா? ஆறாயிரம் பணம் ஆகவில்லையா? பந்தல் செலவு, பாடைச் செலவு, கொட்டுமேளச் செலவு, பாட்டுப்பாடச் செலவு, நான்கு தெருவிலும் நடந்து செல்லும் பொருட்டு வழியில் விரிக்கும் நடைமாற்று ஆடைச் செலவு எனச் செலவு வகைகள் கொஞ்சமா?

வயதானவர்கள் இறந்தபோது பறை அடிப்போர் சிறு கோல்களைக் கையில் வைத்துக் கொண்டு பிரேதத்தின் முன்னே ஆடிப்பாடிக் கோலாட்டம் அடித்த கோலாட்டச் செலவு,

பாடையின் முன்னால் வேடம் போட்டுக் கூத்தாடிய செலவு, கழைகளைக் கையில் ஏந்தி அவற்றை அசைத்துப் பாடி ஆடுகிற சிலம்பாட்டச் செலவு, முரசு வாத்தியச் செலவு எனச் செலவழித்த செலவுகள் கணக்கில் அடங்குமா?

என் தாய் இறந்தபோது ஆயிரம் தோசையை அடுக்கடுக்காகச் சுட்டு 'வைத்து அழுதல்' என்னும் சடங்கைச் செய்ய வில்லையா?

அடுத்த நாள் நடக்கும் நீறு ஆற்றும் சடங்கிற்கு பத்துச் சாக்குப் பயறு அவித்து அனைவருக்கும் பங்கு வைக்கவில்லையா? இரண்டாயிரம் தேங்காய் வாங்கி, வீட்டுக்குவீடு அதைப் பங்கு வைக்கவில்லையா?

பதினாறாம் நாள் நடைபெறும் கருமாதிச் செலவிற்குப் பார்ப்பனரை அழைத்துக் காரியம் நடத்தவில்லையா? அக்கருமாதியின் போது

பட்டுக் குடையும் பாத ரட்சையும்
கட்டிலும் மெத்தையும் கடுக்கன்மோ திரமும்
பாயச பாத்திரம் பஞ்சபாத் திரமும்
அழுது படியும் அளிக்க வில்லையா?

இவை போக, இறந்துபோன ஆத்மா சாந்தி அடைவதற்காக

'பசுவும் கன்றும், பத்து மரக்கால்
நிலமும் தானமும் நெறிதவ றாமல்
செய்யவில்லையா'

நாள்தோறும் செய்த வெற்றிலைச் செலவுகள் உனக்குத் தெரியாததா? வீட்டின் ஒட்டுத் திண்ணையில் பத்திரகாளியின் பலிபீடத்திற்குமுன் கூடும் கூட்டத்தைப்போலத் தினமும் விருந்தினர் கூட்டம் வந்து போனது நீ அறியாத ஒன்றா?

வீட்டில் ஒருவர் மரணமடைந்தால் இறந்தவருடைய பந்துக்களில் சில பெண்கள் பதினாறு நாளும் பட்டினி கிடப்பார்கள். இந்தப் பட்டினிக் காலத்தில் சோற்றைத்தவிர மற்றெல்லாப் பண்டங்களையும் உபயோகிப்பதில் ஆட்சேபனையில்லை. ஆதலால், சில பெண்கள், பண்டம் பலகாரம் ஏராளமாகத் தின்னலாமென்ற எண்ணத்தோடு பட்டினி கிடப்பதுண்டு. அவர்களைப் பதினாறு நாளும் கழிந்த பிறகு பார்த்தால், அவர்களுடைய உடம்பு பட்டினியால் மெலிந்திராது. முன்னையிற் பார்க்கிலும் பருமனாக இருக்கும். பெயரளவில்தான் பட்டினி. ஆகாரம் மற்ற காலங்களைப் பார்க்கிலும் அதிகமாயிருக்கும். இந்த முறையில் பட்டினி கிடந்த பத்துப் பெண்கள் பருத்திப் பொதிபோல் பருத்துப் போனார்கள். இவர்கள் எத்தனை தோசைக்கும், இட்லிக்கும் எமனாக மாறினார்கள். இங்ஙனம் ஆன கருமாந்திரச் செலவுகளை எண்ணிச் சொன்னால் எண்ணிக்கையில் அடங்குமா? எடுத்துச் சொன்னால் எழுதி முடியுமா?

கட்டளைச் செலவுகள்:-

கோவிலுக்கு ஒரு விசேஷம் குறித்து ஏற்படுத்தப்பட்ட தருமம் கட்டளை எனப்படும். சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ஆகியவை தமிழ்நாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற தேவாலயங்கள். இங்கெல்லாம் ஆண்டுதோறும் தருமத்தின் பொருட்டுக் கொடுத்துதவ எண்பது

கோட்டை நெல் கொடுப்பது காரணவரின் குடும்பத்திற்கு வழக்கம். என்பது கோட்டை நெல்லில் ஓர் உழக்குக் குறைந்து தாளம் செய்தாலும் தெய்வக் குற்றம் வரும் என்பது காரணவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இங்ஙனம், தான் செய்த கட்டளைச் செலவுகளைக் காரணவர் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

மூட நம்பிக்கைச் செலவுகள்:-

பெரும்பழஞ்சி என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நான்குனேரியைச் சேர்ந்த ஒரு சிற்றூர். அதில் ஒரு பிராமணக் குடும்பத்திலுள்ளவர்கள் பெயர் பெற்ற மந்திர வாதிகளாயிருந்தார்கள். அவர்கள் இந்திர ஜாலம், மந்திர ஜாலம், ம்கேந்திர ஜாலம், கூடுவிட்டுக் கூடுபாய்தல், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம் முதலியவற்றில் மிகவும் கைதேர்ந்தவர்கள். இவர்கள் ஆண்டுதோறும் இப்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு வந்து ஜால வித்தைகள் செய்வர். அப்போது பணம் கொடுக்கவில்லையானால், தங்களுடைய ஜால வித்தைகளினால் மக்களுக்குப் பலவித தீங்குகள் செய்துவிடுவதாக அச்சுறுத்துவார்கள். அவர்கள் பணம் கொடுக்காதவர்களுக்கு வயிற்று வலியை உண்டாக்கி விடுவார்கள் என்றும், குறளியை ஏவி விட்டுக் கூரை, வைக்கோற்போர் முதலியவற்றில் தீயைக் கொளுத்தி விடுவார்கள் என்றும் ஊர்மக்கள் அஞ்சினார்கள். ஆதலின், கட்டாயமாகக் கொடுத்துத் தீர வேண்டிய தண்டம் ஆகவும், மனமில்லாமல் நிர்ப்பந்தத்திற்காகக் கொடுக்கும் தானம் ஆகவும் பணம் கொடுப்பது வழக்கம். இக்குடும்பத் தலைவரும் ஊர்மக்களைப் போன்று அச்சம் கொண்டு, ஆண்டு தோறும் அந்த ஐயர்களுக்குப் பணம் தந்து வந்தார். இல்லாவிட்டால்,

'அவர், வயிற் றறுவுத வைத்திடு வாரே!
குறளியை ஏவிக் கொன்றிடு வாரே!'

என அஞ்சித் தட்சணை கொடுத்ததால் ஆன செலவுகள் ஆயிரம்! ஆயிரம்!

கையூட்டுச் (லஞ்சம்) செலவுகள்:-

நீர்ப்பாசன இலாகாவில் சம்பளம் பெறும் வேலைக்காரனுக்குச் 'சானல் வாச்சர்' என்று பெயர். அங்ஙனம் பணிபுரிந்த சந்தனத் தேவர்க்கு உபசாரம் செய்த வகையில் ஆறு ரூபாய் ஆனது.

காட்டிலாகாவில் குறைந்த சம்பளத்தில் வேலை பார்க்கும் ஊழியர் மாறுதலாகிப் போகிறார். தகுதி இல்லாத உத்தியோகம் பார்ப்பவர் என்றாலும் அவரை வெறுங்கையோடு அனுப்ப முடியுமா?

விவசாயச் செலவுகள் :-

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது என்பது உனக்குத் தெரியாதா? மிஞ்சியது உழவுக் கம்பும், ஏர் மட்டும்தான் என்பது நீ அறியாததா?

'உழவன் மீதி உழவுக் கம்பென
உலகம் சொல்வதும் உண்மை அல்லவோ?'

படிப்புச் செலவுகள்:-

உன்னை நான்தான் படிக்க வைத்தேன். ஏழு ஆண்டுகள் ஆங்கிலம் படித்தாயே!

ஏ. பி. ஸி. டி. எழுதத் தெரியுமா?
எத்தனை பணத்தை வாரி யெறிந்தேன்.
எல்லாம் பாழுக் கிறைத்த நீர்போல்
ஆக்கி விட்டாயே, அவலட்சணமே

சாஸ்தாங் கோவில் சாந்தி அய்யரின் மகன் உன்னைப் போலவே படித்தான். ஆனால், பி.ஏ. பட்டம் பெற்று இப்போது நல்ல பதவியில் இருக்கிறான். நீயும் ஒழுங்காகப் படித்திருந்தால் பட்டம் பெற்றிருப்பாய்.

தின்பண்டச் செலவுகள்:-

கையில் காசு இல்லாவிட்டாலும் எந்தப் பொருளையாவது அடகுவைத்து நீங்கள் வாங்கித் தின்ற தின்பண்டத்திற்கு ஆன செலவுகளை எண்ணி முடியுமோ?

ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்,
போளிக் காகப் புத்தகம் பணயம்,
சீடைக் காகச் சிலேட்டுப் பணயம்,
முறுக்குக் காக மோதிரம் பணயம்,
காப்பிக் காகக் கடுக்கன் பணயம்,

இங்ஙனம் எல்லாப் பொருள்களையும் பணயம் வைத்துத் தின்ற வயிற்றுக் கள்வன் நீ.

முள் முருங்கை மரத்தின் அடிமரம் பார்வைக்குப் பெரிதாக இருக்கும். ஆனால் மற்ற மரங்களைப்போல உறுதியாக இருக்காது; பயன்படுத்தவும் முடியாது. அந்த முள்முருங்கைத் தடிபோல நெட்டை மரமாய் வளர்ந்துவிட்ட முட்டாள் நீ! நீ பணயம் வைத்த பண்டங்கள் அனைத்தையும் எத்தனை முறை நான் பணம்கட்டி மீட்டி எடுத்து உன்னிடம் தந்துள்ளேன்.

நீதி மன்றச் செலவுகள்:-

என் மாமனாருக்கு கடன் கொடுத்தவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். ஆறு ஆண்டுகள் உயர் நீதிமன்றம் வரை வழக்கு நடந்தது. வழக்குப் போட்ட அத்தனை பேரையும் பஞ்சாய்ப் பறக்கடித்தேன். என்னைப் போய் 'குடும்ப தோஷி' எனக் குறைகூறி நிற்கிறாய்.

'உகந்துடைமைப் பணம்':-

என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சேரவேண்டிய 'உகந்துடைமைப் பணம்' என்ற மிகச் சிறிய தொகையைக்கூட அவர்களுக்குச் சேரவிடாமல் தடுக்க நீயும், உன் அப்பனும் என்ன பாடெல்லாம் பட்டீர்கள். குசும்பன் சாமி, குண்டுனிச் சுப்பு ஆகிய தரம் தாழ்ந்த மனிதர்களிடம் எல்லாம் ஆலோசனை கேட்டீர்கள்.

நீயும் உன் அப்பனும் உங்களுக்குத் தெரிந்த வித்தைகளை எல்லாம் செய்து பாருங்கள். உன் அப்பனை நீதிமன்றம் சென்று வழக்குத் தொடுக்கச் சொல்.

மருமகனுக்குக் கட்டிய கப்பங்கள்:-

உங்களுக்காக உணவும். உறக்கமும் இல்லாமல் உழைத்தேன். காடும் மேடும் கரையும் சுற்றினேன். விளையும் விளைவெலாம் வீசித் தூற்றினேன். விளைந்த நெல்லில் ஈரமும். பதமும் இல்லாமல் அகற்றினேன். விளைந்த விளைச்சலைச் சாக்கில் அளந்து. தலையில் எடுத்து மாதா மாதம் கப்பம் கட்டுவதுபோலக் கட்டினேன்.

அக்கப்பம் கட்ட மருமகன் ராஜாவாகிய நீ திருவுளம் கொண்டு எழுந்தருளும் வரை உன் கொட்டாரத்தில் காத்துக் கிடந்தேன். நீ குறட்டைச் சுருதியோடு கும்பகர்ணனைத் தோற்கடித்துவிட எண்ணித் தூங்கிக் கொண்டிருக்கும் காலமாக இருந்தால் உன் திருப்பள்ளி எழுச்சிக்காகக் காத்துக் கிடந்தேன்.

பதினைந்து நாயும் மூன்று புலியும் என்ற விளையாட்டு நீ விளையாடிக் கொண்டிருந்தாய். பொழுதை வீணே போக்கும் உன் உயிர் நண்பர்களுடன் புகைப் பிடிக்கும் நேரமாக இருந்தால் விலகி நிற்பேன்.

புகையிலையை வாயில் போட்டு. பொடியை மூக்கில் ஏற்றி. வெட்டும் புலி ஆட்டத்தில் 'இறக்கு. வெட்டு' எனக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தாய். 'இடையிடையே சண்டையும் போட்டுக் கொண்டிருந்தால் பொறுமையுடன் காத்துக்கொண்டு இருப்பேன்.

மகாராஜா போல நீ அமர்ந்து கொண்டு. பக்க மந்திரிகள் பலரோடு சீட்டு விளையாடும் காலமாக இருந்தால் இடம்மாறி ஒதுங்கி நிற்பேன். உங்கள் தாயப்போரை நான் தடை செய்ததில்லை.

உனது மனக்குறிப்பை அறிந்து இடம். பொருள். ஏவல் தெரிந்து

"அரசே! பெருந்திரு அமுதுக்காக
இம்மா தத்துக்கு ஏற்படும் நெல்லிதை
அளந்து களஞ்சியத்து ஆக்கிடக் கற்பனை
பாவித் தருள்வீர்" என்று பணிந்து

நின்று கப்பம் கட்டுவதுபோலக் கட்டி வந்துள்ளேன்.

இதைச் சட்டப்படி நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பைப்பெற்று அதிகாரத்துடன் பெற விரும்பினால் உடனே நீதிமன்றத்திற்குச் செல். உங்களுக்காக இதுவரை நான் உழைத்ததை இந்த ஊரே அறியும். என் மனைவிக்கும். பிள்ளைகளுக்கும் இதுவரை நான் எதனைச் செய்தேன். உண்ண உணவு கொடுத்தேன். உடுக்கத் துணி தந்தேன். இதனால் நீ என்ன குறைந்து போனாய்.

அடிமையைப்போல அத்தனை வேலைகளையும் நான் உனக்குச் செய்தது நீ அறியாத ஒன்றா! உன்னை ஒரு முறை நெல் களத்திற்குச் சென்று 'கண்காணி' என்று சொன்னேன். பிறர் களவு செய்து விடாமல் உன்னைக் காவலுக்கு வைத்தேன். ஆனால் ஒரு மணித்துளிப்பொழுதில் அரைக் கோட்டை நெல்லை நீ கடத்தி விட்டாய். இந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்.

காலம் நேரம் பார்க்காமல் களத்து மேட்டில் கடுமையாக நாங்கள் உழைத்து நிற்கிறோம். ஆனால் நீயோ இருபதாம் எண் கடைக்குச் சென்று 'சரக்கை' ஏற்றிக்கொண்டு வந்து நிற்கிறாய். வெளியில் சொன்னால் எவ்வளவு வெட்கம். ஊரும், நாடும் ஒன்று கூடிச் சிரிக்குமே என்றுதான் பேசாமல் இருந்து விட்டேன்.

எங்கள் வீட்டுச் செப்பில் கிடந்த தங்கத் திருப்பூ உனது சின்ன வீட்டுப் பெண்ணின் கொண்டையில் எப்படிக் குடியேறியது.

முடிவுரை:-

சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த மூடநம்பிக்கைகளாலும், சடங்குகளாலும் வாழ்க்கைச் செலவுகள் கையடக்கமின்றி விரிந்து பரந்து காணப்பட்டன. இதனால் கடன் தொல்லைகள் குவிந்து நின்றன. பொறுப்பற்ற இளைஞர்களின், அளவற்ற செலவினங்களால் சிலேட்டும், புத்தகங்களும்கூட அடகு வைக்கப்பட்டன. உழைப்பது ஒரு கூட்டம். உழைப்பைச் சுரண்டி அதிகாரத்துடன் அனுபவிப்பது இன்னொரு கூட்டம். மருக்கள்வழித் தாய முறைச் சட்டத்தின் பாதுகாப்புடன் சமுதாயத்தில் நடந்த கொடுமைகளும், அதனால் நேர்ந்த அவலங்களும் சொல்லி ாளாது.

பாடம் - 2

பாத்திரப் படைப்பு - கதைத் தலைவி

முன்னுரை:-

கேரள மாநிலத்தைச் சார்ந்த திருவிதாங்கூர் அரசின் தென்பகுதியில் உள்ள பகுதி நாஞ்சில் நாடு ஆகும். இந்தியாவின் தென் எல்லை எனக் கருதப்படும் கன்னியாகுமரி, நாஞ்சில் நாட்டைச் சார்ந்ததேயாகும்.

நாஞ்சில் நாட்டில் வாழ்ந்து வந்த வேளாளர் சமூகத்தில் ஒரு விநோதமான வழக்காறு நிலவியது. ஒரு குடும்பத்தலைவனுடைய சொத்து அவனது மனைவியையும். பிள்ளைகளையும் சேராது; மாறாக அக்குடும்பத்தலைவனின் சகோதரியினுடைய பிள்ளைகளையே சேரும்.

தான் பெற்ற மக்களுக்குச் சொத்துச் சேர்ந்தால் அது மக்கள்வழி மான்மியம் எனப்படும். சகோதரியின் பிள்ளைகள். குடும்பத் தலைவனுக்கு மருமக்கள் ஆவர். அவர்களுக்குப் போய்ச் சேரும் சொத்து மருமக்கள்வழி மான்மியம் எனப்படும்.

நாஞ்சில் நாட்டின் இந்த விநோதமான முறையால் ஒரு குடும்பத் தலைவன் தனது சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. குடும்பச் சொத்தை உரிமை கொண்டாட முடியாத குடும்பத் தலைவன் பலதாரமணம் செய்யும் வழக்கமும் அச்சமுதாயத்தில் இருந்தது. ஒரு மனைவியையும், அவள் பெற்ற பிள்ளைகளையும் வைத்துக் காப்பாற்ற முடியாத குடும்பத் தலைவன், பல மனைவியரை மணம்செய்யும் இக்கொடிய வழக்கத்தால் குடும்பத்தில் சோகமே சொத்தாக நிலவியது.

இத்தகைய மருமக்கள்வழி மான்மியத்தைச் சமூக வழக்கமாகக் கொண்ட ஒரு குடும்பத் தலைவனுக்கு ஐந்தாம் மனைவியாக வாழ்க்கைப் பட்டவள்தான் இக்கதையின் தலைவி. அவளது சுய சரிதையே இக்குறுங்காப்பியம்.

இக்கதைத் தலைவி மருமக்கள்வழி மான்மியத்தால் தானும் தன் குடும்பமும் அனுபவித்த எண்ணிமாளாத துயரங்களைச் சுயசரிதையாக எடுத்துரைக்கிறாள்.

கதைத் தலைவியின் குடும்பப் பின்னணி:-

நாஞ்சில் நாட்டில் மிகப் பழைய ஊராக விளங்குவது நல்லூர் எனப்படும் சிற்றூர் ஆகும். அவ்வூர் சுசீந்திரத்தின் அருகில் உள்ளது. அதுவே இக்கதைத் தலைவி பிறந்த ஊர்.

உழவுத் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்ட எளிய வேளாளர் குடும்பத்தில் பிறந்தவள் இத்தலைவி. தந்தை நோயாளி. தாயோ பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்து வந்தவள். வீட்டில் இரண்டு மாடுகளும், ஒரு கலப்பையுமே குடும்பச் சொத்தாகக் காணப்பட்டன.

கதைத் தலைவிக்கு அண்ணன் தம்பிகள் ஐந்து பேர். அவர்கள் அனைவரும் மாண்டுபோயினர். அக்கா தங்கைகள் இல்லை. உற்றார், உறவினர் என்று கூறும்படியாக யாரும்

இல்லை. ஒருதடி நிலம். ஒரு சிறிய குடிசை வீடு இவை அவளது பிறந்த வீட்டின் பரம்பரைச் சொத்து ஆகும்.

புகுந்த வீட்டின் குடும்பப் பின்னணி:-

பிறந்த வீட்டில் துன்பத்தைத்தவிர எதையுமே கண்டறியாத கதைத் தலைவி, தாழையம்பதி என்ற ஊரில் வாழ்ந்த வயதான ஒருவருக்குத் தனது பதினாறாவது வயதில் ஐந்தாம் மனைவியாக வாழ்க்கைப்பட்டாள். கதைத் தலைவியின் கணவனுடைய மூத்த நான்கு மனைவியர் செய்யும் வேலைகள் இவை

தொழுத்துச் சாணம் வழிக்க ஒருத்தி;
தொட்டித் தண்ணீர் சுமக்க ஒருத்தி!
அடுக்களைச் சமையல் ஆக்க ஒருத்தி!
அண்டையில் அகலாது இருக்க ஒருத்தி!

இக்கதைத் தலைவி அக்குடும்பத்தில் அடியெடுத்து வைத்த நாள் முதலாக எல்லா வேலைகளும் இவள் தலைமேல் விழுந்தன. கணவருக்கும், அவருடைய மூத்த நான்கு மனைவியருக்கும் - அத்தனைபேருக்கும் - அடிமையாய் எடுபிடியாய் அவளது வாழ்க்கையின் முதலடியை எடுத்து வைத்தாள். அக்குடும்பத்தில் அவள் பட்ட துயரங்கள் சொல்லி மாளாது.

ஏழையென் துயரம் எல்லாம் கேளும்;
காசினி மீதென் கதைபோல் இல்லை.
சீதையின் கதையும் சிறுகதை யாகும்
பாஞ்சாலியின் கதை பழங்கதை யாகும்
தமியேன் கதைக்குச் சந்திர மதிகதை
உமியாம், தவிடாம், ஊதும் பொடியாம்

பிறந்த வீட்டில் ஏழை; புகுந்த வீட்டில் அடிமை. இராமனைப் பிரிந்த சீதைக்குத் தனிமையும், சோகமும் இருந்தன. இக்கதைத் தலைவிக்கு கணவன் இருந்தும் தனிமை, உலகம் காணாத துயரம். மகாபாரதப் பாஞ்சாலி அனுபவித்த அவமானம் ஒரு நாள் மட்டும். ஆனால் அனைவருக்கும் அடிமையாக இருந்து இவள் அனுபவித்த அவமானங்களோ எண்ணிலடங்கா. அரிச்சந்திரனைப் பிரிந்து சந்திரமதி அனுபவித்த துயரத்தை இக்கதைத் தலைவியின் துயரத்தோடு ஒப்பிட்டு நோக்கினால் சந்திரமதியின் துயரம் உமிபோல் பறந்து போகும்; தவிடு போல் தவிடு பொடியாகிவிடும்.

முதல் நான்கு மனைவியரும் போடும் நாடகங்கள்:-

தனது கணவரின் முதல் மனைவி குழந்தை இல்லாதவள். 'எனக்கு இனி என்ன உள்ளது. ஒரு சிறு வயிற்றுக்குக் கொஞ்சம் கஞ்சியோ, சோறோ போதும். நீங்கள் மக்களைப் பெற்ற மகராசிகள். நீங்கள் உழையுங்கள். உழைத்துப் பொருள் தேடுங்கள்' எனப் பெருமூச்சு விட்டு விட்டு, இருந்த இடத்தைவிட்டு அகலவே மாட்டாள்.

அடுத்தவள் அழு பிள்ளைக்காரி. அடம் அவளது குணம். அவளுக்கு யாரேனும், வேலை சொன்னால் உடனே பிள்ளை அழும் சத்தம் கேட்டுவிடும்.

பிள்ளைக் குணமோ, பிடுங்கிவைப் பாளோ,
என்ன மாயமோ, யானேதும் அறியேன்.

எனக் கதைத் தலைவி இரண்டாம் மனைவியின் ஏமாற்று வேலையை எடுத்துரைப்பாள். மூன்றாவது மனைவி முழுச்சோம்பேறி. மூன்று மாத கர்ப்பினி. வாய்வால் வாந்தியெடுப்பதும், மசக்கையால் மயங்கித் தோன்றுவதும் அவளது வேலைகள். ஏறின கட்டிலை விட்டு இறங்கவே மாட்டாள்.

நான்காவது மனைவி இளமையும், எடுப்பும் உடையவள். கர்வமும் தலைக்கணமும் கொண்டவள்.

இந்திராணியும் அழகில் தனக்கு ஈடில்லை என எண்ணுபவள். அவளது மஞ்சள் பூச்சையும், மயக்கிடும் பேச்சையும், சாந்துப் பொட்டையும், கோல உடையையும், குலுக்கு நடையையும், கொண்டை அழகையும் கண்ட கணவர் அவளை விட்டு அகலவே மாட்டார்.

'தங்கப் பெண்ணே தாராவே!
தட்டான் கண்டால் பொன் என்பான்
தராசிலே வைத்து நிறு என்பான்
எங்கும் போகாமல் இங்கே யேயிரு'

என அவளது கணவர் அவளைத் தங்கச் சிலையைப் போலக் காத்து நிற்பார். அவள் சமையல் செய்ய மாட்டாள். பாத்திரம் விளக்க மாட்டாள். துடைப்பம் ஏந்தி வீட்டைப் பெருக்க மாட்டாள்.

அடுக்களை வந்திடாள் - அரக்குப் பாவையோ?
கரிக்கலம் கையெடாள் - கனக சுந்தரியோ?
வாருகோ லேந்திடாள் - மகராணி மகளோ?
வெயிலில் இறங்கிடாள் - பொன்மலர் இதழோ?

தீயின் வெக்கைபட்டால், மெழுகு பொம்மைப் போல உருகி விடுவாளோ? கரிப்பிடித்த பாத்திரம் கையில் பட்டால் அவளது பொன்மேனி கருகி விடுமோ? பிறரை ஏவும் வேலையை மட்டும் செய்யும் மகாராணியின் மகளோ? துடைப்பம் தொட அஞ்சுவதும் ஏனோ? வெயில் பட்டால் வெம்பிவிட இவள் மலரின் இதழோ? குடத்தை எடுத்துத் தண்ணீர் சுமக்க அஞ்சுகிறாள். பாதை தெரியாத குருடியோ? பயணம் செய்ய முடியாத நொண்டியோ? இவளது வஞ்சனை நிறைந்த தலையணை மந்திரங்களை உண்மையென நம்பி, தனது கணவர் படுத்திய பாட்டைச் சொல்லில் வடிக்க முடியாது. கூறி முடிக்க நாள்கள் போதா? என ஏளனம் கலந்த துயரக் குரலைக் கதைத் தலைவியின் இக்கூற்றில் கேட்க முடிகிறது.

மாமியார் நடத்தும் அரசியல்:-

கதைத் தலைவியின் மாமியார் தனது கணவரின் நான்கு மனைவியரைவிடக் கடுமையானவள். அரங்குக்கு ஒரு பூட்டு; அறைக்கு ஒரு தாழ்ப்பாள். அடாவடித்தனமும், அதிகார மனமும் ஆட்சி நடத்தும். அவள் அளந்து தரும் அரிசியையே சமைக்க வேண்டும். உப்பு, புளி, மிளகு ஆகியவைகூட அவள் தருவதுதான். கடுகைக்கூட எண்ணிக் கணக்கிட்டுத் தருவாள்.

தீபாவளிக்குத்தான் தலைவியின் தலை என்னையை அறியும். சமைக்க மஞ்சள் தராத மாமியார், குளிக்க மஞ்சள் கொடுப்பாள் என எதிர்பார்ப்பது முறையோ? ஒரு நாள்கூட

கஞ்சியோ கூழோ காடி நீரோ
கும்பி யாரக் குடித்ததே யில்லை;
கந்தைத் துணிகள் கட்டினை தல்லால்,
கண்டாங் கிகளைக் கண்டதே யில்லை

ஏழைகள் குடிக்கும் கஞ்சி; பிச்சை எடுப்பவர் குடிக்கும் கூழ்; மாடுகள் குடிக்கும் காடி நீர் இவற்றைக்கூட வயிறு நிறையக் கதைத் தலைவிக்குக் குடிக்கக் கொடுக்காத கொடிய குணம் மாமியாரின் குணம். கிழிந்த, நாட்பட்ட, பழைய துணிகளே இவள் கட்டும் ஆடைகள். புதிய கோடித் துணியை அவள் கண்டதேயில்லை.

இந்திரனுக்கு ஆயிரம் கண்கள். இவளுக்கோ எத்தனை ஆயிரம் கண்கள்! யாரறிவார்? பின்னால் நோக்குவாள் ஆனால் இவளது மனக்கண்கள் முன்னால் உள்ளதை ஆராய்ந்து அளந்து பார்க்கும். முன்னால் நோக்குவாள். ஆனால் அவளது சிந்தனைகள் பின்னால் உள்ளதை ஆராய்ந்து அளந்து நிற்கும். என்று தனது மாமியாரின் குணநலனைக் குறிப்பிடுகிறாள் கதைத்தலைவி.

எறும்பும் காணா இடத்திவள் கண்போம்;
புகையும் நுழையா இடத்திவள் புத்திபோம்;
ஆணாய்ப் பிறந்தால் அகிலம் ஆளுவாள்;

எறும்புகளுக்கு உள்ள கூட்டுக் கண்களை போல (compound eyes) இவள் ஒரே நேரத்தில் பலவற்றைப் பார்க்கும் ஆற்றல் படைத்தவளோ? நுழைவது தெரியாமல் நுழைந்துபோகும் புகையைப்போலக் கற்பனைக்கு எட்டாத இடம் எல்லாம் கண்டு நிற்கும் புத்திக் கூர்மை உடையவளோ? ஆணின் ஆளுமைத் தன்மையும், அகிலம் ஆளும் அரசரின் ஆணவப் பண்பும் ஒருங்கே கொண்டவள். பெண்மையை மறந்தவள்; மென்மையைத் துறந்தவள் எல்லாம் வல்ல இறைவன் இவள் குணம் அறிந்து ஒரு கண்ணைப் பறித்து விட்டான்.

ஊரை முழுவதும் உழக்கால் அளக்கும் ஆற்றல் இவளது ஆற்றல். நாட்டை முழுவதும் நாழியால் அளக்கும் நாட்டம் இவளது நாட்டம் (கண்).

நரியைப் பரியாக-குதிரையாக-மாற்றி அனைவரையும் அதிசயிக்க வைத்த மாணிக்க வாசகரும் இவளைக் கண்டு நாண வேண்டும். இவள் யானையையே பூனையாக மாற்றி விடுவாள், பூனையை யானையைப்போலப் போலித் தோற்றத்தைக் காட்டி மிரட்டுவாள்.

பரஞ்சோதி முனிவர் ஒரு திருவிளையாடற் புராணம் எழுதினார். இவளது திருவிளையாடல்களை எடுத்துரைக்கப் பத்துத் திருவிளையாடற்புராணம் எழுதினாலும் எழுத முடியாது. பரஞ்சோதியே பாடினாலும் பாடி முடிக்க முடியாது. எந்த முதிர்ந்த அறிவும் இல்லாத என்னால் சொல்லி முடிக்க முடியுமோ? யாவருக்கும் உணர்த்த முடியுமோ? என எள்ளலும், சோகமும் இழைந்தோடி நிற்கும் கதைத் தலைவியின் துயரக்குரல் மணியோசைபோல, அலையோசைபோல கட்டுக்குள் அடங்காமல் ஒலிக்கிறது, ஒரு மெட்டுக்குள் இசைக்க முடியாமல் நீண்டு செல்கிறது.

இரக்கமே இல்லாமல் வேலைகளை அடுக்கடுக்காக மாமி ஏவுவாள். இரவும் பார்க்க மாட்டாள்; பகலும் பார்க்க மாட்டாள். கைக் குழந்தைக்குப் பால்கூடக் கொடுக்கவிட மாட்டாள். குழந்தை, பால் குடிப்பதைக்கூட இவளால் தாங்க முடியாது. வேலை செய்து அலுத்துப் போன உடலைத் தரையில் சரிக்க விடமாட்டாள். சலித்துப் போன மனதை ஒய்வில் சாயவிட மாட்டாள். என்றேனும் ஒரு நாள் கதைத் தலைவி தாய் வீடு சென்றால் அங்கும் அவள் வந்து தலைவியின் தாய், தந்தையரை - அவளது சம்மந்தியை அம்மியில் வைத்து அரைத்து விடுவாள். கதைத் தலைவிக்கு இரண்டு குழந்தைகள். அவர்கள் இருவரும் மாமியாருக்கு ஏவல் செய்து செய்து, துரும்பாய் இளைத்துத் தேய்ந்து போயினர்.

ஐந்து மனைவியருடன் கடலாடச் சென்ற கணவரின் அவலநிலை:-

கணவரும் ஐந்து மனைவியரும் ஆடிமாதம் ஒருநாள் அம்மாவாசையன்று கன்னியாகுமரியின் கடல் துறையில் தீர்த்தம் ஆடச் சென்றனர். கணவர் கடலின் கரையில் தர்ப்பணக்கடன் முடித்தார். நீராடச் சென்றவர் நீரில் இரங்காமல் நின்றார். நின்று கொண்டே இருந்தார். காலம் மட்டுமே கழிந்தது. என்ன நினைத்தாரோ? அவரது முகத்தில் தயக்கம் தெரிந்தது. அவருக்கோ இரண்டு கைகள். அவரது மனைவியர் ஐவருக்குமோ பத்துக் கைகள். அவரது தயக்கத்திற்குக் காரணம் புரிந்தது.

'ஏக காலத் திவர்களை எல்லாம்
அங்கை பிடித்துநீர் ஆடு தற்குநான்
பன்னிரு கரத்தப் பரமன் அல்லவே.
இருபது கரத்தவ் இராக்கதன் அல்லவே.
ஆயிரங் கரத்தவ் அண்ணலும் அல்லவே!

ஒரே நேரத்தில் ஐந்து மனைவியரையும் கைபிடித்து நீராட அவர் பன்னிரண்டு கரங்களைக் கொண்ட முருகப் பெருமானும் இல்லை. இருபது கரங்களை உடைய பத்துத் தலை இராவணனும் இல்லை; ஆயிரம் கைகளை உடைய வாணசுரன் என்னும் பெயர் கொண்ட அரக்கனும் இல்லை எனத் தயங்கி நின்றார்.

எனினும் நீராட வேண்டிய நிலையில் அவர் இருந்ததால், அந்த ஐந்து மனைவியரையும் திருமணம் செய்து கொண்ட வரிசைப்படி. முதல் மனைவியோடு முதலிலும், அடுத்தடுத்த மனைவியரோடு வரிசையாக - தனித்தனியாக - கையைப் பிடித்துக் கடலில் நீராடிய கதை பெருங்கதை ஆகும்.

ஐந்து பேரையும் தனித்தனியாக அழைத்துச் சென்று நீண்டநேரம் நீராடியதற்கு, அவருக்குக் கைமேல் கிடைத்த பலன் அறுபது நாட்கள் விடாமல் அடித்த காய்ச்சல்.

துயரம்; துயரம், பிறப்பே துயரம்!

ஐந்து மனைவியரை மணந்த கணவர் அடைந்த துயரம் சொல்லி முடியாது. அவர்களுள் ஒருத்தியாய் அவர்கள் அனைவருக்கும் அடிமையாய் வாழ்க்கையை எதிர்நோக்கிய கதைத் தலைவி அடைந்த துன்பங்கள் எண்ணி முடியாது.

வெட்கம், வெட்கம், மிகவும் வெட்கம்!
துக்கம், துக்கம், பெரிதும் துக்கம்!
மனமும் நாணி வருந்துதே அம்மா!
நாவும் குழறி நடுங்குதே அம்மா!

மனைவியருக்குள் நிகழ்ந்த போட்டி, பொறாமை, அடிபிடி, பனிப்போர் ஆகியவற்றால் வெட்கம் தாளவில்லை. துக்கம் தீரவில்லை. நாணத்திற்கு அளவில்லை. மனக்குமுறலுக்குக் குறைவில்லை.

வீட்டில் ஒருநாள் - தீபாவளியா, திருக்கார்த்திகையா என்று நினைவில்லை. ஏதோ ஒரு விசேசம். பலவகைக் கறிகளுடன் விருந்து. அழைக்கப்பட்ட விருந்தினரும் பலர். கணவர் உண்டு மகிழ்ந்து கையை அலம்ப வெளியே சென்றார். அவரது எச்சில் இலையில் உண்ண ஐந்து மனைவியருக்கிடையேயும் கடும்போட்டி. போட்டி வலுத்தது. இழுபறியும், அடிபிடியும், மோதல்களும் என இப்போட்டி உருமாறியது. கொண்டையைப் பற்றிச் சண்டை செய்தனர். மண்டையும் பிளந்தது. இரத்தமும் வழிந்தது. கதையின் தலைவி விலக்கப் பார்த்தாள். 'ஆகாது இது' எனத் தடுத்துப் பார்த்தாள்; கெஞ்சிப் பார்த்தாள்; காலில் விழுந்து வணங்கிப் பார்த்தாள். ஆனால் யாரும் இணங்கவில்லை.

கூக்குரல் கேட்டுப் பலரும் வந்தனர். ஊர் கூடியது. யார் பேச்சையும் யாரும் கேட்பதாகயில்லை. இறுதியில் வெள்ளையம் பிள்ளை என ஒருவர் வந்தார். அவர் நல்ல மனிதர், நடு நிலையாளர்; நாலும் தெரிந்தவர்; இவர்களை நன்றாய்ப் புரிந்தவர். வழக்கைக் கேட்டுத் தீர்ப்பும் வழங்கினார்.

'ஒவ்வொரு நாளைக் கொவ்வொரு மனைவி
புருஷன் எச்சில் புசித்திட வேண்டும்';

தீபாவளி அல்லது திருக்கார்த்திகை அல்லது வேறு திருநாள் இடையிலே வருமானால் வரிசையாக ஐந்து இலைகள் போட வேண்டும். அத்ல் உனவு படைக்க வேண்டும். அந்த ஐந்து இலையிலும் பரிமாறப்பட்ட உணவைக் கணவன் உண்ண வேண்டும். உண்டு எஞ்சிய உணவையும், பாத்திரங்களில் மீதம் இருக்கும் உணவையும், ஐந்து மனைவியரும் சமபங்கிட்டு வகுத்துப் பிரித்துக் கொள்ள வேண்டும். வழக்காடக் கூடாது; வாதாடக் கூடாது எனத் தீர்ப்பைக் கூறி முடித்தார். கூடியிருந்த அனைவரும் இதுவே சரியான தீர்ப்பு; இதுவே நீதி எனப்பாராட்டினர். கலகத்தின் காரணத்தை அறிந்தவர்கள் எள்ளி நகையாடினர்; எச்சில் இலைக்கா இந்தப் போராட்டம். ச்சீ! ச்சீ! எனக்காறி உமிழ்ந்தனர்.

பகுத்தறிவைப் பற்றிச் சிந்திக்காத இந்த நிகழ்ச்சி ஏளனத்துக்குரியதா? சமுதாயத்தின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறதா? மூட நம்பிக்கைகளை முன் நிறுத்துகிறதா? சமுதாயத்தில் பெண்களுக்குரிய அவல நிலையை எடுத்துரைக்கிறதா? யாரே அறிவார்? இந்த ஏளனம் நிறைந்த துயரத்திற்கு நிலை தாழ்ந்த சமுதாயக் கட்டமைப்பு காரணமா? நீடு நினைந்து சிந்திக்காத பகுத்தறிவு இன்மை காரணமா? யாரே அறிவார்?

துயரம்; துயரம், பிறப்பே துயரம்!

பிறப்பினும் துயரம் பெண்மக ளாதல்.
பெண்மக ளாதலிற் பெரிதும் துயரம்
மருமக் கள்வழி வலையிற் படுதல்:

குடும்பத்தில் நடந்த இந்நிகழ்ச்சிகளும், நிகழ்ச்சி தந்த துயரங்களும், தோன்றக் காரணம், காரணவர் எனப்படும் குடும்பத் தலைவர்க்கு பலர் கழுத்தை நீட்டியது ஆகும். கழுத்தை நீட்டிய துயரத்தைவிட மாமியாரை அனுசரித்து நடக்க வேண்டிய அவலம் பெருந்துயரம். அதைவிடக் கொடுந்துயரம் மாமியாருக்கும் மூத்த மனைவியருக்கும் அடங்கி ஒடுங்கிக் கிடந்து நடக்க வேண்டிய ஆராத் துயரத்துள் அகப்பட்டுச் சீரழியும் ஒருத்தியாக அவர்களின் மத்தியில் வாழுதல்.

காரணத் தீனம் கடிய தீனம்

இக்கொடுந்துயரங்கள் சூழ்ந்த குடும்பத்தில் நடந்த உள்நாட்டுப் போர் இப்படியென்றால், சகோதரியின் மகன் தொடுத்த வெளியில் இருந்து வந்த தாக்குதல் இன்னும் கொடியது. காரணவரின் - கதைத் தலைவியின் கணவரின் சொத்துகளுக்கெல்லாம் சட்டப்படி உரிமை கொண்டாடும் வாய்ப்புள்ள சகோதரியின் மகன், ஒரு நாள் வீட்டிற்கு வந்தான். அவன் பேச்சில் தாயுடன் பிறந்த மாமாவுடன் பேசுகிறோம் என்ற அடக்கமும் இல்லை; வயதில் மூத்தவர் என்ற பணிவும் இல்லை.

மருமக்கள் வழி மான்மியமாக வரும் சொத்துக்கு வாரிசாக வருவது சகோதரியின் பிள்ளை. ஆனால் குடும்பத் தலைவனின் பாசமும், பரிவும், அன்பும், அரவணைப்பும் தன் மனைவியிடமும், பிள்ளைகளிடமும் இருந்தது. சட்டம் தந்த சகோதரியின் மகனது உறவில் ஒரு பற்று இல்லை; ஒரு பிடிப்பு இல்லை. வறட்சியும், வேதனையுமே எஞ்சியிருந்தது. இச்சொத்தையெல்லாம் கன்னக்கோல் இடாமல் திருடுவது எப்படி என்ற சிந்தனை சகோதரியின் மகனுக்கு. அதற்கு மாறாக அவனுக்குத் தெரியாமல் தன் பிள்ளைகளுக்குத் தருவது எப்படி என்ற சிந்தனை குடும்பத் தலைவருக்கு. ஆனால் ஒவ்வொரு சூழலிலும் சகோதரியின் மகனுடைய கையே மேலோங்கி நின்றது.

கள்ளன் கஜானாக் காவலன் ஆனால்,
கொள்ளை யடிப்பில் குறைவைப் பானோ?

சகோதரியின் மகன் சமுதாயப் பார்வையில் ஒரு கள்வன். கன்னக்கோலைக் கையில் எடுக்காமல் சட்டத்தின்படி களவாடும் கள்வன், சட்டமே அவனுக்குத் துணையாக நிற்கும்போது, கஜானா காவலனாகக் கள்ளனை பணியமர்த்தும்போது கொள்ளையடிப்பதில் குறையா வைப்பான். குடும்பத் தலைவரை நோக்கி அவன் கூறிய குற்றச்சாட்டு அவனுக்கே பொருந்தும் என்பதை மறைமுகமாகக் கவிமணி சுட்டுகிறார் எனலாம்.

சகோதரியின் மக்களுக்குச் சொத்து என்ற நோய் நீக்க முடியாத நோய். கொடிய நோய்களுக்குத் தரப்படும் கடுமையான மருந்துகள் - சட்டத் திருத்தங்கள் என்ற மருந்துகள் அதற்குத் தேவை. சட்டத் திருத்தம் என்ற மருந்தைக் கொடுத்தாலன்றி மருமக்கள் வழியே போகும் சொத்து என்ற நோய் குணம் ஆகவே ஆகாது.

காரணத் தீனம் கடிய தீனம்:

கண்டீ ரத்தில் மருந்து கருத்தாய்க்
கொடுத்தா லன்றிக் குணமா காது.

என்னும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் கூற்றின் மூலம் இதனை நன்கு உணர முடிகிறது. மருமக்கள் வழி மான்மியம் என்ற மருமக்கள் தாய வழிமுறை மாறுவதற்குக் கடுமையான அணுகு முறைகள் தேவை எனக் கவிஞர் கருதுகிறார்.

நாகாஸ்திரமும் கருடாஸ்திரமும்:-

சட்டப்படி சொத்துக்கு உரிமை உள்ளவன் என்ற ஆணவமும், மனத்தடிப்பும் கொண்டு, சகோதரியின் மகன் நாகம் போலச் சீறுகிறான்; சொல் அம்புகளை வீசுகிறான். நாகத்தையே கொல்ல வல்லமையுள்ள கருடனாகக் காரணவர் தோன்றிப் பேசுகிறார். ஆனால் எதிர் அம்புகளை வீச வேண்டிய காரணவரின் (தன் கணவரின்) சொற்களில் கூர்மை தென்படவில்லை; பணிவே காணப்படுகிறது. எதிர்த்தாக்குதல் செய்யும் வேகம் இல்லை; விளக்கம் கொடுக்கும் பணிவும் பக்குவமும் காணப்படுகின்றன. சட்டத்திற்கு மதிப்புத் தரும் தன்னுடைய மனநிலையோடு மிகவும் அக்கறையுடன் சகோதரியின் குடும்பத்தைக் காத்து வரும் முறையைச் சான்றுகளுடன் நிறுவும் மனநிலை காணப்படுகிறது. சகோதரியின் குடும்பத்தை முழுவதும் கவனித்து நிற்பதால் தனது குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் அவலநிலையை எடுத்து முன்வைக்கும் நிலையே காணப்படுகிறது.

காடும் மேடும் கரையும் சுற்றி,
ஊணும் உறக்கமும் இன்றி உழைத்து.
விளையும் விளைவெலாம் வீசித் தூற்றி.
ஈரமும் பதரும் இல்லா தகற்றி
சாக்கில் அளந்து தலையில் எடுத்து,
மாதா மாதம் மருமகன் ராஜா
திருவுளங் கொண்டெழுந் தருளி யிருக்கும்
கொட்டா ரத்தில் கொண்டு சென்று.

நின்ற தனது பரிதாப நிலையை மிகவும் பணிவுடனும், பவ்வியமாகவும் எடுத்துரைக்கும் சோகம் காணப்படுகிறது. இதனைக் கண்ட கதைத் தலைவிக்கு ஒருபுறம் ஏளனம் தோன்றுகிறது; மறுபுறம் தன் குடும்ப நிலையை எண்ணி மனதில் சோகத்தின் சாயல் படிகிறது.

சகோதரியின் கணவன் பாடும் துதிப்பாடல் :-

சகோதரியின் மகன், மாமாவின் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகளைத் தன் தந்தையிடம் கூறுகிறான். தந்தையின் கணவர் தன் வீட்டிற்கு வந்து கொடுமையாக வசை பாடிச்செல்கிறார். அவர் பாடிய வசை மொழிகளை

இனிய மொழிகளால்
வாழ்த்தி நல்ல வரங்களும் கொடுத்து

அவர் சென்றதாகக் கதைத் தலைவி ஏளனம் செய்கிறாள். 'சகோதரியின் கணவர்

பொரித்துக் கொட்டிப் போனார், அம்மா!

கணவரோ,
வை வைய வைரக் கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக் கல்லும்
ஆகி யிருந்தனர்.... ....

என்னும் கதைத் தலைவியின் குரலில், தன் கணவரின் தோற்றத்தில் காணப்படும் பரிதாப நிலையும், அடங்கிப் போகும் அவரது ஆழ்ந்த துயரமும் இணைந்து ஒலிக்கின்றன.

கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்
குதித்துக் குடியைக் கெடுத்திட வேண்டாம்

வாய்ப் பேச்சு முற்றி, வழக்குப் பேச்சாக மாறியது. நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கிற்காகவும், வழக்கை நடத்தும் வக்கீல்களுக்காகவும், குமாஸ்தாவுக்காகவும், வழக்குத் தொடுத்தவரும், எதிர்த்து வழக்காடுபவரும் எல்லாவற்றையும் விற்க வேண்டிய அவல நிலை வந்து நின்றது.

கோர்ட்டு வாசல் குடிருப் பாச்சு! ...

ஒட்டுத் திண்ணை உறங்கிட மாச்சு! ....

புளித்த காடியே போதுமென் றாச்சு! ....

மனிதர்கள் குடியிருந்த வீட்டில் கவலைகள் குடியிருந்தன. மருமகன் அடிமை செய்த வீட்டில், துன்பம் அடிமை செய்தது. கவலையும், துன்பமும் கணவரைப் பாயில் படுத்த படுக்கையாகச் செய்துவிட்டன.

எழுந்து நடக்க இயலா தானார்;
நடந்தவர் கீழே கிடந்தா ரம்மா!

ஆணிவேர் காய்ந்து போனால் கிளைகளும் காய்ந்துதானே போகும்.

மருமக் கள்வழி வழங்கும்இந் நாட்டில்
வீடுவீ டாயொரு கோடிருந் தாலும்,
வழக்குகட்கு ஓய்வு வருமோ ஐயா?

எனக் கதைத் தலைவி கொள்ளும் வருத்தம் அவள் குடும்பத்துக்கு மட்டும் உரியது அன்று. மருமக்கள் வழித்தாய முறை வழங்கும் நாஞ்சில் நாடு முழுமைக்கும் உரியது என்பதை நளினமாக ஆனால் வெளிப்படையாக, பணிவாக ஆனால் உறுதியாகக் கவிஞர் உணர்த்தி நிற்றலை நம்மால் உணர முடிகிறது.

மருமக்கள் வழித் தாயமுறை தந்த துயரங்கள்

சோகத்திலும் வறுமையிலும் கிடந்து குடும்பம் தத்தளிக்கத் தொடங்கியது. மூன்று மாதத்திற்கு முன்பு மனைவியர் இருவர் மாண்டு போயினர். நாலாம் மனைவி - அந்த மேனி மினுக்கி - அந்த நாடகக்காரி கணவனோடு மணமுறிவு கொண்டு, பிரிந்து செல்லும் பிரமாணப்பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு விலகிக் கொண்டாள். தன்னைப் போலவே ஒரு கதியும் இல்லாததால், பாவம், ஒருத்தி மட்டும் தன்னுடனேயே இருந்து தத்தளித்தாள். அவளது நான்கு பிள்ளைகளும் நமனைச் சென்று அடைந்தன. பிள்ளைகளைப் பெற்றும் மலடி போன்ற

நிலை வளம் இல்லாத நிலை. அவளைப் பேசா மடந்தை ஆக்கி விட்டது.

வறுமையும், முதுமையும் சேர்ந்து தன் கணவரைப் பாயில் கிடத்தி விட்டன. அன்ன ஆகாரம் குறைந்து விட்டது.

இன்றோ நாளையோ இப்பொழு தோஎன்று
எனக்கும் காலம் இறுகி விட்டது.

என அவரே கூறத் தொடங்கினார்.

சகோதரியின் மகனது வீம்பால் அவனுக்குச் சேர வேண்டிய சொத்துகள் எல்லாம் வழக்கறிஞர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. ஐந்து ஆண்டுகள் நடந்த இவ்வழக்கால் மூண்டு நின்ற சண்டையும், மண்டிக் கிடந்த மனக்கவலைகளும்தான் மிச்சம்.

கையிற் பணமிலை, கடன்தரு வாரிலை,
வழக்கில் முதலைவாரி யெறிந்தேன்;
கிழக்கு மேற்காய்க் கிடக்கின்றேன் இதோ!

எனத் தன் கணவர் புலம்பும் புலம்பலில் கோபம் இல்லை. ஆனால் சோகம் இருந்தது. கணவருக்கு அன்னப்பாலே உணவாயிற்று. நாள்கள் சில கழிந்தன. கணவரின் நிலை உயிர்பிரியும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

கணவர்,
ஏங்கி யழுத எங்களை நோக்கினர்,
வாடி யழுத மக்களை நோக்கினர்,
கடவுளை எண்ணிக் கையை எடுத்தனர்;
கண்ணை மூடினர், கயிலை போய்ச் சேர்ந்தனர்.

முடிவுரை

நாஞ்சில் நாட்டில், சமுதாய வழக்கில் இருந்த மருமக்கள் தாய முறையால் சமுதாயத்திற்கு எந்தப் பயனும் இல்லை என்பது இக்கதைத் தலைவியின் கூற்றிலிருந்து புலனாகும் உண்மையாகும்.

தீராத வழக்குகள், புகைந்து நீடித்த ஜென்மப் பகைகள் ஆகியவையே எஞ்சி நின்றன. அப்பாவைப் பிள்ளையும், பிள்ளையை அப்பாவும் பாசம் இன்றிப் பார்க்குமாறு செய்தது. தனக்கு உரிமைப்பட்ட கணவரின் சொத்துகள் அவருக்கே சொந்தமில்லாமல் போயின. இதனால் அவருக்குச் சொந்தமான மனைவியின் அன்பை அவர் இழந்து நின்றார்; மதிப்பைப் பெறத் தவறி நின்றார். அண்ணன், தம்பி உறவுகள் அறுந்து போயின. எல்லாச் சொத்தும் சகோதரியின் மகனுக்கே உரியது என்ற சிந்தனை, அவனை வஞ்சிக்கும்மாறு மாமனைத் தூண்டியது. வஞ்சிக்க முயன்ற மாமனை, மருமகன் சொற்களால் வதைக்கத் தொடங்கினான். இதனால் குடியே முழுகிப் போயிற்று. அடி தடி சண்டைகள் அகலாமல் இருந்தன. மனிதப் பண்புகள் மாறிப் போயின. மனித மனத்தைப் பேய்க் குணங்கள் பிடித்து ஆட்டி வைத்தன. சமுதாய மக்கள் நடைப் பிணங்களாக அலைந்தனர். வாழ்க்கைப் பாதை இருண்டு காணப்பட்டது. நெருஞ்சி முள்ளில்

நடக்கும் வேதனை தெரிந்தது.

'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஔவையின் பொன்மொழி பொருளற்றுப் போயிற்று. பெற்று வளர்த்த தந்தை தன் பிள்ளைகளுக்குப் பழியைக் கொடுத்தான்; பாவத்தைச் செய்தான். நோயைக் கொடுத்தான்; நொந்து போகச் செய்தான். இவையே அவன் தந்த அழியாப் பொருள்கள். பணம் தர வழியில்லை. நல்ல பண்பை வளர்க்க வாய்ப்பில்லை. பெற்ற தந்தையே

வீடுவிற்று விளைநிலம் விற்று,
ஆடுமாடுகள் அனைத்தும் விற்று,

வாழும் நிலைக்கு மருமக்கள் வழித்தாய முறை காரணமாக இருந்தது. பாசமும், நேசமும் எங்கே தோன்றும்? இதற்காக யாரை நோக முடியும்?

"உற்றார் சதமல, ஊரார் சதமல,
பெண்டிர் சதமல, பிள்ளையும் சதமல,
இப்பே ருலகில் யாரும் சதமல"

என்ற மனநிலையோடுதான் அவன் வாழ முடியும்.

இழந்ததை எண்ணி ஏங்கி ஏங்கி,
அழுபவர் கண்ணீர் ஆறாய்ப் போம்வழி,
ஐயோ, இவ்வழி ஆகாது ஆகாது!
ஆடுகள் மாடுகட்கு ஆகும் இவ்வழி
மனிதர் செல்லும் வழியா யிடுமோ?

என்னும் கதைத் தலைவியின் சோகக் குரலில் மருமக்கள் வழித்தாய முறையால் தோன்றும் துயரங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன.

பாடம் - 3

கோடேறிக் குடிமுடித்த படலம் - ஒரு பார்வை

முன்னுரை:-

நாஞ்சில் நாட்டில் வாழ்ந்து வந்த வேளாளர் சமூகத்தில் ஒரு விநோதமான வழக்காறு நிலவியது. ஒரு குடும்பத் தலைவனுடைய சொத்து அவனது மனைவியையும், பிள்ளைகளையும் சேராது; மாறாக அக்குடும்பத் தலைவனின் சகோதரியினுடைய பிள்ளைகளையே சேரும். இதற்கு மருமக்கள வழித் தாய முறை அல்லது மருமக்கள் வழி மான்மியம் என்று பெயர்.

மருமக்கள் வழித்தாய முறை விளைவித்த பனிப்போர் :

மருமக்கள் வழி மான்மியமாக வரும் சொத்துக்கு வாரிசாக வருவது சகோதரியின் பிள்ளை. ஆனால் குடும்பத் தலைவனின் பாசமும், பரிவும், அன்பும், அரவணைப்பும் தன் மனைவியிடமும், பிள்ளைகளிடமும் இருந்தன. சட்டம் தந்த உரிமை காரணமாகச் சகோதரியின் மகனது மனதில் ஒரு பற்றும் இல்லை; ஒரு பிடிப்பும் இல்லை, வறட்சியும், வேதனையுமே மிஞ்சியிருந்தன. இச் சொத்தையெல்லாம் கன்னக்கோல் இடாமல் திருடுவது எப்படி என்ற சிந்தனை சகோதரியின் மகனுக்கு. அதற்கு மாறாக அவனுக்குத் தெரியாமல் தன் பிள்ளைகளுக்குத் தருவது எப்படி என்ற சிந்தனை குடும்பத் தலைவருக்கு.

இதனால் காரணவரின் - கதைத் தலைவியின் கணவரின் - சொத்துகளுக்கெல்லாம் சட்டப்படி உரிமை கொண்டாடும் வாய்ப்புள்ள சகோதரியின் மகனுக்கும் குடும்பத்தலைவருக்கும் இடையே உரிமைப் போராட்டமும் மௌனப் மனப்போராட்டமும் எப்போதும் நிலவின. இம் முரண்பாடு காரணமாகக் குடும்பத் தலைவருக்கும், அவரது சகோதரியின் மகனுக்கும் இடையே பனிப்போர் நிலவியது.

இப்பனிப்போர் சிலசமயம் வாய்ச்சண்டையாக உருவெடுத்தது; பலமுறை நீதிமன்ற வழக்காக உருமாறியது.

வீரப்பத்திரப் பிள்ளை சட்டத்தின் உதவியை நாடுதல்

குடும்பத் தலைவரது மருமக்களின் தந்தை வீரப்பத்திரப் பிள்ளை ஆவார். மருமக்கள் வழித் தாய முறையின்படி, தங்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய சொத்துக்களுக்காக அவர் நீதிமன்றத்தின படி ஏறினார். குடும்பத் தலைவரின் சகோதரி அதாவது, தனது மனைவி தன் செயல்களைத் தவறாக நினைக்கக் கூடாது என்பதற்காகப் பொய் மூட்டைகளை அளந்து கட்டினார்.

இக்கதையின் தலைவி வீரபத்திரப் பிள்ளையை,

பாதகன், என்
குடியைக் கெடுத்த கொடியசண் டாளன்,
அரக்கன், ஏழரை ஆண்டைச் சனியன்

எனச் சபிக்கும் அளவிற்கு அவரது பிடிவாதமும், ஆணவமும் காரணவரின் குடும்பத்தைச் சீர்குலைத்து நின்றன.

வீரபத்திரப் பிள்ளை மனைவியை அழைத்தார்; தன் மண்டையைக் காட்டினார்; உன் அண்ணன் அடித்த அடிகளைப் பார் என்றார். உயிர் போகாமல் இருந்தது உன் தாலிப் பாக்கியமே என்றார். இறைவனின் அருள்தான் அதற்குக் காரணம் என்றார். அவர் ஏசின ஏச்சுக்கள் எல்லாம் உன் காதில் விழுந்தால் நீ நஞ்சைத் தின்றோ, நாக்கைப் பிடுங்கிக் கொண்டோ, தூக்கிலிட்டுக் கொண்டோ தற்கொலை செய்து கொள்வாய், அல்லது ஆற்றிலோ, குளத்திலோ குதித்து இறந்து போவாய். பறைப் பயலிலும், பள்ளப் பயலிலும் கீழாக எண்ணி எண்ணை இழித்துப் பேசினான். இங்ஙனம் இன்னும்பல சொல்லித் தன் மனைவிக்கு சினத்தை ஊட்டினார்.

நீதி மன்றம் செல்ல முடிவெடுத்தல்:-

யாராவது இரண்டு பேருக்கு இடையே எப்போதும் சண்டையை மூட்டும், அண்டை வீட்டு குசும்பன் சாமியிடமும், குண்டுனிச் சுப்புவிடமும் ஆலோசனை கேட்டார் வீரபத்திரப் பிள்ளை. நல்ல பண்புடைய, உயர்ந்த உள்ளம் உடைய நல்லவரிடம் ஆலோசனை கேட்காமல், ஒருவரைப் பற்றி மற்றொருவருவனிடம் கோள் சொல்லிப் பகை மூட்டுவதையே தொழிலாகக் கொண்ட குசும்பன் சாமியிடம் வீரபத்திரப்பிள்ளை ஆலோசனைக் கேட்டதாகக் கவிஞர் ஏளனம் செய்கிறார்; என்னி நகையாடுகிறார்.

வீரபத்திரப் பிள்ளை நீதிமன்றத்தில் பணிபுரியும் மாடன் பிள்ளையோடு கூடி இரவு முழுவதும் யோசனை கேட்டு, மறுநாள் விடியும் முன்பே அதிகாலையில் விரைவாக எழுந்தார்.

ஓலைப் பிரமாணங்களைக் காப்பாற்றி வைப்பதற்குரிய பெட்டியில் இருந்து ஓலைப் பிரமாணங்களை எடுத்தார்; கடன் சீட்டுக்களை எடுத்தார்; கைச் சீட்டுகளை எடுத்தார். எல்லா ரசீதுகளையும் எடுத்தார். ஏற்கனவே முன்கூட்டித் தயாரித்து வைத்திருந்த பொய்ச்சாத்துக்களை அள்ளினார். எல்லாப் பத்திரங்களையும் அவற்றிற்கான நகல்களையும் எடுத்து மூட்டையாகக் கட்டினார். அதைத் தோளில் வைத்துச் சுமந்து கொண்டு நாகப்பட்டினத்தில் உள்ள நீதிமன்றத்தை நாடிச் சென்றார்.

பாம்பின் வாயில் தேரை குதித்தது:-

வீரபத்திரப் பிள்ளை நியாயத்தில் இருந்து மட்டும் விலகிச் செல்லவில்லை.

நீதிக் கெல்லாம் நிலைய மாகியும்
உண்மைக் கெல்லாம் உறைவிட மாகியும்
கருணைக் கெல்லாம் களஞ்சிய மாகியும்
வாழும் நியாய வாதிகள் தங்கும்
வீதியை முற்ற விலகிச் சென்றார்

கவிஞர் தேசிய விநாயகம் பிள்ளை இந்நூலில் வழக்கறிஞர்களின் செயல்பாடுகளைக் கடுமையாகச் சாடுகிறார்; ஏளனமும் செய்கிறார்.

பொய் வழக்குகளை எடுத்து நடத்தும் வழக்கறிஞரின் அலுவலகம்.

வீண்விவகாரங்கள் விளைநில மாகியும்
பொய்கள் அடைக்கலம் புகுமிட மாகியும்
குதர்க்கம் குடிகொரும் குகையிட மாகியும்

விளங்குவதாக ஏளனம் செய்கிறார். "அண்டப் புரட்டன் வக்கீல் ஆபிஸில், ஆனைப் பொய்யன் குமாஸ்தாவைச்" சந்தித்து வீரபத்திரப்பிள்ளை விளக்குகிறார். இக்காட்சி

புற்றை விட்டுப் புறம்போ காமல்
பட்டினி கிடக்கும் பாம்பின் வாயில்
தேரை குதித்துச் சென்று விழுவது

போலக் கவிஞருக்குப் படுகிறது. வழக்கே கிடைக்காமல், வாடி வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கும் வழக்கறிஞருக்குப் புற்றை விட்டு வெளியே போகாமல் பட்டினி கிடக்கும் பாம்பு உவமையாகக் கூறப்படுகிறது.

மருமக்கள் வழித்தாய முறையால் சட்டத்திற்கும், தருமத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டத்தில் வழக்கறிஞரை நாடி நாஞ்சில் நாட்டினர் செல்கின்றனர். இச்செயல் பாம்பின் வாயில் தேரை குதித்துச் சென்று விழும் செயலோடு ஒப்பிடப் படுகிறது.

இது யாரது வினைப் பயன்?

'நாகம் முன் செய்த நல்வினைப் பயனோ?
தேரை முன் செய்த தீவினைப் பயனோ?'

சாட்சிகளைப் பிடித்தல் :-

வீரபத்திரப் பிள்ளை எடுத்து வந்த ஆதாரங்கள் அனைத்தையும் வழக்கறிஞரிடம் கொடுத்தார். இவர் இவர் சாட்சிகள் என்று பட்டியல் தந்தார். கள்ள பிரான் என்பவரின் மூத்த பிள்ளை முதலாம் சாட்சி.

"பிச்சைக்காரன் பின்னொரு சாகூி;
இருக ணில்லா இருளப் பன்மகன்
முத்தொளி மறவன் மூன்றாம் சாகூி;"

இன்னும் இரண்டு சாட்சிகள், நல்ல பிள்ளை நாலாம் சாட்சி, பொய் சொல்லாத மெய்யன்புத்திரன் மாறியாடும் பெருமாள் ஐந்தாவது சாட்சி.

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை சாட்சிகளின் பெயரை இங்குக் காரணப் பெயர் போலக் காட்ட முயல்கிறார். கள்ள பிரான் - கள்ளத் தனம் மட்டுமே செய்யும் ஒருவர். அவரது மகன் சாட்சி. காசு வேண்டி யாசிக்கும் பிச்சைக்காரன் ஒரு சாட்சி. கண்ணால் கண்டதைக் கூற இரு கண்ணும் இல்லாத ஒருவனது மகன் இன்னொரு சாட்சி. பொய்ச் சாட்சியாக, பணத்திற்காக,

இங்கும் அங்கும் மாறி மாறிப் பேசும் இன்னொருவன் கடைசிச் சாட்சி.

ஐயோ! கோர்ட்டுக்கு ஆரே போவார்!

ஒரு நாள் காலை காரணவர் உறங்கும் பாயை விட்டு எழுந்திருக்கக்கூட இல்லை. உயிரை வாங்கும் காலனைப் போல பெரிய மீசை வைத்த ஒருவன் கோர்ட்டு சம்மனைக் கொண்டு வந்தான். நினைத்ததுபோல நேரம் விடிந்தது. வீரபத்திரப் பிள்ளையைக் கதைத் தலைவி சபிக்கிறாள்.

பத்தினி என்சொல் பழுதா காது
உத்தமி என்சொல் ஊரையும் சுடுமே:
கேட்கும், கேட்கும், தெய்வம் கேட்கும்!

பக்கத்து வீட்டிலிருந்து வெள்ளையம் பிள்ளை என்பவர் வந்தார். சம்மனைப் படித்துக் காட்டினார். சமாதானமாகப் போவதற்கு ஒரு வழி சொன்னார்.

ராசியாகப் போவதே உத்தமம்

பொய்கையாற்றின் படுகையில் ஆறுதடி வயல் உள்ளது. இது தவிர அணஞ்சிவிளை, துலுக்கன் தோப்பு, தொட்டிச்சிமேடு ஆகிய இடங்களிலும் நிலம் உள்ளது. மேலத்தெருவில் ஒரு மாடி வீடு உள்ளது. இரண்டு ஜோடி மாடுகளும், இரண்டு கலப்பை ஏர்களும் உள்ளன. ஏழு பசுக்கள் உள்ளன. இவை அனைத்தையும் உனது மக்களுக்கு உகந்துடைமைச் சொத்தாக (சட்டப்படி, பெற்ற பிள்ளைகளுக்குச் சேர உரிமைப்பட்ட சொத்துக்கு உகந்துடைமைச் சொத்து என்று பெயர்), உமக்குத் தரும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். யாதொரு கடனும் உமக்கு வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். இதைப் பெற்றுக் கொண்டு நீர் ஒதுங்கிவிடும். சமாதானமாகப் போய்விடும். "நாங்கள் இருவரும் ராசியாகப் போகச் சம்மதம்" என எழுதிக் கொடுத்துவிடும் என யோசனை கூறி நின்றார்.

வியாச்சிய மென்னும் சுழியில் விழுந்து
கறகற வென்று கறங்கி மயங்கி,
கைப்பொருள் இழந்து கடனும் வாங்கி
வீணாய்த் துன்பம் விளைத்திட வேண்டாம்

என எச்சரிக்கையும் செய்தார். துன்பத்தை விருந்துக்கு வா என அழைத்திடவும் வேண்டாம். தொல்லைகளை வீட்டுக்கு வா எனத் தூது விட்டு வரவேற்கவும் வேண்டாம் எனவும் வேண்டி நின்றார்.

நீதிமன்றம் சென்றால் இருவருக்கும் பாதிப்பு:-

நீதிமன்றம் சென்றால் இருவருமே பாதிக்கப் படுவீர்கள் என்பதை நிறுவ ஒரு கதையும் சொன்னார்.

அறிவுள்ள நீதிபதியொருவர் நியாயத்தலத்து வாயிலின் இருபக்கங்களிலும் யாவரும் பார்க்கும்படி இரண்டு ஓவியங்கள் எழுதி வைக்கச் செய்திருந்தார்.

முதலாவது ஓவியம், எலும்பும் தோலுமாகி, தரித்திர நிலையடந்த ஒரு மனிதன் உடைந்த

ஒடொன்றைக் கையிலேந்தி நிற்பது. இது கோர்ட்டு வழக்கில் ஈடுபட்ட இருசாராருள், வழக்குத் தோற்றவர் தம்கைப்பொருள் இழந்து, இரப்பதற்கு நல்ல சட்டிகூடக் கிடைக்காமல், உடைந்த ஒட்டைக் கையில் வைத்திருக்கும் காட்சி.

இரண்டாவது ஓவியம் மற்றொரு மனிதன் காகிதப் பொதியொன்றைத் தலையில் சுமந்து நிற்பது. இது வழக்கில் வென்றவர் தமது பொருளையெல்லாம் வழக்காடுவதிலே செலவு செய்து வென்ற பிறகு, பணமிழந்து வழக்குச் சம்மந்தமான தஸ்தாவேஜுகள் மாத்திரமே மீதியாகி அவற்றைத் தலையிலே சுமந்துகொண்டு திரியும் காட்சி.

இவ்வுருவங்களைப் பார்த்த பிறகேனும், வழக்கில் வென்றவர் நிலைமையும் தோற்றவர் நிலைமையும் முடிவில் தரித்திர நிலைமையே என்பதை உணரவேண்டும். கோர்ட்டுக்குப் போய் வீணில் பொருளைப் பாழாக்காதிருக்க வேண்டும். உண்மைகளை மக்கள் உணர்ந்து ஒழுகும் பொருட்டு, அந்நீதிபதி அவ்வுருவங்களை எழுதி வைக்கச் செய்தார்.

நீதிமன்றத்தில் வென்றவர், தோற்றவர் ஆகிய இருவருமே எல்லாவற்றையுமே இழக்க வேண்டியது உறுதி என்பதை இக்கதையின் மூலம் அவர் விளக்கினார்.

குரங்கு தின்ற ஆப்பம்

இக்கதை மட்டுமின்றி, பள்ளிப் பாடத்தில் உள்ள பஞ்ச தந்திரக் கதை ஒன்றையும் அவர் எடுத்துரைத்தார். இரண்டு பூனைகள். அவை இரண்டுக்கும் கிடைத்தது ஒரே ஒரு தின்பண்டம். தின்பண்டத்தை எந்தப் பூனை வைத்துக் கொள்வது என்பதில் வழக்கு ஏற்பட்டது.

ஆளுக்குப் பாதியாக, தாங்களாகவே சமமாகப் பிரித்துக் கொள்ள இரண்டு பூனைகளுக்குமே விருப்பம் இல்லை. புத்தி இல்லாத அந்த இரண்டு பூனைகளும் தங்களின் வழக்கிற்குத் தீர்ப்புச் சொல்லுமாறு ஒரு குரங்கைக் கேட்டுக் கொண்டன.

அக்குரங்கு ஒரு தராசை எடுத்தது. தின்பண்டத்தை இரண்டாகப் பிய்த்து இரண்டு தட்டுகளிலும் வைத்தது. எந்தத் தட்டு கீழே இழுத்ததோ அந்தத் தட்டிலிருந்து ஒரு பகுதியைப் பிய்த்துத் தன்வாயில் போட்டுக் கொண்டது.

இரண்டு தட்டுகளும் மாறி மாறி கீழே இழுத்தன. கீழே இழுத்த தட்டிலிருந்து ஒரு பகுதியை எடுத்தெடுத்துத் தன்வாயில் போட்டுத் தின்றது. இறுதியில் எதுவும் மிஞ்சவில்லை.

தின்பண்டத்தை இழந்து நின்ற இரு பூனைகளும் ஏமாந்து நின்றன. வேறு உணவும் கிடைக்காமல் வெட்கப்பட்டு வெறுங்கையோடு திரும்பின.

பிச்சை எடுக்க நேரும்

அரை அடிச் சுவருக்காக உயர் நீதி மன்றம் வரை ஏறி, அடியோடு கெட்ட அந்திப்புரத்தைச் சேர்ந்த மந்திரம் பிள்ளை என்பவருடைய கதையையும் வெள்ளையம் பிள்ளை விளக்கிக் கூறினார்.

வடக்கு வீட்டில் வாழுகின்ற அவரது அக்காள் கணவர், மருமக்கள் ஆகியோருடன் நடந்த இவ்வழக்கு எட்டு ஆண்டுகளாக நடந்தது. இறுதி முடிவு என்னாயிற்று? அவர் எல்லாவற்றையும்

இழந்து நின்றார். இந்த ஊரிலேயே பிச்சை எடுத்துத் திரிகிறார். இக்காட்சியை நாம் தினமும் காணவில்லையா?

வேலுப்பிள்ளை என்பவரின் குடும்பத்தில் ஏற்பட்ட வழக்கில் கூண்டேறிய ஐந்தாவது சாட்சியான ஆண்டி என்பவன் வாய்தாதோறும் பணம் பணம் என்று பிடுங்கித் தின்றது எல்லோருக்கும் வெட்ட வெளிச்சம்.

வேலுப்பிள்ளையின் வீட்டிலோ முழுப் பஞ்சம் நிலவியது. மூதேவி வாசம் செய்தாள். மேலே கூறிய ஆண்டி என்ற சாட்சியை, சாட்சி கூற மீண்டும் அழைத்தார் வேலுப்பிள்ளை.

பானையி லேபத் தரிசி இல்லை,
உப்போ புளியோ ஒன்றுமில்லை;
உச்சிக்கு எண்ணெய் ஒருதுளி யில்லை,
தொட்டில் கட்டத் துணியு மில்லை,

எனச் சாட்சி நாடகம் ஆடினான். என் குடும்ப நிலை இப்படியிருக்க உமக்காக நீதிமன்றம் வந்து எப்படி சாட்சிசொல்ல என்னால் முடியும் எனக் கூறிப் பணத்தையெல்லாம் தட்டிப் பறித்தான்.

பொன்நகையோடு புன்னகையும் பறிபோகும்

நாஞ்சில் நாட்டையே துயரத்துக்கு உள்ளாக்கிக் குறும்புகள் பலசெய்து கலக்கிக் கொண்டிருந்த முளையநல்லூர் முதல்பிடிப்பிள்ளை என்பவரின் அண்ணனும் வழக்காடிய காரணத்தால் எல்லாவற்றையும் இழந்து நின்றார். நிலங்கள், சொத்துக்கள் என எல்லாம் போயின. இறுதியில் அவனது மனைவியின் கழுத்தில் மாங்கல்யம் மட்டுமே தங்கியது. கழுத்தில் இருந்த எல்லா நகைகளும் நீதிமன்றப்படியேறிச் சென்று விட்டன.

அவரது மனைவி ஒவ்வொரு காதிலும் ஏராளமான நகைகள் போட்டிருந்தாள். இப்போது எல்லாம் போய் விட்டன. இப்போது அவள் உலக்கையைக் கையில் ஏந்தி, கூலிக்கு நெல் குத்துகிறாள். இங்ஙனம் நடக்கும் என்று யாரேனும் எதிர்பார்த்தார்களா! அவளுக்குச் சின்னச் சின்னக்குழந்தைகளாக ஏழு குழந்தைகள். நெல்குத்தி அவர்களை எப்படிக் காப்பாற்றுவாள்.

கோர்ட்டு வழக்குக் கொஞ்சமா செய்யும்?
இதுவும் செய்யும், மேலே எதுவும் செய்யும்;

ஆதலின்,

கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்!
குதித்துக் குடியைக் கெடுத்திட வேண்டாம்!

என எச்சரித்தார்; பணிவுடன் வேண்டினார்.

வீடு ஏலம் போகும்

கைலாசம் பிள்ளை என்று ஒருவர். வழக்கறிஞர் கட்டணத்திற்காக - வெறும் எழுபது ரூபாய்காக - அவரது வீடே ஏலம் போனது. ஜப்தி செய்ய வந்தவன் ஈவிரக்கமின்றி வீட்டிற்குள் படுத்துக் கிடந்த கிழவனைத் தூக்கி வெளியே கொண்டுவந்து, போட்டு விட்டுக் கட்டிலைக்

கூடக் கடத்திச் சென்று விட்டான்.

தேடிய முதல் எல்லாம் தெருவில் போகும்

குழந்தைகள் தண்ணீர் குடிக்கும் பாத்திரம். காய்கறி முகக்கும் அகப்பை. உப்புப் போட்டு வைக்கும் சிரட்டை என எதையும் விடாமல் வந்தவன் வண்டியில் ஏற்றிச்சென்று விட்டான்.

'வழக்கும் இழந்து, வகையும் இழந்து,
யாவும் இழந்து உளம் ஏங்கி யிருக்கும்
கைலாசம் பிள்ளை'க்கு இவையெல்லாம்

கனவு போலத் தோன்றிற்று. கண்ணால் கண்ட இக்காட்சியை அவரால் நம்ப முடியவில்லை.

ஒருமுறை மாடன் என்ற சிறு தெய்வத்திற்கு முன் சாமியாடும் நம்பி என்பவனுக்கு 'வாரண்ட்' வந்தது. அவன் சுவரெல்லாம் குதித்து, மடையெல்லாம் ஒளிந்து நின்றான். ஆனால் தப்பிக்க முடியவில்லை. இறுதியில் ஏழுரூபாய் லஞ்சம் கொடுத்துத்தான் தப்பித்தான். ஆதலின்,

வியாச்சியம் வேண்டாம், வியாச்சியம் வேண்டாம்,
தேடின முதலைத் தெருவில் வாரி
இறைக்க வேண்டாம்; இறைக்க வேண்டாம்.

என்று வெள்ளையம் பிள்ளை வேண்டி நின்றார்.

அமீனா - ஒரு சுறாமீன்

நீதிமன்றம் சென்று வழக்கு என வந்தால் அமீனா என்னும் சுறாமீன் வீடுதேடி வரும். அனைவரையும் தூக்கி விழுங்கி விடும். கடலுக்கடியில் கூடப் பொல்லாத மீன் இதுபோல் ஒன்றைக் காண முடியாது.

வக்கீலின் குமாஸ்தா என்னும் ராக்கூட்டம் உம்மைக் கடித்து இரத்தத்தைக் குடித்து விடும்.

காரணவரே, குடும்பத் தலைவரே! நீர் வீட்டை விட்டு வெளியே வராதவர். நீதிமன்றம் ஏறி விட்டால் ஆகும் செலவுகளை அறியாதவர்.

கட்ட முடியாத கட்டண வகைகள்

விண்ணப்பம் நிறைவு செய்ய ஒரு கட்டணம், சாட்சிக்கு ஒரு கட்டணம்; சம்மனுக்கு ஒரு கட்டணம்; ஜப்திக்கு ஒரு கட்டணம்; வாரண்டுக்கு ஒரு கட்டணம்; கோர்ட்டுக்கு ஒரு கட்டணம்; குமாஸ்தாவுக்கு ஒரு கட்டணம்;

கூடிக் காப்பி குடிக்கப் பீஸு
வெற்றிலை வாங்கிட வேறொரு பீஸு

வழக்கறிஞருக்கு ஒரு கட்டணம், மகமை என்று ஒரு கட்டணம்; வக்காலத் ஒரு கட்டணம்.

எழுதப் பீஸு சொல்லப் பீஸு

எழுதிய தாளை எடுக்கப் பீஸு
நிற்கப் பீஸு இருக்கப் பீஸு
நீட்டின கையை மடக்கப் பீஸு

வழக்கறிஞர்கள் ஒவ்வொரு சிறு செயலுக்கும், சிறு நிகழ்ச்சிக்கும், சின்ன சின்னக் காரணங்களுக்காகவும், காரணமே இல்லாமலும் கட்டணம் வசூல் செய்வதைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மேலும் ஏளனம் செய்கிறார்.

அந்தப் பீஸு இந்தப் பீஸு
ஆளைப் பீஸு பூனைப் பீஸு
ஏறப் பீஸு இறங்கப் பீஸு

இங்ஙனம் கட்டணம் என்ற பெயரில் பிய்த்துப் பிடுங்கும் வழக்கறிஞர்கள் மூலம் வழக்கு நடத்துவதால் வீண் மனவேதனைகளும், பெரும் செலவுகளுமே மிஞ்சும்.

கோர்ட்டை அவமதித்த குற்றமோ இது :-

வழக்கறிஞர்கள் குறுக்குக் கேள்வி என்ற பெயரில் என்னவெல்லாமோ கேட்பர். ஓடும் குதிரைக்கு உச்சியில் கொம்புகள் ஒன்றா, இரண்டா? உடனே பதில் சொல்லும் என்பர். குதிரைக்கு ஏது கொம்புகள் என நாம் திருப்பிக் கேட்டால் கோர்ட்டை அவமதித்த குற்றம் எனப் பழி போடுவர்.

ஒன்றா, இரண்டா என்பதுதான் நான் உம்மிடம் கேட்ட கேள்வி? உண்டா இல்லையா என்று நான் கேட்கவில்லை, என வழக்கறிஞர் விதண்டா வாதம் பண்ணுவார். குழிக்குள் விழுந்த குள்ளநரியை எல்லோரும்கூடி என்ன பாடுபடுத்துவார்களோ அந்தப்பாடு உம்மைப் படுத்துவார்கள். ஏழரை நாட்டுச் சனியன் படுத்தும் பாட்டைவிட வழக்கறிஞர் படுத்தும் பாடு மிகவும் கொடுமையானது.

மூடர் முதல் எல்லாம் வக்கில் முதலாம்

மேடும் காடும் வெட்டித் திருத்திப்
பாறையும் உடைத்துப் படுநில மாக்கிப்
பருவம் அறிந்து பண்பட உழுது.

வந்த விளைச்சலை எல்லாம் வக்கீல் வீட்டு வாசலில் கொண்டு போய்க் கொட்ட வேண்டுமா? வேலி கட்டி, மறைகளைக் கொட்டி, பறவையை ஓட்டி, நீரைப் பாய்ச்சி, இரவென்றும், பகலென்றும் பாராமல் உழைத்து

விளையச் செய்த மேனிநெல் எல்லாம்,

வக்கீலிடம்,

விரித்துக் காய்ச்சி வீசித் தூற்றி
அளந்து வாரி அறைக்குட் போட்டு
வெறுங்கை யோடு வீடுபோய்ச் சேரும்

நிலை உமக்கு வர வேண்டுமா? மூச்சை அடக்கி முத்தை எடுப்பவனிடம் ஒரு முத்துக் கூட இருப்பதில்லை. அதுபோல. உயிரைக் கொடுத்து உழைத்துச் சேர்த்த உழவு நெல்லும் உழவனிடம் இருப்பதில்லை.

மூடர் முதலெலாம் வக்கீல் முதலாம்;
ஐயம் இதற்கிலை. ஐயம் இதற்கிலை;

ஆதலின். சமாதானமாகப் போய் விடுவதே உத்தமம். வழக்கறிஞர் சாப்பிடுவதைத் தங்கை மகன் சாப்பிட்டு விட்டுப் போகட்டுமே.

"மருமக் கள்வழி வழங்கும்இந் நாட்டில்
வீடுவீ டாயொரு கோடிருந் தாலும்,
வழக்குகட்கு ஒய்வு வருமோ ஐயா?"

விதி பிடர் பிடித்து உந்தி நின்றது

விதி வலிது. காரணவரின் நாலாம் மனைவியின் மாமன் மகன் ஒரு வக்கீல் குமாஸ்தா. காரணவரின் வீட்டு நிலைமையை அறிந்து ஒருநாள் நேரில் வந்தான். வெள்ளையம் பிள்ளை கூறிச் சென்றதைக் குறை கூறினாள்.

வெள்ளையம் பிள்ளைக்கு வேலை யில்லை;
காடு கூப்பிடுது. காலம் வரவில்லை;
வீடுபோக் கிடுது! வேளைவர வில்லை!

வெள்ளையம் பிள்ளையைக் கூனக் கிழவன் என்று அவன் திட்டினான். கோர்ட் விவகாரம் பற்றி அவருக்கு என்ன தெரியும் எனச் சாடினான். அவரது பேச்சையெல்லாம் பெரிதாகக் கருதி நடக்க முடியுமா?

இந்திய நாடு வாணிபம் மிகுந்த நாடு. செல்வமும். கல்வியும் செழித்த நாடு. உழைப்பில் மிகவும் ஒங்கிய நாடு. வளர்ச்சி பெற்ற இந்திய நாட்டில். வழக்குகள் தினமும் வளர்ந்து வருவது இயல்பு. என்னால் ஆயிரக்கணக்கான சான்றுகளைக் காட்ட முடியும்.

வழக்கறிஞர் ஆளையா தூக்கி விழுங்கி விடுவார்? அவருடைய வீச்சு எல்லாம் என்னிடம் செல்லாது. ஏழைப்பட்ட அறியாத மக்களிடம் வேண்டுமானால் அவர் தனது வாலை ஆட்டலாம்.

லஞ்சம் வாங்கிக் கொண்டு முன்பின் தெரியாத எந்தப் பத்திரத்திலும் சாட்சிக் கையெழுத்துப் போட்டுச் சாட்சிசொல்லத் தயாராயிருப்பவர். லஞ்சம் பெற்றுக் கொண்டு. யார் யாருக்கு எந்த எந்த விதமாகச் சாட்சியம் சொல்ல வேண்டுமோ அந்த அந்த விதமாகக் கோர்ட்டில் சொல்லத் துணிந்திருப்பவர் எனப் பலவகையாக. வழக்கு மன்ற நடவடிக்கைகளை அறிந்தோரைக் கூட்டாளிகளாகக் கூட்டிக் கொண்டால் வழக்கறிஞர் எப்படி வாயைத் திறப்பார்.

பேடியைக் கண்ட பீஷ்மரைப் போல

உத்தம வீரரான பீஷ்மர் பேடிமீது அம்பு தொடுக்க மாட்டார். அவரைப் போரில் ஒருவராலும் வெல்ல முடியாதிருந்த நிலையில். ஒரு பேடியை முன் நிறுத்தி. அருச்சுனன் அவரை வென்றான். அங்ஙனம் பேடியைக் கண்ட பீஷ்மர் செயல் இழந்து நின்றதைப்போல, நாம் கொண்டு

போய் நிறுத்தும் சாட்சிகளைக் கண்டதும், வழக்கறிஞர் மௌனமாகி விடுவார். வழக்கறிஞரின் உருட்டும், புரட்டும் என்னிடம் செல்லாது. நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். என்ன வந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்.

இந்து லாவில் வரிகள் இத்தனை
மகம்மது லாவில் வரிகள் இத்தனை

என்பதெல்லாம் எனக்கு அத்துப்படி. திருவிதாங்கூர் பீனல் கோர்ட், குற்ற விசாரணைச் சட்டம் எல்லாம் எனக்கு மனப்பாடம். இப்பொழுதே எல்லாவற்றையும் உம்மிடம் சுருக்கிச் சொல்லிவிட முடியும்.

சட்ட மெனக்குத் தலைகீழாய்த் தெரியும்;
நடைபடி யெல்லாம் நன்றாய்த் தெரியும்;
இரண்டு கையால் எழுதத் தெரியும்;

ராசி ஆக வேண்டாம்; வெற்றி நமதே

அரை மணித்துளியில் ஐம்பது அநியாயங்களை நீதிமன்றத்தில் எனக்கு ஜோடிக்கத் தெரியும். சாட்சிகளுக்குத் தெரியாதவைகளை எல்லாம், சாடை காட்டியே சொல்லிக் கொடுத்து, வழக்கில் வெற்றி பெற, எனக்கு நிகர் யான் தான். கட்சிக்காரர்கள் கொண்டு வந்து தரும் பணத்தை என் சொந்தப் பணம் போலப் பெட்டியில் வைத்துப் பாதுகாப்பேன். சிறிதும் மோசம் செய்திட மாட்டேன். நான் சத்திய வாசகன்; உண்மையே என் உயிர் மூச்சு. இந்த நாடே இதனை அறியும். நானே இந்த வழக்கை நடத்தி வெற்றியும் வாங்கித் தருகிறேன். மலைக்க வேண்டாம். சமாதானமும் வேண்டாம்; ராசியும் வேண்டாம் எனக்கூறிக் காரணவரை வழக்கு நடத்தச் சம்மதிக்க வைத்தான். வக்காலத்தும் செலவுக்குப் பணமும் வாங்கிச் சென்றான்.

காரணவர் வழக்கு நடத்த சம்மதம் தெரிவித்தார்.

நாகை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது, நடந்தது நடந்தது நாலரை ஆண்டுகள். இரவு என்றும் பகல் என்றும் பாராமல் காரணவர் அலைந்தார்.

தடம் மாறிய வாழ்க்கைப் பாதை

இயல்பான வாழ்க்கை முறை எல்லாமே தடம்மாறிப் போய்விட்டன.

திங்கட் கிழமை தெரிசனம் போச்சு!
திண்டாட் டங்கள் தீரா தாச்சு!
வெள்ளிக் கிழமை விரதம் போச்சு.

விவகாரங்கள் மிகவும் முற்றிப் போய்விட்டன. வாழும் இடமும் மாறிப் போயிற்று. ஒட்டுத் திண்ணை உறங்கும் இடமாயிற்று. காரணவரின் மேலாடையே விரிக்கும் பாயாக மாறிவிட்டது. உணவு வகைகள் மாறிவிட்டன,

குளியும் போச்சு, கும்பிடும் போச்சு,
கோர்ட்டு வாசல் குடியிருப் பாச்சு!
மாதாந் தங்கள் மறந்தே போச்சு,

வக்கீ லாபீஸ் வாழிடம் ஆச்சு!

உனவு முறைகளும் மாறிவிட்டன.

புட்டும் பழமும் காப்பியும் போச்சு,
புளித்த காடியே போது மென் றாச்ச

தோசையும், இட்லியும் வறண்டு போயின; காரணவரின் தொந்தியும் கரைந்து போயிற்று. உடம்பில் பூசிக் கொள்ளும் மணப் பொருள்கள் மறந்து போயின. துணிக்குப் போடும் சோப்பு வகைகள் பறந்து போயின. வெயிலுக்குப் பிடிக்கும் குடையும், காலுக்குப் போடும் செருப்பும் மறைந்து போயின. வண்டியும், மாடும் விற்றுத் தீர்ந்தன. அஞ்சல்களைச் சுமந்து செல்லும் தபால்காரனின் அவசர ஓட்டம் அவருக்குச் சொந்தமாயிற்று. வெயிலில் அலைவது வாடிக்கை ஆயிற்று.

காரணவர் மட்டும் இன்றி, குடும்பம் முழுவதுமே அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை.

மட்டிலாக் கவலை மனங்குடி கொண்டது,
அளவிலாத் துன்பம் அடிமை செய்தது!

துன்பம் தீர வழி தெரியவில்லை. மனம் திகைத்தது. வாழ்க்கை அதிர்ச்சியுடன் காணப்பட்டது. ஒரு குறத்தி வந்தாலும்; ஒரு கோடாங்கி வந்தாலும் துன்பத்திற்குத் தீர்வு கிடைக்காதா என அலமந்து குறி கேட்கத் தொடங்கினர். சோதிடர்கள் கணித்துச் சொன்னவற்றை உண்மையென்று நம்பி, ஆறுதலும் துணிவும் காரணவரின் குடும்பத்தினர் பெற்றனர்.

குறத்தி சொன்ன குறியும், குறி தவறிப் போச்சே

நாஞ்சில் நாட்டில் உள்ள நாராயணசாமி பதிகள் எனப்படும் கோவில்கள் இருக்கும் இடமெல்லாம் சென்று குடும்பத்தலைவரின் குடும்பத்தினர் "சிறப்பு" நடத்தினர். காளி தேவிக்குக் கொடை செய்தால் வழி பிறக்கும் என்று கூறியதைக் கேட்டுக் கடா வெட்டி, பொங்கலிட்டுக் காத்துக் கிடந்தனர். ஆனால் எந்தப் பலனும் இல்லை. பணவிரயம் ஆனதுதான் மிச்சம்.

குறத்திசொன்ன குறியெல்லாம்
குறிதவறிப் போச்சே!
கோடங்கி குறியாலும்
குணமில்லா தாச்சே!

இன்ன இன்ன செய்தால் இன்ன இன்ன நடக்கும் என நிமித்திகர் கணித்துச் சொன்ன நிமித்தங்கள் எல்லாம் பொய்யாய், பழங்கதையாய்ப் போய்விட்டன. அதை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் வெந்து சாம்பலாகிறது.

விதித்த விதிதான் இருக்க வேறுவிதி வருமோ!

மருமக்கள் வழித்தாய முறைக்குத் தீர்வு காண வழக்கு மன்றம் ஏறி, மனம் பட்ட பெரும் துயரங்களை எல்லாம் யாரே படமுடியும். கடவுளும் கைகொடுக்க வில்லை. விம்மி விம்மி அழுத அழுகையெல்லாம் வீணாகப்போயிற்று.

பதித்தலத்துப் பால்வைத்தும்
பயனடைந்தோ மில்லை!
பலிகொடுத்தும் தேவி அருள்
பாலித்தா னில்லை!

காரணவர் கால்கடுக்க அல்லும், பகலும் நீதிமன்றத்திற்கு அலைந்து திரிந்தார். எலும்பும், தோலுமாக உருமாறினார். இருமல், இழுப்பு எல்லாம் குடி கொண்டன. எதிலும் விருப்பம் இல்லாமல் இருந்தார். வெளியூர் செல்வதை நிறுத்தினார். தெருவில் மட்டும் போய் வந்தார். படிப்படியாக அவரது செயல்பாடுகள் குறைந்து கொண்டே வந்தன.

எழுந்து நடக்க இயலா தானார்
நடந்தவர் கீழே கிடந்தா ரம்மா!

முடிவுரை:-

மருமக்கள் வழித் தாய முறைக்கு வழக்குகள் தீர்வு ஆகாது. வீடு வீடாக நீதிமன்றங்கள் இருந்தாலும் வழக்குகள் ஓயாது. சட்டத்திருத்தம் ஒன்றே நிலையான தீர்வாக அமைய முடியும் என்பதை இப்படலம் சொல்லாமல் சொல்கிறது.

பாடம் - 4

மருமக்கள் வழி மான்மியத்தில் அங்கதமும் நகைச்சுவையும்

முன்னுரை:-

நாஞ்சில் நாடு என்பது தமிழ் இலக்கியம் தோன்றிய சங்க காலம் தொட்டுப் புகழ் பெற்று விளங்கிய ஒரு பகுதியாகும். சங்க காலப் பாண்டியர்கள் தென் குமரியைச் சார்ந்த இந் நாஞ்சில் நாட்டை ஆரம்பத்திலிருந்தே ஆண்டு வந்தனர். பின்னர் சங்க காலத்திலேயே சேரர்களின் ஆட்சிக்கு இப்பகுதி உட்படுத்தப் பட்டமை பற்றிப் புறநானூற்றின் பதினேழாம் பாடலும், பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பதிகமும் எடுத்துரைக்கின்றன. நாஞ்சில் மலையைத் தன்னகத்தே கொண்டமையால் நாஞ்சில் நாடு எனப்பெயர் பெற்றிருக்கலாம் என ஊகிக்கப் புறநானூற்றின் ஐந்து பாடல்கள் (137, 138, 139, 140, 380) இடம் தருகின்றன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில், திருஞான சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் ஆட்சி புரிந்த நெடுமாறன் என்னும் பாண்டியன் கோட்டாற்றிலும், விழிஞத்திலும், நாஞ்சில் நாட்டைக் கைப்பற்றப் போர் நடத்தியதாகப் 'பாண்டிக் கோவை' என்னும் நூல் கூறுகிறது.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் நாஞ்சில் நாடு சோழர்களின் ஆட்சிக்குக் கைமாறியது. முதல்பராந்தகன், முதல்ராசராசன் இவர்களுடைய கல்வெட்டுகள் நாஞ்சில் நாட்டில் இன்றும் காணப் படுகின்றன. இந்நாஞ்சில் நாடு இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் ராசராசன் காலம் வரை சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தமையைப் பிறிதொரு கல்வெட்டு கூறுகிறது என்பர் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் (நூலின் முன்னுரை பக்கம் 7-8). கி.பி. 1635ல் நாஞ்சில் நாடு நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்டது. கி.பி. 1700க்குப்பின் திப்பு சுல்தான் படையெடுப்பால் இந்நாடு பெரும் துன்பத்திற்கு ஆளானது.

மருமக்கள் வழித்தாய முறை தோன்றிய பின்புலம்:-

நாஞ்சில் நாடு கேரள நாட்டைச் சார்ந்த திருவிதாங்கூர் அரசுக்கு இறுதியில் உட்பட்டு விளங்கியது. நாஞ்சில் நாட்டு மக்கள் பேசும் மொழி தமிழ். ஆனால் பள்ளிகளில் படிக்கும் மொழி மலையாளம்.

நாஞ்சில் நாட்டில் வாழ்ந்த பெரும் பகுதி மக்கள் வேளாளர் இனத்தைச் சார்ந்தவர்கள். பாண்டிய நாட்டின் பழக்க வழக்கங்களே இவர்களின் பழக்க வழக்கங்களாக இருந்தன. பாண்டிய நாட்டுத் தெய்வங்களே இவர்கள் வழிபடும் குடும்பத்தெய்வங்களாக விளங்கின. இவர்களது கொள்வினை, கொடுப்புவினை, மனஉறவுகள், போக்குவரத்துகள், சடங்கு முறைகள் ஆகிய அனைத்தும் பாண்டிய நாட்டினரோடு நிகழ்ந்தன. சடங்கு முறைகள் பாண்டிய நாட்டினரின் சடங்கு முறைகளாக விளங்கின. இவர்களின் உறவுகளையும், மண வினைகளையும், பாண்டிய நாட்டினரிடமிருந்து பிரித்து எடுத்துக் கேரள நாட்டு மண வினைகளோடும், பழக்க

வழக்கங்களோடும் சேர்க்க ஒரு சாரார் எடுத்த முயற்சியின் விளைவே மருமக்கள் வழித்தாய முறை ஆகும்.

சேர மன்னன் ஒருவன், பண்பாட்டாலும், பழக்க வழக்கங்களாலும் பாண்டிய நாட்டோடு பின்னிக் கிடக்கும் வேளாளரை மலையாளப் பழக்க வழக்கங்களுக்கு மாற்ற முயன்றான். நாஞ்சில் நாட்டு வேளாளர்கள் தங்களுடைய பூர்வீக நாட்டிற்குப் போய்விடாதவாறு தடுக்க முயன்றான். மருமக்கள் தாய வழி முறை என்னும் புதிய சட்டத்தை உருவாக்கினான். உண்மையில் இது ஓர் அரசியல் சூழ்ச்சி ஆகும்.

தான் பெற்ற பிள்ளைகளுக்குச் சொத்து உரிமை தருவது மக்கள் தாய முறை எனப்படும். தன் சகோதரி பெற்ற பிள்ளைகளுக்குச் சொத்துரிமை தருவது மருமக்கள் தாய முறை எனப்படும். "மக்கள் தாய முறையை மேற்கொண்டு வாழ்ந்து வந்த நாஞ்சில் நாட்டு வேளாளர், அரசியல் காரணங்களால் மருமக்கள் தாய முறையைப் பின்பற்றினர்." என பூநீபத்மநாபசுவாமி கோவிலுள்ள ஓர் ஓலைப் பத்திரம் தெரிவிக்கிறது. திருவிதாங்கூர் நாட்டு வரலாறும் இதனை உறுதிப் படுத்துகிறது.

ஒரு பெற்றோருடைய இயற்கையான அன்பு அவர்கள் பெற்ற பிள்ளைகள்மீதுதான் இருக்கும். அவர்கள் தன்னுடைய சகோதரியின் பிள்ளைகளைக் கைவிட்டு விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் மருமக்கள் தாய முறை தோன்றி இருக்க வேண்டும். ஆனால், சட்டத்தின் மூலம் ஒரு குடும்பத் தலைவரின் சொத்தைச் சகோதரியின் பிள்ளைகளுக்குத் தாரை வார்த்துத் தருவது; உகந்துடைமை என்னும் ஒரு சிறிய பகுதியை மட்டும் தன் சொந்தப் பிள்ளைகளுக்கு அளிப்பது; குடும்பத் தலைவர் தனது சொத்தைத் தான் அனுபவிக்க முடியாமல் வெறும் காவலனாக மட்டும் இருப்பது; சட்டம் தந்த அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, சகோதரியின் மக்கள் குடும்பத் தலைவரிடம் அதிகாரம் செய்வது, அட்டூழியமாக நடந்து கொள்வது; சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாக அச்சுறுத்துவது; வழக்கைக் கொண்டு நீதிமன்றம் செல்வது; வழக்கிற்காகக் குடும்பச் சொத்து அழிவது என மருமக்கள் வழித் தாய முறை தோற்றுவித்த சூழ்நிலைகள், அச்சுறுத்தல்கள், குடும்பத்தில் தோன்றிய குழப்பங்கள், வாழ்க்கை முறையில் தோன்றிய இடர்ப்பாடுகள் எல்லாம் நாஞ்சில் நாட்டையே சீர்குலைத்து நின்றன.

நாஞ்சில் நாட்டு ஆண்களிடம் பலதாரம் செய்யும் கொடிய வழக்கம் நிலவியது. அவர்கள் அனைவருக்கும் பிறந்த குழந்தைகளுக்குத் தங்களின் சொந்த சொத்தையே கொடுக்க முடியாத படி மருமக்கள் வழித் தாய முறைச் சட்டம் தடுத்து நின்றது. இதனால் நாஞ்சில் நாட்டுப் பெண்கள் அனுபவித்த துயரங்கள் தொடர் கதையாகி நீண்டு சென்றன; நிலைத்து நின்றன.

நாஞ்சில் நாட்டில் பெண்கள் கணவனை இழந்து விட்டால், அவன் இறந்த பிறகு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை விதவைகளுக்கு அளிக்கப்பட்டு இருந்தது. மருமக்கள் வழித்தாய முறை வழக்கத்தில் இருந்த நாஞ்சில் நாட்டில் மறுமணம் செய்து கொண்ட விதவைகளின் துன்பம் மிகுந்ததே அன்றிக் குறையவில்லை.

மேற்குறித்த எல்லா நிலைமைகளுக்கும் ஒரு விடிவு காலம் வரவேண்டும் என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கருதினார். நகைச் சுவையும், அங்கதமும் கலந்த மொழி நடையில்,

பொருள் அமைதியில் இக்குறுங் காப்பியத்தை வடித்தார்.

சமுதாயத்தில் உள்ள கீழ்த்தட்டு மக்களுக்கும், இக்குறுங்காப்பியத்தின் செய்தி போய்ச் சேர வேண்டும் என்பதற்காக மொழிநடையை எளிமையாக்கினார். மக்கள் பேசும் பேச்சு மொழியைப் பின்பற்றினார்.

மருமக்கள் வழித்தாய முறையால் விளைந்த கேடுகளுக்கும், மக்களின் அறியாமைக்கும் இடையே அங்கதம், நகைச்சுவை என்ற இருபாலங்களை அவர் அமைத்தார். தாம் கூற விரும்பிய கருத்தை நேரடியாக, ஒளிவு மறைவின்றி அவர் கூற விரும்பவில்லை. அதற்காக அங்கதம் என்ற ஓர் இலக்கிய வகையினைப் பின்பற்றினார்.

அங்கதம் இரண்டு வகைப்படும். 1. செம்பொருள் அங்கதம் 2. பழிகரப்பு அங்கதம்.

கவிஞன் தான் கூற வருகின்ற செய்தியை எள்ளல் சுவையோடு தருவது அங்கதம் ஆகும். எள்ளல் சுவையில் இடம் பெறும் கேலி, கிண்டல் முதலிய பொருள் அமைதிகள் நேரடியான சொற்களைக் கொண்டு, வசை வெளியே புலப்படுமாறு அமைப்பது செம்பொருள் அங்கதம் எனப்படும்.

பழிப்பது போலப் புகழ்தல், புகழ்வது போல பழித்தல் என உட்பொருள் கொண்டு கூறுவது பழிகரப்பு அங்கதம் ஆகும்.

செம்பொருள் அங்கதத்தில் சொற்களில் ஒளிவு மறைவு இருக்காது. ஆதலின் சொற்களில் உள்ள வசையும் வெளிப்படையாகப் புலப்படும். பழிகரப்பு அங்கத்தில் அமையும் வசை நேரடியாக, அல்லது வெளிப்படையாக இருக்காது. சொற்கள் ஒன்றைக் கூறும்; ஆனால் அவற்றின் பொருள் வேறாக இருக்கும். கேட்போரின் மனம் புண்படாமல் இருக்கக் கையாளப்படும் உத்தி இது எனலாம்.

மருமக்கள் வழி மான்மியம் முழுவதும் அங்கதம் பின்பற்றப்பட்டுள்ளமையை உணர முடிகிறது. ஒரு சில இடங்களில் தவிர, நூல் முழுவதும் பழிகரப்பு அங்கதம் ஆட்சி செலுத்துவதை நம்மால் உணர முடிகிறது. பிறரை ஏளனம் செய்வது தங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு கவிஞர்தான் என்பதைப் பொதுமக்கள் அறிந்தால் அதை ஜீரணித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதற்காக இது ஒரு பழைய ஏட்டுச் சுவடியில் காணப்படும் ஏட்டு வடிவ நூல் எனக்கூறி வெளியிடப்பட்டது.

மருமக்கள் வழி மான்மிய நூல் முழுவதும், அங்கதமும் நகைச்சுவையும் ஏளனமும் வரவிக் கிடக்கின்றன. சமுதாயத்தில் மருமக்கள் வழித்தாய முறையினால் தோன்றிய அவலங்களையும், துயரங்களையும் நகைச்சுவை கலந்த அங்கதப் பாணியில் வெளியிடுவதே கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் நோக்கம் ஆகும்.

"பிள்ளையவர்கள் வரைந்த சமுதாயச் சித்திரம் ஒரு நூதன இலக்கிய வகையை நமது தமிழ் மக்களுக்குக் கொடுத்தது. இவ் விலக்கிய வகையில் நகைப்பும், இகழ்ச்சியும் சோகமும் ஒன்றாகக் கலந்து வரும். பெரியதோர் பயனும் விளைவதாகும்."

என்று கூறும் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையின் கூற்று, இந்நூலாசிரியரின் நோக்கத்தை

வெளிப்படுத்தி நிற்கும்.

இந்நூல் கதைத் தலைவியால் கூறப்படும் அவளது சுயசரிதை ஆகும். அவள் பிறந்ததோ ஓர் ஏழைக் குடும்பம். புகுந்ததோ ஐந்து மனைவியரைத் திருமணம் செய்த ஒரு காரணவரின் குடும்பம். கணவனுக்குக் கடைசி மனைவியாகச் சென்றவள் அவள். வீட்டில் சம்பளம் வாங்காத அடிமையாக இருந்து குடும்பம் நடத்த வேண்டிய அவலநிலை அவளுக்கு இருந்தது. எல்லா வேலைகளும் இவள் தலைமேல் விழுந்தன. அதனால் அவள் பட்ட துயரத்திற்கு அளவில்லாமல் போயிற்று. சோகத்தைச் சுமந்து நிற்கும் இக்கதைத் தலைவியின் கதைபோல உலகில் எங்கும் ஒரு கதையைப் பார்க்கவும் முடியாது; கேட்கவும் முடியாது.

இராமயணத்தில் சீதை பட்ட துயரம், மகாபாரதத்தில் பாஞ்சாலி பட்ட அவமானம், அரிச்சந்திர புராணத்தில் ஒரு நாட்டின் அரசியாக இருந்து, வேறு ஒருவருக்கு அடிமையாக விற்கப்பட்ட சந்திரமதி அடைந்த சோகம் ஆகிய அனைத்தும் மிக அதிகம். ஆனால் மருமக்கள் வழித் தாய முறை தோற்றுவித்த குழப்பங்களுக்கும், சிக்கல்களுக்கும், வழக்குகளுக்கும், செலவுகளுக்கும், துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் களமாக விளங்கிய குடும்பத்தில், அடிமையாக விளங்கிய கதைத் தலைவியின் சோகத்திற்கு அவை ஈடாகா. உமியாய், தவிடாய், ஊதும் பொடியாய்ப் பறந்து போகும். சோகம் கவ்விய தன் மனதின் துயரைக் கதைத் தலைவி அங்கதமும், நகைச் சுவையும் கலந்து முன் வைக்கிறாள்.

தம் கணவரின் நான்காவது மனைவி, அழகும் இளமையும் கொண்டவள். நடிப்பும், துடிப்பும் மிக்கவள், எடுப்பும், ஒப்பனையும் கொண்டு விளங்குபவள். அவளது மஞ்சள் பூச்சிலும், மயக்கிடும் பேச்சிலும், கோல உடையிலும், குலுக்கு நடையிலும் மனத்தைப் பறிகொடுத்த தன் கிழட்டுக் கணவர், கவிஞராக மாறி அவளை வர்ணனை செய்கிறார்.

'தங்கப் பெண்ணே தாராவே!
தட்டான் கண்டால் பொன் என்பான்
தராசிலே வைத்து நிறு என்பான்
எங்கும் போகாமல் இங்கே யேயிரு'

வயதான தன் கணவர், தன்னுடைய முதுமையை மறந்து, அல்லது மறைத்துத் தனது சக்காளத்தியை வர்ணிப்பது கண்டு கதைத் தலைவிக்கு ஒரு புறம் மனக்காயம்; இன்னொரு புறம் சிரிப்பு.

நான்காம் மனைவியைவிட இளமையுள்ள கதைத் தலைவியின் இளமை, அவரது கண்ணுக்குப் படவில்லை. மேனி மினுக்கும், ஒப்பனையும் அவரைக் கவர்ந்து இழுக்கின்றன. தங்கத்தால் செய்யப்பட்ட பெண்ணாகவும், எட்டிப் பிடிக்க முடியாத விண்மீனாகவும் அவள் காட்சி தருகிறாள். நகை செய்யும் தட்டான் கண்டால் அவளைத் தங்கமெனக் கருதிக் கடத்திச் சென்று விடுவான் எனப் புகழ் மாலை சூட்டுகிறார். எங்கேயும் போகாமல் தன் பக்கத்திலேயே இருக்க வைக்க அவர் செய்யும் முயற்சி போலும் இது.

பகட்டையும், ஒப்பனையையும் உண்மையென எண்ணித் தன் கணவர் மயங்கி நிற்கிறார் என்னும் பழிகரப்பு அங்கதம் இவ்வரிகளில் காணப்படுகிறது. 'தராசில் வைத்து நிறு என்பான்'

என்னும் அவரது கூற்றில், எள்ளல் கலந்த நகைச்சுவை அமைந்துள்ளது.

இவள்,
அடுக்களை வந்திடாள் - அரக்குப் பாவையோ?
கரிக்கலம் கையெடாள் - கனக சுந்தரியோ?
வாருகோ லேந்திடாள் - மகராணி மகளோ?
வெயிலில் இறங்கிடாள் - பொன்மலர் இதழோ?

தன் கணவரின் நான்காவது மனைவி வீட்டில் எந்த வேலையும் செய்யாமல் அழகும் இளமையும் காட்டிக் காலம் கழிப்பதைக் கூர்மையான சொற்களால் அங்கதப் பாணியில் கதைத் தலைவி சாடுகிறாள். இவள் என்ன அரக்குப் பாவையா; சமையல் கட்டுக்கு வந்ததும் உருகிப் போவதற்கு. இவள் என்ன தங்கத்தால் செய்யப்பட்ட அழகிபோ, கரிச்சட்டி பட்டதும் கருத்துப் போவதற்கு. இவள் என்ன நாட்டை ஆளும் இளவரசியோ, விளக்கு மாற்றைக் துடைப்பத்தைக் கையில் தூக்க வெட்கப்படுவதற்கு. இவள் என்ன பொன் போன்ற வண்ண மலரின் இதழோ; வெயில் பட்டதும் வாடிப் போவதற்கு.

இவ்வரிகள் நகைச்சுவை கலக்காத அங்கத வரிகள். கவிஞர் தேசிய விநாயகம் பிள்ளை கடுமையாகச் சாடுவதற்கு விரும்பும் இடங்களில் எல்லாம் நேரடியான சொற்களால், தெளிவாக, வினக்கமாக, ஒளி மறைவு இன்றிச் சொற்களைப் பெய்து தாக்கும் செம்பொருள் அங்கதத்தைப் பயன்படுத்துகிறார். இவ்வரிகள் ஒளிவு மறைவின்றி எளனம் செய்யும் செம்பொருள் அங்கதத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

இவளது மாமியார் கொடுங்கோல் ஓச்சும் அல்லி ராணி. வீட்டில் எல்லா அதிகாரத்தையும் தன் கைக்குள்ளேயே வைத்துக் கொள்ள விரும்பும் அரக்கி. அறைக்கு ஒரு பூட்டு என எல்லா அறைக்கும் பூட்டுப் போட்டு, எல்லாப்பொருள்களையும் தன் பாதுகாப்பிலேயே வைத்துக் காக்கும் ஒரு சுயநலக்காரி. சமையல் செய்யக் கொடுக்கும் கடுகைக்கூட எண்ணிக் கணக்கிட்டுத் தரும் கொடுமைக்காரி. தலைக்குத் தேய்க்கும் எண்ணெயைக்கூட ஆண்டுக்கு ஒரு முறை தீபாவளிக்கு மட்டும் தரும் அடக்கு முறைக்காரி. இவளது ஆட்சியில் கதைத் தலைவி

ஒருநா ளாகிலும்
கஞ்சியோ கூழோ காடி நீரோ
கும்பி யாரக் குடித்ததே யில்லை;
கந்தைத் துணிகள் கட்டின தல்லால்,
கண்டாங் கிகளைக் கண்டதே யில்லை

உழைப்பவர்களுக்குக்கூடக் கஞ்சி ஊற்றாத மாமியாரின் கொடுங்கோன்மையைக் கதைத் தலைவி ஏளனமும், அங்கதமும் கலந்து இங்ஙனம் எடுத்துரைக்கிறாள்.

எல்லோரையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு ஆயிரம் கண்ணுடைய இந்திரனைப் போலக் கண்காணிக்கும் இவளது அடாவடித் தனத்தை,

பின்னே நோக்கினும் முன்னுள தறியும்
முன்னே நோக்கினும் பின்னுள தறியும்;

எறும்பும் காணா இடத்திவள் கண்போம்;
புகையும் நுழையா இடத்திவள் புத்திபோம்.

எனச் சாடி நிற்கிறாள்.

மருமக்கள் வழி மான்மியத்தின் கேலிப் படலம் எள்ளல் சுவையை மெருகூட்டுவதற்காக எழுதப் பட்டது எனலாம்.

கதைத் தலைவியின் மகன் தனது அத்தை மகளைக் கேலி செய்கிறான். அவள் குண்டாக இருப்பதை எள்ளி நகையாடுகிறான்.

'வீர லெச்சுமி!
குலுக்கை போலக் குறுகிப் போனாயே!
எருமை போல இளைத்துப் போனாயே!
பனந்தூர் போலப் பாறிப் போனாயே!
வயிற்றில் உனக்கு மடிப்புகள் எத்தனை!
இன்னும் சிலநாள் இங்கிருப் பாயேல்.
வாசலும் வேறு மாற்றலே வேண்டும்'

விரிந்து பரந்த குலுக்கையை வீரலெட்சுமிக்கு உதாரணம் காட்டுகிறாள். ஆனால் மெலிந்து போனதாகக் கேலி செய்கிறான். பருத்த உருவம் உடைய எருமையைச் சான்று காட்டுகிறான். ஆனால் இளைத்துப் போனதாக ஏளனம் செய்கிறாள்.

எந்தக் கவலையும் இன்றி. தின்பதை மட்டுமே வேலையாக வைத்திருக்கும் அவள் இன்னும் சில காலம் தங்கியிருந்தால் வாசலைப் பெரிதாக மாற்றி அமைக்க வேண்டும் எனக் கிண்டல் அடிக்கிறான்.

நெல்லைப் போட்டு வைக்கும் குதில் காலி ஆகி விட்டதைக் கூறுகிறான். அவர்கள் வந்து நீண்டநாள் ஆகி விட்டது என்பதை அங்கதப் பாணியில் சாடுகிறான். புது நெல் வரும் வரைக்கும் இவர்கள் போக மாட்டார்கள் எனக் குறிப்பாகவும், ஏளனமாகவும் எடுத்துரைக்கிறான்.

தின்பவ னெல்லாம் தின்பான் போவான்,
திருக்கணங் குடியான் தெண்ட மிறுப்பான்

அவியல், பொரியல், துவையல் என வகைவகையாக இவர்கள் சாப்பிட எல்லாச் செலவுகளையும் தாங்கள் ஏற்க வேண்டியுள்ளது என்பதை எடுத்துரைக்கிறான். நகைச் சுவையும், கேலியும், கிண்டலும், எள்ளலும் கலந்து விளங்கும் அங்கதத்திற்கு இப்பாடல் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

ஐந்து மனைவியரையும் அழைத்துக் கொண்டு குடும்பத் தலைவர் ஒரு முறை கடலாடச் செல்கிறார். ஐந்து பேரையும் தான் ஒருவரே கடலுக்குள் அழைத்துச் செல்வது எப்படி? அலைகள் அவர்களை அடித்துச் செல்லாமல் இருக்க அவர்களது கையைப் பிடித்து நீராடுவது எப்படி?

ஏக காலத் திவர்களை எல்லாம்
அங்கை பிடித்து நீர் ஆடு தற்குநான்

பன்னிரு கரத்தப் பரமன் அல்லவே.

குடும்பத் தலைவர் தீர்க்கமாகச் சிந்தித்தார். ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்துச் சென்று கடலாடுவது எனத் தெளிவாக முடிவெடுத்தார். முடிவு சரிதான். ஆனால் நீண்ட நேரம் கடலாடியதால் அவரது ஆரோக்கியம் முடிவுக்கு வந்தது. அறுபது நாள் இடை விடாத காய்ச்சல்.

மனைவிகள் ஐந்து பேரையும் கடலுக்குள் அழைத்துச் செல்வதில் 'சினியாரிட்டி' என்னும் வரிசை முறையைப் பின்பற்றினார் எனக் கதைத் தலைவி கூறும் கூற்றில் நகைச்சுவை ஒரு புறம்; ஏன் இந்தக் கேவலம் என்ற எள்ளல் சுவை இன்னொரு புறம். இரண்டும் இணைந்த அங்கதமாக அப்பாடல் படைக்கப்பட்டுள்ளது.

கணவனின் எச்சில் இலையில் மனைவி சாப்பிடுவது என்பது சமுதாய வழக்கமாக உள்ளது. இது கடமையா? அல்லது மனைவியர் கொண்டாடும் உரிமையா? அல்லது பெண்மையை இழிவு செய்யும் தண்டனையா? அல்லது ஆண் ஆதிக்கத்தின் அடிச்சுவடா? யார் அறிவர்?

ஒரு முறை வீட்டில் ஒரு விருந்து. கணவன் உண்டு முடித்தார். எச்சில் இலையில் முதலில் யார் சாப்பிடுவது என்பதில் உரிமைப் பிரச்சினை வந்தது. அந்த உரிமை போட்டியாக மாறி. பொறாமையாக உருவெடுத்து அடிதடியில் முடிந்தது. கொண்டைப் பிடி சண்டையாகக் காட்சி அளித்தது. மண்டையில் பட்ட அடியால் பலருக்கு ரத்தம் வடிந்து ஓடியது. இது பெரும் பஞ்சாயத்தாகி நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டது. அவர் கூறிய தீர்ப்பு நகைச்சுவையும். அங்கதமும் கலந்து விளங்குகிறது.

ஒவ்வொரு நாளைக் கொவ்வொரு மனைவி
புருஷன் எச்சில் புசித்திட வேண்டும்;

இடையில் தீபாவளி, திருக்கார்த்திகை என வந்தால் ஒரே நேரத்தில் ஐந்து இலைகள் போட வேண்டும். ஐந்திலும் உணவு பரிமாற வேண்டும். ஐந்து இலைகளிலும் கணவர் கொஞ்சம் கொஞ்சம் சாப்பிட வேண்டும். எச்சில் இலையில் எஞ்சிய உணவை ஐந்து மனைவிமாரும், ஐந்து இலைகளுக்கு முன்னால் தனித்தனியாக அமர்ந்து சண்டை சச்சரவின்றி சாப்பிட்டுக் கொள்ளலாம்.

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பலதாரமணத்தை இங்கு அங்கதப் பாணியில் மிகக் கடுமையாகச் சாடி நிற்றலை நம்மால் உணர முடிகிறது. எச்சில் இலைக்கு இந்த அடிபிடியா என எல்லோரும் ஏளனம் செய்யும்படி உள்ளது. சமுதாயத்தில் காணப்படும் இந்த அவல நிலையைக் கவிமணி அவர்கள் நகைச்சுவையோடும், ஏளனத்தோடும் இங்கு எடுத்துரைக்கக் காண்கிறோம்.

குடும்பத் தலைவரை அவரது சகோதரியின் மகன் நேரில் கண்டு, அவருடன் வழக்குப் பேச வந்திருந்தான். மருமக்கள் வழித்தாய முறைப்படி, குடும்பத் தலைவரின் சொத்து அவனுக்கே உரியது. ஆதலின், அவனது குரலில் ஆணவம் இருந்தது; அச்சுறுத்தல் தெரிந்தது. கணக்குக் கேட்கும் அவனது கேள்வியில் அதிகாரம் மிகுந்து காணப்பட்டது.

இதுநாள் வரையிலும் எங்கட் காக
எதைநீர் செய்தீர்? எதை நீர் தந்தீர்?

மக்கட் கெல்லாம் வாரிக் கொடுத்தீர்.

என்று மருமகன் குற்றம் சாட்டுகிறான்.

ஆரைக் கேட்டு நீர் ஐந்துகல் யாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர்? ஐயா!
பட்டப் பெயரும் 'பஞ்சகல் யாணிப்
பின்னை' யென்று நீர் பெற்றுவிட்டீரே!

என்ற கேள்வியில் அவமானப் படுத்தும் வெறி காணப்பட்டது. அவரது தங்கை மகன் பிறப்பதற்கு முன்னேயே அவர் செய்து கொண்ட திருமணங்களுக்கு எல்லாம் பல ஆண்டுகள் கழித்துப் பிறந்த ஒரு சிறுவனுக்கு இப்போது காரணம் கூற வேண்டிய சமுதாய இழி நிலையைக் கவிமணி பரிதாபமும், சோகமும் கலந்த குரலில் அங்கதப் பாணியில் முன் வைக்கிறார்.

கள்ளன் கஜானாக் காவலன் ஆனால்,
கொள்ளை யடிப்பில் குறைவைப் பானோ?

என்று சகோதரியின் மகன் பாடும் வசைப்பாட்டில் சொத்துக்குரியவரையே கள்ளன் என்றும், கொள்ளையன் என்றும் பழித்துக் கூறும் இழி நிலை மருமக்கள் வழித் தாய முறையினால் தோன்றியதே என்பதைக் கவிமணி சொல்லாமல் சொல்கிறார். சொத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லாத ஒருவன் கைநீட்டிக் கேள்வி கேட்பதும், வசை பாடுவதும், ஏளனம் செய்வதும், அதிகாரம் செய்வதும் மருமக்கள் வழித் தாய முறையினால் தோன்றியதே என்பதைக் கவிமணி மறைமுகமாக ஆனால் மனதில் படும்படியாக எடுத்துரைக்கிறார்.

மருமக்கள் வழித் தாய முறை என்பது சமுதாயத்தைச் செல்லரித்துக் கொண்டிருக்கும் ஒரு நோய். சட்டத்திருத்தமே அதற்குரிய மருந்து என்பதையும் ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்.

இந்த நோயும், அது தரும் துன்பமும் சாதாரண மருந்துகளால் தீர்க்கக் கூடியவை அல்ல. இப்பினியின் கொடுமைகள் பேசித் தீர்க்கத் தக்கதும் அல்ல. மருமக்கள் வழித் தாய முறை என்னும் இக்கொடிய நோய் இந்தியாவை விட்டு மட்டும் அகற்றப்பட வேண்டிய நோய் இல்லை; உலகத்தை விட்டே ஓடஓட விரட்டப்பட வேண்டிய நோய்.

இந்நோய் உடனடியாகக் கண்காணிக்கப்படாமல் விடப்படுமானால் சமுதாயத்தையே அழித்துவிடும் என்பதை, 'ஆனை தின்ற விளாம்பழம்' என்ற உவமை மூலம் விளக்குகிறார்.

குடும்பத் தலைவர் விண்செலவுகள் செய்வதாக அவரது சகோதரியின் மகன் குற்றம் சாட்டுகிறான். அதற்குப் பதில் கூறிய குடும்பத் தலைவர் இச்செலவுகளில் பாதி உங்கள் வீட்டிற்காக நான் செய்த செலவாகும் எனப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

வீட்டிற்கு வந்து விருந்து தின்று, திரும்பிப் போகும் போது ஆட்டுக் கறியை உலர்த்தி உப்புக் கண்டங்களாகக் கொடுத்து விட்டதை நினைவு கூர்கிறார்.

சகோதரியின் மகனை அவர்தான் படிக்க வைத்தார்.

ஏழு வருஷமாய் இங்கிலீஷ் படித்தாயே,
ஏ.பி.ஸி.டி எழுதத் தெரியுமா?

எத்தனை பணத்தை வாரியெறிந்தேன்

எனக் கடுமையாகச் சாடுகிறார். மிகவும் துன்பப்பட்டுச் செலவழித்த பணத்தின் பெருமையை உணராமல், படிக்காமல் விட்டவன் அவன். இப்போது விண்செலவுகள் செய்ததாகக் குற்றம் சாட்டுபவனும் அவன். இது நகைப்புக்கு உரியதா? கண்டனத்துக்கு உரியதா?

"எல்லாம் பாழுக் கிறைத்த நீர்போல்
ஆக்கி விட்டாயே, அவலட் சணமே;

பாழுக்கிறைத்த நீர் போல் என்ற உவமையில் பாழாக்கியதும் செலவுகளை உருவாக்கியதும் நீயா? நானா? என்ற கேள்வி அங்கதப் பாணியில் ஒலிப்பதை நம்மால் உணர முடிகிறது.

சகோதரியின் மகன் கையில் உள்ள காசை மட்டும் வைத்துச் செலவு செய்யவில்லை. கடன் வாங்கியும், பொருள்களை அடகு வைத்தும், கணக்கில்லாமல் செலவு செய்தான் எனக் குடும்பத் தலைவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்,
போளிக் காகப் புத்தகம் பணயம்,
சீடைக் காகச் சிலேட்டுப் பணயம்,
முறுக்குக் காக மோதிரம் பணயம்,
காப்பிக் காகக் கடுக்கன் பணயம்

சகோதரியின் மகன் செய்த செலவுகள் அவசியமான செலவுகளோ, அவசரமான செலவுகளோ இல்லை. அதற்கு மாறாக, வெளியே சொல்ல வெட்கப்பட வேண்டிய செலவு வகைகள், விலைஉயர்ந்த பொருள்களையும், இன்றியமையாத பொருள்களையும் அடகு வைத்துத் தரம் தாழ்ந்த செலவுகளைச் சகோதரியின் மகன் செய்தான் எனக் குடும்பத் தலைவர் அங்கதப் பாணியில் உண்மையாகச் சாடுகிறார்.

கடும் உழைப்பிற்குப் பின்னர் கிடைக்கும் உழவின் பயன்களை, தூங்கிக் கொண்டும், 'நாயும், புலியும்' என்ற சோம்பேறிகள் ஆடும் விளையாட்டை ஆடிக்கொண்டும், புகை, குடி எனச் சமுதாய நலனைச் சீரழித்து நிற்கும் பழக்கங்களை மேற்கொண்டும் சகோதரியின் மகன் வீணாகவும், ஆடம்பரமாகவும், பயனில்லாமலும் செய்யும் செலவுகளைப் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். அவரது பட்டியல்களில் நகைச்சுவையும், ஏளனமும் பெருகிக் காணப்படுகின்றன.

"மாதா மதம் மருமகன் ராஜா
திருவுளங் கொண்டெழுந் தருளி யிருக்கும்
கொட்டா ரத்தில் கொண்டு சென்று,
அவர்,
குறட்டைச் சுருதியில் கும்ப கர்ணப்
படலம் அன்பாய்ப் பாரா யணம் செய்யும்
காலமா யிருந்தால், காத்து நின்று,

என்ற குடும்பத் தலைவரின் குரலில் வருத்தமும், ஏளனமும் இழையோடிக் கிடத்தலை அறிய முடிகிறது.

காடு மேடெல்லாம் சுற்றி, உணவும், உறக்கமும் இல்லாமல் உழைத்து அதனால் விளைந்த நெல்லைப் பக்குவப் படுத்தித் தலையில் சுமந்து குடும்பத் தலைவர் மருமகனின் வீடு வருகிறார். மருமக்கள் வழித் தாய முறை என்ற தவறான சட்டம் தந்த சுகத்தில் வீணே பொழுது போக்கிக் கொண்டிருக்கும் அல்லது பொழுது போகாமல் கும்ப கர்ணனைப் போல, நெடுநேரம் தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவனுக்காக அவர் காத்திருக்கிறார் என்பதைக் கவிமணி அவலம் தோய்ந்த குரலில் எள்ளி நகையாடுகிறார்.

சகோதரியின் மகன் திட்டியது போதாதென்று அவளது கணவனும், குடும்பத் தலைவரின் வீட்டிற்கு வந்து திட்டிச் செல்கிறான். ஆனால், மருமக்கள் வழித் தாய முறைச் சட்டம் குடும்பத் தலைவரை மௌனமாக்கி நின்றது. கதைத் தலைவியின் கணவர் என்ன செய்வார், சட்டத்தை எதிர்த்துத் தனியாக நின்று அவரால் போராட முடியுமா? ஆதலின் அவளது கணவரோ

வைய வைய வைரக் கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக் கல்லும்
ஆகி யிருந்தனர்....

நீதி மன்றத்தின் கூண்டில் ஏற்றப்படும் சாட்சிகள், தகுதியும், தரமும் இல்லாதவர்கள் என்பதைக் கவிமணி நளினமாக எடுத்துரைக்கிறார்.

பிச்சைக்காரன் பின்னொரு சாட்சி;
இருகண் னில்லா இருளப் பன்மகன்
முத்தொளி மறவன் மூன்றாம் சாட்சி

பிச்சைக்காரனும், கண் இல்லாதவனின் மகனும், பொய்யைத் தவிர எதையும் கூறாதவனும், தீயவனும்தான் நீதிமன்றத்திற்குப் பொய் சாட்சிகளாக அழைத்து வரப்படுகின்றனர் எனக் கடுமையாகச் சாடுகிறார்.

வழக்கு நடத்த வரும் எளிய மக்கள் வழக்கறிஞரிடம் வந்து விழுவது

'புற்றை விட்டுப் புறம்போ காமல்
பட்டினி கிடக்கும் பாம்பின் வாயில்
தேரை குதித்துச் சென்று விழுவது' போல்

கவிமணிக்குக் காட்சி அளிக்கிறது. ஆதலின் இரண்டையும் கவிஞர் ஒப்பிட்டுப்பார்க்கிறார். வழக்கு நடத்த வலிந்து வரும் ஏழை மக்களின் அப்பாவித் தனத்தை எண்ணி வருந்துகிறார்.

நாகம் முன்செய்த நல்வினைப் பயனோ?
தேரை முன் செய்த தீவினைப் பயனோ;

எனக் கவிமணி பரிதாபப் படுகிறார்.

எடுத்ததற்கெல்லாம் கட்டணம் வசூலிக்கும் வழக்கறிஞர்களின் இயல்பையும், ஏமாற்றுத் தனத்தையும், எள்ளல் சுவையோடு முன்வைக்கிறார்.

எழுதப் பீஸு சொல்லப் பீஸு

எழுதிய தாளை எடுக்கப் பீஸு
நிற்கப் பீஸு இருக்கப் பீஸு
நீட்டின கையை மடக்கப் பீஸு

வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணைகள்கூடக் கேலிக்கும் கண்டனத்திற்கும் உள்ளாகின்றன. வழக்கறிஞர்

ஓடும் குதிரைக்கு உச்சியில் கொம்புகள்
ஒன்றா? இரண்டா? உடன் சொல்லும் என்பார்.

குதிரைக்கு ஏது கொம்புகள் என்று நாம் கேட்டால். கோர்ட்டை அவமதித்தகுற்றம் என்பார்.

இரண்டா? ஒன்றா? என்பது என் கேள்வி
உண்டா? இல்லையா? என்று நான் உம்மிடம்
கேட்டே னாஓய்?

எனச் சட்ட நடைமுறைகளைக் கவிமணி ஏளனம் செய்கிறார்.

முடிவுரை:-

மருமக்கள் வழித் தாய முறையில் காணப்படும் குறைகளை எடுத்துக் கூறி, புதிய சட்டத் திருத்தம் கொண்டு வரும் நோக்கில் எழுதப்பட்டதுதான் மருமக்கள் வழி மான்மியம் என்னும் இந்நூல் ஆகும். ஆதலின், அங்கதமும், நகைச் சுவையும் ஊடு நூலும், பாவும் போலப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை சில இடங்களில் நளினமாகவும், நகைச்சுவையோடும் தமது கருத்துகளை முன் வைக்கிறார். சில இடங்களில் மிகக் கடுமையாகச் சாடியுள்ளார்.

பாடம் - 5

மருமக்கள் வழி மான்மியம்
- ஒரு குறுங்காப்பியம்

முன்னுரை:-

காப்பிய இலக்கணம் கூறும் முதல் தமிழ் இலக்கண நூல் தண்டியலங்காரம் ஆகும். தண்டியலங்காரம் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் ஆகிய இரண்டுக்கும் இலக்கணம் கூறுகிறது. காப்பியத்திற்கு உரிய எல்லா இலக்கணமும் பொருந்தி அமைந்தது பெருங்காப்பியம் ஆகும். அவ்விலக்கணங்களில் சில குறைந்து அமைவது சிறுகாப்பியம் ஆகும். சிறுகாப்பியத்திலிருந்து சற்று வேறுபட்டு அமைந்ததை இக்காலத்துத் தமிழ் அறிஞர்கள் குறுங்காப்பியம் எனப் பெயரிட்டு அழைகின்றனர்.

தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணம்:-

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஒன்று
ஏற்புடைத் தாகி, முன்வரல் இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலை, கடல், நாடு, வனநகர், பருவம்
இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல், புனல்விளை யாடல்
தேம்பிழி, மதுக்களி, சிறுவரைப் பெறுதல்,
புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல் என்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம், இலம்பகம்,
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிது என்ப.

-தண்டியலங்காரம்-பொதுவியல்-நூற்பா-7

தண்டியலங்காரம் கூறும் இப்பெருங்காப்பிய இலக்கணத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **பாயிரம்**: பெருங்காப்பியத்தின் பாயிரத்தில் வாழ்த்து, வணக்கம், எடுத்துக் கொண்ட பொருள் ஆகிய இந்த மூன்றனுள் ஒன்று இடம் பெற வேண்டும். இரண்டு அல்லது மூன்றும் இடம் பெறலாம்.

2. **நீதிநெறி**: அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களை விளக்கும் நீதிநெறிகள் அமைந்து இருக்க வேண்டும்.

3. **காப்பியத் தலைவன்**: ஒப்பாரும், மிக்காரும் இல்வாத தலைவன், தலைவியரைக் கொண்டு காப்பியம் விளங்க வேண்டும்.

4. **இயற்கைப் புனைவு**: மலை, கடல், நாடு, நகர், சூரிய உதயம், சந்திர உதயம் ஆகிய வர்ணனைகள் இடம் பெறுதல் வேண்டும்.

5. **வாழ்க்கைப் புனைவு**: திருமணம், முடிஆட்டு விழா, பூங்கா விளையாட்டு, புனல் விளையாட்டு, உணவு உண்ணுதல், மது உண்ணுதல், மகப்பேறு, உறவு, பிரிவு, முதலிய காதல் தொடர்ப்பான செய்திகள் இடம் பெற வேண்டும்.

6. **அரசியல் புனைவு**: காப்பியத் தலைவன் நட்பு, பகை, போர், அரியணை ஏறுதல், பகைவரைப் பிரித்தல், நண்பர்களைக் கூட்டுதல் முதலிய மந்திர ஆலோசனைகள், தூது விடுதல், படை எடுத்தல், பகைவரை வெற்றி பெறுதல், பகைவரோடு சமாதானம் ஆகுதல் ஆகிய அரசு நிர்வாகம் தொடர்பான செய்திகள் இடம்பெற வேண்டும்.

7. **காப்பியப் பகுப்பு**: சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், படலம் எனக் காப்பிய இயல்கள் பகுக்கப் பட்டிருக்க வேண்டும்.

8. **சுவை**: காப்பியத்தில் வீரச் சுவை, முதலிய சுவைகள் இடம் பெறுதல் வேண்டும்.

9. **மெய்ப்பாடுகள்**: தொல்காப்பியர் மெய்ப்பாடு எனப்படும் உணர்வுகளை எட்டாகப் பகுப்பர். அவை வருமாறு

> நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
> அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்பர்
> - தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்-நூற்பா-3

சிரிப்பு, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி ஆகிய உணர்வுகள் காப்பியத்தில் இடம் பெற்று இருக்க வேண்டும்.

10. **அணிகள்**: உவமை, உருவகம் என இலக்கியச் சுவையைக் கூட்டுகின்ற அணிகள் இடம் பெற்று இருக்க வேண்டும். அனைவரும் விரும்புமாறு கவித்துவம் கொண்டு விளங்க வேண்டும்.

குறுங்காப்பியம்:- மலை வர்ணனை, கடல் வர்ணனை ஆகிய வர்ணனைகள் குறைந்து வருவதும், அறம், பொருள், இன்பம், வீடு, ஆகிய நாற் பயன்களுள் ஏதேனும் குறைந்து வருவதும், வேறு ஏதேனும் குறைந்து வருவதும் சிறு காப்பியம் எனப்படும், கதைக்கருவும், இன்றியமையாத காப்பிய இலக்கணங்களும் கொண்டு விளங்குவது குறுங்காப்பியம் எனப்படும்.

காப்பியத்தின் பா வகைகளும், மொழி நடைகளும்

காப்பியம் எதுகை, மோனை முதலிய உறுப்புகளைக் கொண்டு விளங்க வேண்டும். வெண்பா, ஆசிரியப்பா, தாழிசை முதலிய பாவும், பா வகைகளும், கொண்டு விளங்குதல் வேண்டும். உரைநடை, கவிதை ஆகியன கலந்து வருதல் வேண்டும். சந்தம், இசைலயம் ஆகியன பெற்று வருதல் வேண்டும்.

மருமக்கள் வழி மான்மியமும் காப்பிய இலக்கணக் கூறுகளும்:-

மருமக்கள் வழி மான்மியம் என்னும் இந்நூல் மருமக்கள் வழித் தாய முறை என்ற சமுதாய சீர்கேட்டைச் சிந்தித்து அதைச் சீர்திருத்த எழுதிய சமுதாயம் பற்றிய காவியம் ஆகும். ஆதலின் அரசியல் தொடர்பான செய்திகளான தூது விடுதல், படையெடுத்தல் ஆகியன இந்நூலில் இடம்பெற வில்லை. தண்டியலங்காரம் குறிப்பிடும் அரசியல் மந்திர ஆலோசனைகளும் இல்லை. ஆனால், வழக்குத் தொடர்பான மந்திர ஆலோசனைகள் உள்ளன.

அரசன் பகைவரோடு சமாதானம் ஆகுதல் என்ற செய்தி இல்லை. ஆனால், சகோதரியின் மகனோடு சமாதானமாகப் போவதே உத்தமம் என வெள்ளையம் பிள்ளை வேண்டி நிற்கும் காட்சிகள் உள்ளன.

அரசன் தூதுவிடும் காட்சிகள் இல்லை. ஆனால் வெள்ளையம் பிள்ளை தானே வலிந்து தூதுவராக வந்து வாதிகளின் விருப்பங்களை எடுத்துரைக்கும் காட்சிகள் உள்ளன. அரசு நிர்வாகம் பற்றிய செய்திகள் இல்லை. ஆனால் குடும்ப நிர்வாகம் பற்றிய நிகழ்ச்சிகளும், கருத்துகளும் நூல் முழுவதும் பரந்து காணப்படுகின்றன.

படலங்கள்:

பெருங்காப்பியங்களில் காணப்படும் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் ஆகியன இந்நூலில் இல்லை. ஆனால் பெருங்காப்பியங்களில் காணப்படும் படலம் என்ற காப்பியப் பகுப்பு உள்ளது. இந்நூல் மொத்தம் பதினொன்று பகுப்புகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

1. குலமுறை கிளத்துப் படலம்
2. மாமி அரசியற் படலம்
3. கேலிப் படலம்
4. கடலாடு படலம்
5. பரிகலப் படலம்
6. நாகாஸ்திரப் படலம்
7. கருடாஸ்திரப் படலம்
8. வாழ்த்துப் படலம்
9. கோடேறிக் குடிமுடித்த படலம்
10. யாத்திரைப் படலம்
11. கும்பியெரிச்சல் படலம்

படலத்தின் பெயர்கள், படலக் கருத்து முழுவதையும் ஒரே சொல்லில் வடித்துக் கூறுவனவாக பொருள் பொதிந்து காணப்படுகின்றன. விருப்பு, வெறுப்புகளை அசைபோட்டு அரசாளும் மாமியின் நடவடிக்கைகள் மாமி அரசியற் படலம் என்ற பெயரோடு விளங்குகிறது.

குடும்பத் தலைவரின் மருமகன் வசைகளாகிய நஞ்சுகளைக் கணைகளாகத் தொடுக்கிறான். அது நாகாஸ்திரப் படலம் எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

குடும்பத் தலைவர் மருமகனுக்கு முன் நின்று எதிர்க்கணைகளைத் தொடுக்கிறார். நாகத்திற்கு எதிரியாக விளங்கும் கருடனை நினைவு கூர்ந்து கருடாஸ்திரப் படலம் என அது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நீதிமன்றம் ஏறி, கையில் உள்ள பணத்தை எல்லாம் கரைத்து விட்டுக் குடியையே மூழ்கடித்த நிகழ்ச்சியைச் சுட்டும் படலம் கோடேறிக் குடிமுடித்த படலம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

படலங்களின் பெயர்களில் அங்கதப் பொருள்:-

இந்நூல் ஒரு அங்கதக் காப்பியம் ஆதலின் படலங்களின் சில பெயர்கள் அங்கதப் பொருளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

குடும்பத் தலைவரது சகோதரியின் கணவன் வசை பாடுகிறார். இது எள்ளல் உணர்வுடன் வாழ்த்துப் படலம் எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

குடும்பத் தலைவரின் மரணம் தந்த சோகத்தைச் சுமந்து நிற்கும் படலம் யாத்திரைப் படலம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டு படலத் தலைப்புகளும் பழிகரப்பு அங்கதம் என்ற வகையைச் சேர்ந்தவை ஆகும். நேரிடையாக வசைபாடும் அல்லது குறைகூறும் நாகாஸ்திரப் படலம், கருடாஸ்திரப் படலம், கும்பியெரிச்சல் படலம் ஆகியன செம்பொருள் அங்கத வகையைச் சார்ந்தவை ஆகும்.

இயற்கைப் புனைவு இன்மை

மருமக்கள் வழி மான்மியம் என்னும் இக்குறுங்காப்பியத்தில் நாடு, நகர், மலை, சூரிய உதயம், சந்திர உதயம், ஆகிய இயற்கை வர்ணனைகள் இடம் பெறவில்லை. நாஞ்சில் நாடு நாஞ்சில் மலை காரணமாகப் பெயர் பெற்ற நாடு. எனினும், இந்நூலில் மலை வர்ணனை இடம் பெற வில்லை. சமுதாயச்சிந்தனையே முழுக்க முழுக்க இந்நூலில் இடம் பெற்று இருப்பதால் கவிமணியின் கவனம் இயற்கைப் புனைவை நாடவில்லை போலும்.

குடும்பத் தலைவன் தன் மனைவியரோடு கடலாடுவதாக ஒரு படலம் முழுவதும் காட்சி வருகிறது. ஆனால் அங்கும் கடல் பற்றிய வர்ணனை இல்லை.

வாழ்க்கைப் புனைவு

வாழ்க்கைப் புனைவுகளில் திருமணம் பற்றிய பேச்சு உள்ளது. திருமணக் காட்சிகள் இடம் பெறவில்லை. புனல் விளையாட்டு உள்ளது; பூங்கா விளையாட்டு இல்லை.

காதல் உரையாடல் - அங்கத உணர்வின் வெளிப்பாடு

குடும்பத் தலைவர் தன் நான்காவது மனைவியோடு காதல் உரையாடும் பேச்சுகள், நையாண்டி மேளமாக வாசிக்கப்படுகின்றன.

தங்கப் பெண்ணே தாராவே!
தட்டான் கண்டால் பொன் என்பான்
தராசிலே வைத்து நிறு என்பான்
எங்கும் போகாமல் இங்கேயே யிரு (வரிகள் 73-76)

என்னும் காதல் உரையாடலில் காதல் உணர்வைவிடக் கிண்டல் செய்யும் அங்கத உணர்வே விஞ்சி நிற்கிறது.

பாயிரம்

பெருங்காப்பியத்தின் பாயிரத்தில் வாழ்த்து, வணக்கம் எடுத்துக் கொண்ட பொருள் ஆகிய இந்த மூன்றுமே இந்நூலில் இடம் பெற்று இருப்பதைக் காண்கிறோம்.

கடவுள் வாழ்த்து

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் நூலின் தொடக்கத்தில் 'யானை நீள்கரம் ஏந்திய' விநாயகர் கடவுளை வணங்கி நூலின் பொருளை வழிமொழிகிறார்.

அங்கதப் பொருளில் இருந்து சிவனும் திருமாலும் விலக்குப் பெறாமை

கடவுள் வாழ்த்தில்கூட கவிமணியின் அங்கத உணர்வு இழையோடி நிற்கிறது. விநாயகப் பெருமான் அன்பர்கள் வேண்டும் அனைத்தையும் அளிக்க வல்லவன், உலகலாம் போற்றும் ஒருவன் என விநாயகரைப் போற்றிப் புகழ்ந்தாலும் அவரது தந்தையாகிய சிவனை எள்ளல் சுவை மிளிரக் கிண்டல் செய்கிறார்.

உனது தந்தையோ,
என்றும் கையில் தலையோ டேந்தி
இரந்து திரிவான் இருப்பிட மில்லான்,
அம்பலந் தோறும் ஆடி அலைவான்,
அமிழ்தென நஞ்சையும் அள்ளி யுண்பான்,

தேவர்கள் வாழ அவர்களுக்கு அமுதைத் தந்து விட்டு, உலகம் வாழத் திருப்பாற் கடலில் விளைந்த பாம்பின் நஞ்சைத் தானே உண்டார், அவர் செய்த இத்தியாகம்கூட நகைச்சுவையோடு கேலி செய்யப்படுகிறது.

சிவபெருமானைப் போன்றே திருமாலையும் கவிமணி கிண்டல் செய்கிறார். ஆயிரம் படங்களையுடைய ஆதிசேடனை படுக்கையாகக் கொண்டு, அறிதுயில் கொண்டு அகிலம் எல்லாம் காத்து ஆளும் அண்ணல் எனத் திருமாலை ஒருபுறம் புகழ்கிறார். மறுபுறம் திருமால்.

கபட நாடகன்; கையிற் சக்கரம்
இருந்தும், எவர்க்கும் ஈயாக் கள்வன்

எனக் கின்டல் செய்கிறார். தீமைகளை அழித்து அறத்தைக் காக்கத் திருமால் அறிவாற்றலுடன் செய்யும் செயல்கள் கபட நாடகம் எனக் கேலி செய்யப்படுகிறது.

கதைக்கரு

காப்பியத்தின் பொருள் அமைதியாகக் கவிமணி எடுத்துக் கொண்ட பொருள் சோகம் நிறைந்த ஒரு கதைத் தலைவியின் சுயசரிதை ஆகும். இக்கதையைக் கதைத் தலைவி தானே கூறுவது போல அமைத்துள்ளார் கவிமணி. இதனால் கதை முழுவதும் சோகத்தின் குரலைக் கேட்க முடிகிறது. பிறந்த இடத்தில் வறுமையின் தொல்லை. புகுந்த இடத்தில், மருமக்கள் வழித்தாய முறையைக் கையில் எடுத்துக் கொண்டு, அடாவடித் தனம் செய்யும் மருமக்களினால் தொல்லை. சகோதரியின் கணவனால் தொல்லை.

உவமைநலம்

மருமக்கள் வழி என்னும் காட்டில் திசை தெரியாமல் நிற்கும் புள்ளி மானாகக் கதைத் தலைவி காட்சி தருகிறாள். அவளைச் சுற்றிக் கணவரின் நான்கு மனைவியர், தனது மாமியார், குடும்பத் தலைவரின் சகோதரியின் கணவர், சகோதரியின் மகன் ஆகிய புலிகள் சூழ்ந்து அப்புள்ளி மானைச் சொல்லாலும், செயலாலும் அடித்துக் குதறுகின்றன. வேடனின் வலையில் பட்ட ஒரு மணிப்புறாவைப்போல அவள் செய்வது அறியாது திகைத்து நிற்கிறாள். ஆதலின், பற்றிப் படரக் கொம்பு கிடைக்காத கொடியைப்போல அவள் துவண்டு கிடக்கிறாள்.

மருமக்கள்வழி யென்னும் வனத்தில்
புலிகள் சூழுமோர் புள்வாய் போல
வலையிற் படுமோர் மணிப்புறாப் போல
கொள்கொம் பற்றுத் துவள்கொடி போல

எனக் கூறும் கவிமணியின் கூற்றில் உணர்ச்சிகள் பீறிட்டு எழுகின்றன.

காப்பியம் என்னும் கல்மண்டபம் வடிவம், உணர்ச்சி, கருத்து, கற்பனை என்னும் நான்கு தூண்களால் தாங்கப் படுகிறது. இக்குறுங்காப்பியத்தில் இந்நான்கு தூண்களும் மிக வலுவாக அமைக்கப்பட்டுள்ளன.

உணர்ச்சி:-

நூல் முழுவதும் உணர்ச்சி, பிழம்பாகக் கொளுந்துவிட்டு எரிகிறது. பதினாறு வயதில் வயதான ஒருவற்கு ஐந்தாவது மனைவியாகத் திருமணம் முடித்து வைக்கப்பட்ட கதைத் தலைவி வயதான கணவனிடம் இருந்து என்ன இன்பத்தை எதிர்பார்க்க முடியும். குடும்பத் தலைவரின் மனைவியரும், அவர்களோடு சேர்ந்து கொண்டு மாமியாரும் அவளைக் கால் பந்தாக எற்றி உதைக்கின்றனர்.

அத்தனை பேருக்கும் அடிமை யாளாய்
ஏழை பாவி யானும் ஒருத்தி,
எளியேன் சென்ற நாள்முத லாக
எல்லா வேலையும் என்தலை மேலாம்

எனக் கதைத் தலைவி கூறும் கூற்று, கதைத் தலைவியின் உள்ளத்தை மட்டுமல்லாமல் படிப்பவரின் உள்ளத்தையும் கரைத்து நிற்கிறது. இனம் புரியாத சோகம் எல்லோர் மனத்தையும் பிசைகிறது.

துயரம்: துயரம், பிறப்பே துயரம்!
பிறப்பினும் துயரம் பெண்மக ளாதல்,
பெண்மக ளாதலிற் பெரிதும் துயரம்
மருமக்கள்வழி வலையிற் படுதல்;

என்னும் கூற்று கதைத் தலைவியின் துயரத்திற்கு மருமக்கள் வழித் தாய முறையைக் காரணம் காட்டி நிற்கிறது.

"மகளிராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டும் அம்மா" என்று இன்பத்தைப் பெற்று மகிழும் மகளிர் பாடுவதைப்போலக் கதைத் தலைவியால் பாட முடியவில்லை. நடுக்கடலில் நின்று கொண்டு கரை தெரியாமல் தவிக்கும் கப்பலின் மாலுமியைப்போலக் கதைத் தலைவி இன்பம் என்னும் பாதை இருக்கும் திசை தெரியாமல் திகைக்கிறாள்; தடுமாறுகிறாள். அவளுக்கு பிறப்பே துயரமாகப் படுகிறது. பிறந்த பிறவியிலும், பெண் மகளாகப் பிறந்ததை எண்ணி அவள் மனம் வேதனையில் துடிக்கிறது.

மருமக்கள் வழி வலையில் சிக்கிய புறா – உவமைநலம்

மருமக்கள் தாய முறை என்னும் வலையிலே சிக்கிய புறாவைப் போல வருந்துகிறாள். ஐந்து மனைவியருக்கு இடையே அகப்பட்டு, வாழ்க்கைப் பாதை தெரியாமல் விளங்கும் காரணவருக்கு கழுத்தைக் கொடுத்த நிலை அவளது துயரத்தைப் பெருக்கி நிற்கிறது. கருணையே இல்லாத மாமியாரின் மனம் கோணாமல் நடந்து கொள்ளும் முறையைப் பதினாறே வயதான கதைத் தலைவி எங்ஙனம் கற்றிருக்க முடியும். உலகில் உள்ள பெண்கள் எல்லாம் அனுபவிக்கும் துயர் அனைத்தையும் அவள் ஒருத்தியே அனுபவிப்பதுபோலத் துடிக்கிறாள். இந்தத் துயரத்திலும் உடம்பில் அவளது உயிர் தங்கி நிற்பது அவளுக்கு அதிசயமாகப் படுகிறது; அதிர்ச்சியாகவும் படுகிறது.

துன்பியல் முடிவு

வழக்குகளில் சிக்கி வாடிவதங்கிக் குடும்பத் தலைவர் நடைப்பிணமாக வாழ்ந்தவர் மரணப் படுக்கையில் கிடக்கிறார்.

கணவர்,
ஏங்கி யழுத எங்களை நோக்கினர்,
வாடி யழுத மக்களை நோக்கினர்,
கடவுளை எண்ணிக் கையை எடுத்தனர்;
கண்ணை மூடினர், கயிலை போய்ச் சேர்ந்தனர்

தாலி கட்டிய கொஞ்சக் காலத்தில் எந்த இன்பத்தையும் அனுபவிக்காமல், துன்பமே துணை என வாழ்ந்த ஓர் இளம் பெண் விதவை ஆகிறாள். இது எந்த வகையில் நியாயம்; எந்த வகையில் நீதி?

நீதியும் உளதோ! நீதியும் உளதோ!
மாதர் கண்ணீர் மாறா நிலத்தில்
நீதியும் உளதோ! நீதியும் உளதோ

எனச் சமுதாயத்தை நோக்கிக் கதைத் தலைவி கேட்கும் கேள்வி கற்போர் அனைவரையும் கண் கலங்க வைக்கிறது.

கருத்து:-

காப்பியத்தின் அடுத்த தூண் கதைக் கரு எனப்படும் கருத்து ஆகும். எடுத்துக் கொண்ட பொருளைச் சேரும் இடம் நோக்கிச் செலுத்திய கவிஞராகக் கவிமணி விளங்குகிறார். சமுதாயத்தையே செல்லரித்துக் கொண்டு நின்ற மருமக்கள் வழித் தாய முறைச் சட்டத்தைத் தனி ஒரு நூலாக நின்று இந்நூல் மாற்றியது. ஏட்டுச் சுவடியில் இருந்த நூலை அச்சில் பதிக்கிற பாவனையில் இந்நூல் திருவனந்தபுரத்தில் இருந்து வெளியான தமிழன் என்ற இதழில் வெளிவந்தது. 1917-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் தொடங்கிப் பகுதிபகுதியாக வெளிவந்து கொண்டு இருந்தது. 1918 பிப்ரவரித்திங்களோடு முற்றுப் பெற்றது. இளைஞர்கள் இதனை வாசித்து உள்ளம் கொதித்தார்கள். அவர்களில் முதியோர்கள் இதனை வாசித்த அளவில் இதிலே பொதிந்து கிடக்கும் உண்மையையும் சீர்திருத்தத்தின் அவசியத்தையும் உணர்ந்தார்கள். இதன் விளைவாக மருமக்கள் வழித் தாய முறைச் சட்டம் அரசால் மாற்றப்பட்டது. மக்கள் தாய முறைச் சட்டம் அமுலுக்கு வந்ததெனின் கதைக் கரு பெற்று இருந்த வலிமையும், சமுதாயத்தில் அது செய்த சீர்திருத்தமும் சொல்லாமலேயே விளங்கும்.

கற்பனை:- காப்பியச்செய்திகள்

கதைத் தலைவியின் துயரங்களை விளக்கக் கவிமணி இதிகாச, புராண வரலாறுகளை எடுத்து முன்வைக்கிறார். உலகம், அறிந்த காப்பியத் தலைவிகளின் துயரங்களை கதைத்தலைவியின் துயரத்தோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். அனைவரும் எளிதில் புரிந்து கொள்ள இது வழிவகுக்கும் என்பது கவிமணியின் நோக்கமாக இருக்கலாம்.

காசினி மீதென் கதைபோல் இல்லை
சீதையின் கதையும் சிறுகதை யாகும்,
பாஞ்சா லியின்கதை பழங்கதை யாகும்;
தமியேன் கதைக்குச் சந்திர மதிகதை
உமியாம் தவிடாம் ஊதும் பொடியாம்

கதையில் வரும் மாந்தர்களின் துயரங்கள், சமுதாயத்தில் வாழும் தலைவியின் துயரங்களோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

கதைத் தலைவியின் மாமியார் ஆடிய திருவிளையாடல்களை, திருவிளையாடற் புராணத்தை இயற்றிய பரஞ்சோதியைப் போன்று பத்துப் பரஞ்சோதிகள் வந்து பாடினாலும், பாடி முடிக்க முடியாது எனக்கதைத் தலைவி கூறும் கூற்றில் பத்துப் பரஞ்சோதிகளைப் பற்றிய கற்பனை சுவைக்கும்படியாக உள்ளது.

புராணச் செய்திகள்

மனைவிமார்களை அழைத்துக் கொண்டு கடலாடச் சென்ற குடும்பத் தலைவர் ஒரே நேரத்தில் ஐந்து மனைவிமார்களையும் கடலுக்குள் அழைத்துச் சென்று நீராட முடியாமல் நிற்கிறார். அப்போது புராணக் கதைமாந்தர்களை கற்பனை செய்துப் பார்க்கிறார்.

ஏக காலத் திவர்களை யெல்லாம்
அங்கை பிடித்துநீர் ஆடு தற்குநான்
பன்னிரு கரத்தப் பரமன் அல்லவே;
இருபது கரத்தவ் இராக்கதன் அல்லவே,
ஆயிரங் கரத்தவ் அண்ணலும் அல்லவே!

ஐந்து மனைவியரையும் ஒருசேர அழைத்துச் சென்று கடலாட வேண்டுமானால், அவர் பன்னிரண்டு கைகளையுடைய முருகனாக இருக்க வேண்டும். அல்லது இருபது கைகளை உடைய இராவணனாக இருக்க வேண்டும். அல்லது ஆயிரம் கைகளை உடைய வாணாசுரனாக இருக்க வேண்டும் எனப் புராண மாந்தர்களோடு தன்னை ஒப்பிட்டுக் கற்பனை செய்து பார்க்கிறார்.

துணை நிலைப் பாத்திரங்கள் : உவமைநலம்

கதைத் தலைவியின் மகன் தனது அத்தை மகள் குண்டாக இருப்பதைக் கண்டு கிண்டல் அடிக்கிறான். அவள் குலுக்கைபோலக் குறுகிப் போனாள் எனவும், எருமைபோல இளைத்துப் போனாள் எனவும் அவளைக் குலுக்கையோடும், எருமையோடும் கற்பனை செய்து காண்கிறான்.

மொழிநடை: வட்டார வழக்கு மொழிகளும் பேச்சுமொழிகளும்

கவிமணி தாம் பாடும் பாடலின் கருத்துகள் படிப்பறியாத மக்களுக்கும் காதில் கேட்ட அளவில் சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்துடன் எளிய சொற்களையும் மக்கள் பேசும் பேச்சு வழக்கையும், பழமொழிகளையும் அதிகம் பயன்படுத்தி உள்ளார். 'அடேய்', 'பிலே' (பயலே), என வட்டார வழக்குச் சொற்களைப் பயன்படுத்துகிறார். 'படித்து பி.ஏ பாசாய்', 'ஆறு வருஷமாய் ஐகோர்ட் வரையும்' என வழக்கில் உள்ள ஆங்கிலச் சொற்கள், வடமொழிச் சொற்கள் ஆகியவற்றையும் பயன்படுத்துகிறார்.

"ஏழு வருஷமாய் இங்கிலீஷ் படித்தையே,
ஏ,பி,ஸி,டி, எழுதத் தெரியுமா"

எனப் படிக்காத பாமரர்கள் பேசும் மொழியில் சொற்களைப் பெய்துரைக்கிறார்.

பழமொழிகள்

தின்பவ னெல்லாம் தின்பான் போவான்
திருக்கணங் குடியான் தெண்ட மிறுப்பான்

கள்ளன கஜானாக் காவலன் ஆனால்
கொள்ளை யடிப்பில் குறைவைப் பானோ?

என நாஞ்சில் நாட்டில் பாமர மக்கள் பயன்படுத்தும் பழமொழிகளையும் பயன்படுத்துகிறார்.

இலக்கியச் சுவை:- எதுகை மோனை :

பாட்டின் சொற்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை; முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும். நூல் முழுவதும் எதுகை, மோனை பரந்து காணப்படுகிறது.

ஆசை அங்கே, அன்பும் அங்கே;
பூசை இங்கே! போசனம் இங்கே!

என்னும் வரிகள் எதுகை, மோனையை எளிய நடையில் எடுத்து முன்வைக்கின்றன.

ஊரை முழுதும் உழக்கால அளப்பாள்
நாட்டை முழுதும் நாழியால் அளப்பாள்

என்பதில் மோனை இனிமை தருகிறது.

இசைலயம்:-

மொழி நடை இனிய இசைலயத்தோடு நூல் எங்கும் காட்சி அளிக்கின்றது.

காடும் மேடும் கரையும் சுற்றி,
ஊணும் உறக்கமும் இன்றி உழைத்து
ஈரமும் பதரும் இல்லா தகற்றி

சொற்களில் அமைந்த ஏற்ற இறக்கங்கள், பாடலில் பளிச்சிடும் இசைலயத்தைப் பறை சாற்றி நிற்கின்றன.

வைய வைய வைரக் கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக் கல்லும்

என்னும் வரிகள் ஒரு குதிரை ஓட்டத்தின் தாளத்தை ஒரு கொட்டு மேளத்தின் தட்டுதலை நினைவு கூர்கின்றன.

காப்பிய முடிவு

கதையின் தலைவராகக் குடும்பத் தலைவரே விளங்கினாலும், அவர் கையாலாகாதவராகக் காட்டப்படுகிறார். சுயசரிதையைக் கதையாகக் கூறும் கதைத் தலைவியே இக்குறுங் காப்பியத்தில் பெரும்பங்கு ஆற்றுகிறாள்.

காப்பியங்களை அவற்றின் முடிவை மையமிட்டு இருவகையாகப் பகுப்பது மரபு.

1. இன்பியல்

2. துன்பியல்

மருமக்கள் வழித் தாய முறையினால் தோன்றிய சமுதாயச் சீர்குலைவை எடுத்துரைத்து, அச்சமுதாயம் படும் அல்லல்களையும், முடிவில்லாச் சோகங்களையும் முன்வைப்பது இக்குறுங்காப்பியத்தின் குறிக்கோள். ஆதலின் சமுதாயமே சோகத்தில் வீழ்ந்து கிடக்கிறது என்பதை விளக்கி நிற்கும் இக்கதைக் கரு துன்பியல் முடிவைக் கொண்டது.

காரணவர் எனப்படும் குடும்பத் தலைவரின் மரணம் என்னும் கடைசி யாத்திரையோடு

கதை முடிகிறது.

மெய்ப்பாடுகள்:-

மருமக்கள் வழி மான்மியத்தில் நகைச் சுவையும், அழுகையும் இரு கண்களாகக் காட்சி தருகின்றன. எழுச்சியற்று, உயிரற்றுக் கிடக்கும் சமுதாயத்தின் அவலம் அதிகம் பேசப்படுகிறது. இதுகண்டு கவிஞர் கொள்ளும் சினம் சமுதாய மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் பாவனையில் முன்வைக்கப் படுகிறது. சகோதரியின் மகனுக்கும், அவளது கணவனுக்கும் அஞ்சியஞ்சிச் சாகும் குடும்பத் தலைவரின் அச்சம் மெல்லிய நூல்போல இழையோடிக் கிடக்கிறது. நூல் முழுவதும் பெருமிதமோ, உவகையோ காணப்படவில்லை.

நகை: (சிரிப்பு)

குடும்பத் தலைவன் தனது நான்காவது மனைவியைத் தங்கப்பெண் ஆகவும், விண் மீனாகவும் உருவகிக்கும் காட்சி நகைச்சுவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

கதைத் தலைவியின் மகன் தனது அத்தை மகளைக் குலுக்கையோடும், எருமையோடும் ஒப்பிட்டுக் கேலி செய்யும் காட்சி, நகைச்சுவை ததும்பும் காட்சி.

ஓர் கிழட்டுக் குடும்பத் தலைவர் ஐந்து மனைவியரோடு, கடலாடி நின்ற காட்சி, சிரிப்புக்கும், சிந்தனைக்கும் உரிய காட்சி.

அழுகை:-

மருமக்கள் வழி மான்மியம் என்னும் இந்நூல் இளம் வயதில் ஒரு கிழவனை மணந்த கதைத் தலைவியின் கண்ணீர்க் காவியம். ஆதலின், நூல் முழுவதும் துயரத்திற்கும், சோகத்திற்கும் குறைவே இல்லை.

> கதைத் தலைவி சிலப்பதிகாரக் கண்ணகியின் பாணியில்,
> கற்றவர் உளரோ! கற்றவர் உளரோ!....
> அறிஞரும் உளரோ! அறிஞரும் உளரோ!....
> நீதியும் உளதோ! நீதியும் உளதோ!....
> தெய்வமும் உளதோ! தெய்வமும் உளதோ!....

எனச் சமுதாயத்தில் உள்ள அறிஞர்களையும், கற்றவர்களையும், நோக்கி அறைகூவல் இட்டு அவலத்தில் அலறும் காட்சி சோகத்தின் உச்சக் காட்சி. நீதியையும், தெய்வத்தையும் அழைத்து மாதர் கண்ணீர் மாறா நிலையை எடுத்து இயம்பும் காட்சி, இதயத்தைப் பிழியும் காட்சி.

இளிவரல்:- (இழிவு)

பரிகலப் படலத்தில் கணவன் உண்ட எச்சில் இலையில் ஐந்து மனைவியரும் உண்ணக் கடுமையாகப் போட்டி போடுவதும், அதற்காக அடிதடியில் இறங்குவதும், அது ஊர்ப் பஞ்சாயத்துக்குப் போவதும் இடையிலே ஒருவர் வந்து ஐந்து இலைகளை விரித்து அவற்றில் கணவன் உண்டபின், மீதம் இருக்கும் எச்சில் சோற்றை ஐந்து மனைவியரும் தனித்தனியாக ஆளுக்கொரு இலையில் அமர்ந்து எச்சிலை உண்ண வேண்டும் எனத் தீர்ப்பு வழங்குவதும்

அறுவறுப்பு, இழிவு ஆகிய மெய்ப்பாடுகளுக்குச் சிறந்தசான்று ஆகும்.

பாடுபட்டுத் தேடி விளைவித்த நெல்லை மாதா மாதம் மருமகன் ராஜா வீட்டில் கப்பம் கட்டுவது போலக் கை கட்டி நிற்கும் குடும்பத் தலைவரின் நிலை இழிவு என்னும் பொருளை உடைய 'இளிவரல்' என்னும் மெய்ப்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

குடும்பத் தலைவரது சகோதரியின் கணவன் வீட்டிற்கு வந்து கடுமையாக வசைபாடி நின்ற போதும், வைய வைய வைரக்கல்லாக, திட்டத்திட்ட திண்டுக் கல்லாக அவமானம் காரணமாக கூனிக்குறுகிக் குடும்பத் தலைவர் நின்றதும் இழிவு என்னும் மெய்ப்பாட்டை மெய்ப்பிக்கும் சான்று.

முடிவுரை:-

மருமக்கள் வழி மான்மியம் காப்பியமாக வடிவமைக்கும் நோக்கத்தில் எழுதப்பட்ட காவியம் அன்று, சமுதாய மக்களைச் சிந்திக்க வைத்துத் தூங்கிக் கிடக்கும் உள்ளத்தில் எழுச்சியை உருவாக்கும் நோக்கில் எழுதப்பட்ட சமுதாயச் சீர்திருத்த நூல். சமுதாயச் சிந்தனைக்கு முன்னுரிமை தந்தாலும், குறுங்காப்பியம் என்னும் இலக்கியத்திற்குரிய இலக்கணக் கூறுகளும் பெருகிக் கிடத்தலை மேற்கூறிய சான்றுகள் நிறுவுகின்றன.

வினாவங்கி

1. மருமக்கள் வழி மான்மியத்தில், கதைத் தலைவியது சுயசரிதையில் எள்ளலும், சோகமும் இழையோடி நிற்கும் பாங்கினை விளக்குக?
2. நாகாஸ்திரப் படலம், கருடாஸ்திரப் படலம் வழி அறியலாகும் மருமக்கள் வழி மான்மியச் சமுதாய நிலையை விளக்குக:
3. நீதிமன்றம் செல்வோர் எதிர்கொள்ளும் சிக்கல்களையும், அவற்றால் நேரும் விளைவுகளையும் 'கோடேறிக் குடிமுடித்த படலம்' வழி நின்று விளக்குக?
4. நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியத்தில் நகைச்சுவையும், அங்கதமும் கலந்து விளங்கும் பாங்கினை எடுத்துரைக்க.
5. "மருமக்கள் வழி மான்மியம் ஒரு குறுங்காப்பியம்" என்று கூறுவதன் பொருத்தத்தை ஆராய்க.

இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம்

1. ஏழையென் துயரம் எல்லாம் கேளும்;
காசினி மீதென் கதைபோல் இல்லை
சீதையின் கதையும் சிறுகதை யாகும்
பாஞ்சா லியின்கதை பழங்கதை யாகும்
தமியேன் கதைக்குச் சந்திர மதிகதை
உமியாம், தவிடாம், ஊதும் பொடியாம் (வரிகள் - 6-11)

-மருமக்கள் வழித் தாய முறையால் கதைத் தலைவிக்கு ஏற்படும் துயரங்களை அவள் தனக்குள்ளே கூறியது.

2. தங்கப் பெண்ணே தாராவே!
தட்டான் கண்டால் பொன் என்பான்
தராசிலே வைத்து நிறு என்பான்
எங்கும் போகாமல் இங்கேயேயிரு (வரிகள் - 73-76)

- காரணவர் எனப்படும் குடும்பத் தலைவர் அழகும், இளமையும் கொண்ட நான்காவது மனைவியை நோக்கி, வர்ணனை செய்தது. அங்கதம் கலந்த நகைச்சுவையுடன் கதைத்தலைவி இதனை முன் வைக்கிறாள்.

3. அடுக்களை வந்திடாள் - அரக்குப் பாவையோ?
கரிகலம் கையெடாள் - கனக சுந்தரியோ? (வரிகள் - 79,80)

- குடும்பத் தலைவரின் நான்காவது மனைவி வீட்டில் எந்த வேலையும் செய்யாமல் அழகும் இளமையும் காட்டிக் காலம் கழிப்பதை அங்கதப் பாணியில் கதைத்தலைவி எள்ளி நகையாடுகிறாள்.

4. கஞ்சியோ கூழோ காடி நீரோ
கும்பி யாரக் குடித்ததே யில்லை; (வரிகள் - 16,17)

- குடும்பத் தலைவரின் மனைவி தரும் துயரங்களைக் கதைத் தலைவி சோகம் நிரம்பிய குரலில் கூறுகிறாள்.

5. எறும்பும் காணா இடத்திவள் கண்போம்;
புகையும் நுழையா இடத்திவள் புத்திபோம். (வரிகள் - 27,28)

- மாமியார் அரசியற் படலத்தில்/கதைத் தலைவி மாமியாரைப் பற்றி மிகக் கடுமையாக இங்ஙனம் விமர்சனம் செய்கிறாள்.

6. தின்பவ னெல்லாம் தின்பான் போவான்,
திருக்கணங் குடியான் தெண்ட மிறுப்பான் (வரிகள் - 16,17)

- கேலிப் படலத்தில், அனுபவிப்பவன் ஒருவன் தெண்டத் தீர்வை கட்டுபவன் இன்னொருவன் என்பதை நையாண்டியாகக் குறிப்பிடுகிறார்.

7. ஏக காலத் திவர்களை எல்லாம்
அங்கை பிடித்துநீர் ஆடு தற்குதான்
பன்னிரு கரத்தப் பரமன் அல்லவே. (வரிகள் - 17,19)

- கடலாடு படலத்தில்/குடும்பத் தலைவர் தன் ஐந்து மனைவியரையும் அழைத்துக் கொண்டு கடலாடச் செல்கிறார். ஐந்து மனைவியரையும் ஒரே நேரத்தில் கடலுக்குள் அழைத்துச் சென்று நீராட முடியாத தன்னுடைய நிலைமையை இங்ஙனம் அங்கதமும், நகைச் சுவையும் கலந்து கூறுகிறார்.

8. துயரம்: துயரம். பிறப்பே துயரம்!
பிறப்பினும் துயரம் பெண்மக ளாதல்.
பெண்மக ளாதலிற் பெரிதும் துயரம்
மருமக் கள்வழி வலையிற் படுதல்; (வரிகள் - 67-70)

- பரிகலப் படலத்தில்,/ ஏழைக் குடும்பத்தில் பிறந்து மருமக்கள் வழி தாய முறை காரணமாகச் செயற்கையான வறுமையில் வாடும் கதைத் தலைவியின் கூற்று இது.

9. ஆசை அங்கே. அன்பும் அங்கே;
பூசை இங்கே! போசனம் இங்கே! (வரிகள் - 52,53)

- நாகாஸ்திரப் படலத்தில். குடும்பத் தலைவரது சகோதரியின் மகன் அவரை நோக்கி விடும் நாக அஸ்திரம் இது.

10. ஆரைக் கேட்டு நீர் ஐந்துகல் யாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர்? ஐயா!
பட்டப் பெயரும் 'பஞ்சகல் யாணிப்
பிள்ளை' யென்று நீர் பெற்று விட்டீரே! (வரிகள் - 54,57)

- நாகாஸ்திரப் படலத்தில்,/குடும்பத் தலைவரது சகோதரியின் மகள் அவரை நோக்கிவிடும் நாக அஸ்திரம் இது. குடும்பத் தலைவர் ஐந்து திருமணம் செய்து கொண்டதை அவரது சகோதரியின் மகன் எள்ளி நகையாடுகிறான்.

11. கள்ளன் கஜானாக் காவலன் ஆனால்,
கொள்ளை யடிப்பில் குறைவைப் பானோ? (வரிகள் - 68,69)

- நாகாஸ்திரப் படலத்தில்,/குடும்பத் தலைவரை நோக்கி அவரது சகோதரியின் மகன் எய்யும் நாகப்பாணம் இது. குடும்பத் தலைவர் வெறும் காவலர் தான். அவரது சொத்தைத் தொட அவருக்கே உரிமை யில்லை என்ற மருமக்கள் வழித் தாய முறைச் சட்டத்தை அவன் நினைவூட்டுகிறான்.

12. காரணத் தீனம் கடிய தீனம்;
கண்டூ ரத்தில் மருந்து கருத்தாய்க்
கொடுத்தா லன்றிக் குணமா காது. (வரிகள் - 79-81)

- இது கவிக் கூற்று. கதைத் தலைவியின் வாய் மொழியாக வருவது. மருமக்கள் வழித்தாய முறை காரணமாகக் காரணவர் அனுபவிக்கும் துன்பங்களை நோயாக உருவகித்துக் கூறும் கூற்று இது. தீனம் என்றால் நோய் என்று பொருள்.

13. குடும்பச் செலவுகள் கூறி முடியமோ?
ஒன்றா? இரண்டா? ஒன்பதா? பத்தா? (வரிகள் - 20,21)

- கருடாஸ்திரப் படலத்தில்/செலவுகளுக்குக் கணக்கு கேட்கும் குடும்பத் தலைவரது சகோதரியின் மகனது கேள்விக்குக் குடும்பத் தலைவர் கூறும் பதில் இது.

14. ஏழு வருஷமாய் இங்கிலீஷ் படித்தாயே,
ஏ,பி,எஸ்.டி, எழுதத் தெரியுமா?
எத்தனை பணத்தை வாரி யெறிந்தேன் (வரிகள் - 111-113)

- கருடாஸ்திரப் படலத்தில்/சகோதரியின் மகனைப் படிக்க வைத்த குடும்பத் தலைவர் அவன் நன்கு படிக்காததைச் சுட்டிக் காட்டிக் கேட்கும் கேள்வி இது.

15. ஒருகண் வெண்ணெயும் ஒருகண் நீறும்
வைப்பதும் உனக்கு வழக்கம் தான். அடா! (வரிகள் : 65,66)

- வாழ்த்துப் படலத்தில், குடும்பத் தலைவரை நோக்கி, அவரது சகோதரியின் கணவன் இங்ஙனம் வசை பாடுகிறான். குடும்பத் தலைவர் பாரபட்சமாக நடந்து கொள்கிறார் என்பது இங்கு அவன் கூறும் குற்றச்சாட்டு.

16. கணவரோ,
வைய வைய வைரக் கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக் கல்லும்
ஆகி யிருந்தனர்..... (வரிகள் - 147-150)

- வாழ்த்துப் படலத்தில்/குடும்பத் தலைவரது சகோதரியின் கணவர் அவரை நோக்கி வசை மாறி பொழிகிறான். கையால் ஆகாத குடும்பத் தலைவர், மௌனமாக இருப்பதைக் கதைத் தலைவி இங்ஙனம் குறிப்பிடுகிறார்.

17. வியாச்சிய மென்னும் சுழியில் விழுந்து
கறகற வென்று கறங்கி மயங்கி,
கைப்பொருள் இழந்து கடனும் வாங்கி
வீணாய்த் துன்பம் விளைத்திட வேண்டாம்! (வரிகள் - 120-123)

- கோடேறிக் குடிமுடித்த படலத்தில்/மருமக்கள் வழித்தாய முறை காரணமாக வழக்குகள் மலிந்து கிடக்கும் சமுதாயத்தை நோக்கி கவிஞர் கூறும் கூற்று இது. கதைத் தலைவியின் வாய் மொழியாக வருகிறது.

18. புத்தியில் லாஇரு பூனைகள் பண்டு
வானரத் திடம்போய் வழக்குச் சொல்லி
உள்ளதும் இழந்துவே றுணவும் இன்றி
வெறுங்கை யாகி வெட்கி மீண்டதாய்
நாம்,
பள்ளியில் பாடம் படிக்க வில்லையோ? (வரிகள் - 140-144)

- கோடேறிக் குடிமுடித்த படலத்தில்./மருமக்கள் வழித் தாய முறை காரணமாக வழக்குகள் மலிந்து கிடக்கும் சமுதாயத்தில். நீதி மன்றம் ஏறும் இருவருக்குமே இழப்புத்தான் மிச்சம் என்பதைப் பஞ்ச தந்திரக் கதை மூலம் கவிஞர் விளக்கி நிற்கிறார். இது கதைத் தலைவியின் கூற்றாக வருகிறது.

19. கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்!
குதித்துக் குடியைக் கெடுத்திட வேண்டாம்! (வரிகள் - 272,273)

- மேற்கூரிய விளக்கம் இதற்கும் பொருந்தும். .....இருவருக்குமே இழப்புத்தான் என்பதைக் கவிஞர் விளக்கி நிற்கிறார்.

20. எழுதப் பீஸு சொல்லப் பீஸு
எழுதிய தாளை எடுக்கப் பீஸு
நிற்கப் பீஸு இருக்கப் பீஸு
நீட்டின கையை மடக்கப் பீஸு (வரிகள் - 299-302)

- கோடேறிக் குடிமுடித்த படலத்தில்./நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முற்படுவோரிடம். வழக்கறிஞர்கள் வாங்கும் கட்டண வகைகளை எள்ளல் சுவையோடு கதைத் தலைவி இங்கு ஏளனம் செய்கிறாள்.

21. ஒடும் குதிரைக்கு உச்சியில் கொம்புகள்
ஒன்றா? இரண்டா? உடன் சொல்லும் (வரிகள் - 342,343)

- கோடேறிக் குடிமுடித்த படலத்தில். நீதிமன்றத்தில் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் வழக்கறிஞர்களையும். அவர் கேட்கும் அபத்தமான கேள்விகளையும் கவிஞர் அங்கதப் பாணியில் ஏளனம் செய்கிறார். இது கதைத் தலைவியின் கூற்றாக வருகிறது.

22. மருமக் கள்வழி வழங்கும்இந் நாட்டில்
வீடுவீ டாயொரு கோடிருந் தாலும்.
வழக்குகட்கு ஓய்வு வருமோ? ஐயா? (வரிகள் - 401-403)

- கோடேறிக் குடிமுடித்த படலத்தில். மருமக்கள் வழித் தாய முறை தோற்றுவித்த சிக்கல்களால் தோன்றும் வழக்குகளின் மிகையைச் சோகம் கலந்த குரலில் கதைத் தலைவி முன்வைக்கிறாள்.

23. கோர்ட்டு வாசல் குடியிருப் பாச்சு!
மாதாந் தங்கள் மறந்தே போச்சு.
வக்கீ வாபீஸ் வாழிடம் ஆச்சு! (வரிகள் - 488-490)

- கோடேறிக் குடிமுடித்த படலத்தில்./மேற்கூறிய விளக்கம் இதற்கும் பொருந்தும்.

24. குறத்திசொன்ன குறியெல்லாம்
குறிதவறிப் போச்சே!
கோடங்கி குறியாலும்
குணமில்லா தாச்சே! (வரிகள், தாழிசை - 3)

- கோடேறிக் குடிமுடித்த படலத்தில்/நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கு வெற்றி பெற வேண்டும் என்று குறத்தியை அழைத்துப் பார்த்த குறி தவறி விட்டதை எண்ணிக் கதைத் தலைவி வருந்திக் கூறுகிறாள்.

25. காயம் மணக்குமோ? காஞ்சிரம் இனிக்குமோ?
இயற்கையை மாற்ற யாரால் முடியும்? (வரிகள் - 116,117)

- யாத்திரைப் படலத்தில், நீதி மன்றத்தில் வழக்கு நடத்தி எல்லாவற்றையும் இழந்து நின்ற குடும்பத்தின் சோகத்தைக் கதைத் தலைவி இங்ஙனம் வருந்திக் கூறுகிறாள். வழக்கு நடத்தினால் துன்பமே மிஞ்சும். இனிமை வராது என்பதை இங்ஙனம் விளக்குகிறாள்.

26. அப்பனைப் பிள்ளை அண்டவொட் டாவழி
பிள்ளையை அப்பன் பேணவொட் டாவழி (வரிகள் - 17,18)

- கும்பியெரிச்சல் படலத்தில்/மருமக்கள் வழி தாய முறையினால் உருவாகும் குடும்பச் சூழல், சமுதாயச் சூழல் ஆகியவற்றைக் கதைத் தலைவி இங்ஙனம் கடுமையாக விமர்சனம் செய்கிறாள். தீராத வழக்கும், ஜென்மப் பகையும்தான் மிஞ்சும் என்பதைக் கதைத் தலைவி இங்கு எடுத்துரைக்கிறாள்.

27. நடைப்பிணம் ஆயிரம் நடக்கும் வனவழி
வெவ்வழி, சற்றும் வெளிச்ச மிலாவழி
இருள்வழி செல்பவர் இடறும் கல்வழி (வரிகள் - 32,34)

- மேற்கூறி விளக்கம் இதற்கும் பொருந்தும்.

28. ஆடுகள் மாடுகட்கு ஆகும் இவ்வழி
மனிதர் செல்லும் வழியா யிடுமோ? (வரிகள் - 89,90)

- மேற்கூறிய விளக்கம் இதற்கும் பொருந்தும்.

29. நீதியும் உளதோ! நீதியும் உளதோ!
மாதர் கண்ணீர் மாறா நிலத்தில்
நீதியும் உளதோ! நீதியும் உளதோ! (வரிகள் - 99-101)

- மேற்கூறிய விளக்கம் இதற்கும் பொருந்தும்.